
www.tamilarangam.net

# சுவடுகள்



1989 1990 1991 1992 1993 1994

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கண்ணீர் சிந்து

**அரபியில்:** டாக்டர் அத்னன் அல் நாஹ்வி
**தமிழில்:** அ.ஜ.கான்

ஓ போஸ்னியா
இதயம் கிழிந்து கண்ணீர் விடுகிறாய்....
உன் கண்ணீர் கொட்டட்டும்
தீக்கொழுந்துகளாக....

விடுதலையும் நேர்மையும் உள்ள எந்தவொரு
மனிதனும்
அந்நிலம் பற்றியெரிய
தன் விலா எலும்புகளை வீசியிருப்பான்....
இல்லையென்றால்... இரத்தம்
சிந்தியிருப்பான்....
இல்லையென்றால்... இருளைக்
கிழித்திருப்பான்.
தன் பயண விளக்கால்....
அல்லது....வசந்தத்தை வாழ்த்த
பெருந்தன்மையைக் கொண்டுவந்திருப்பான்....

ஓ போஸ்னியா!
இரத்தம் காய்ந்து போயிருந்தால்....
உன் கண்ணீரை உகுத்துவிடு....
அச்சந்தங்களையாவது எதிரொலிக்கட்டும்....

ஓ போஸ்னியா!
காரிருள் இரவுகளில்
கண்ணீரை சிந்து எரியும் தீப்பந்தங்களாக
எங்கள் பாதைகள்...... வழிகள்...... மலைகள்
வெளிச்சமாகட்டும்

ஓ போஸ்னியா!
உன் அவமானத்திற்குக் காரணமாகாமல்
கண்ணீரைக் கொட்டு!

உன் கண்ணீர பொழியட்டும் ஆபரணங்கள்
போல
முத்துக்கள் வைரங்கள் கரையும்
மெழுவரத்திகளைப் போல....

கருத்த இரவுகளின் போது
சாலைகளில்.... பாதைகளின் மேல்.... கண்ணீர்
சிந்து....
எங்கள் இதயங்களைப் பற்றவை....
நெஞ்சுக்குள்ளும் விலா எலும்புக்குள்ளும்
தீயேற்று.
ஓ எத்தனை பாதை தவறிய இதயங்கள்
அங்கே....
காரிருளில் அவர்கள்....கடும் காரிருள்
இரவுகளில்
வெளிச்சத்தை இழந்தனர்....
அச்சத்தில் உறைந்து போயினர்....

ஓபோஸ்னியா
அவ்விதயங்கள் அசைவற்றுப் போயின...
இப்படித்தான் உறக்கத்தில் வீழ்ந்தன.

இரவுகள் வெகுவேகமாக கழிகின்றன
இன்றும்....
கனவுகளின் மிச்சங்கள் கண் இமைகளில்
தஞ்சமாகிறது....
மெல்ல மெல்ல அமைதியாக கண்கள்
மூடியவாறு
சத்தமற்ற இரவுகளில் முணுமுணுத்தவர்கள்
இறந்து போக
இரகசியப் பேச்சொன்று விடை
கொடுத்தனுப்பும் அவர்களுக்கு.

www.tamilarangam.net

ஒரு அபிப்பிராயம்:

# சோனியாவின் இந்தியாவும்

## எட்டாவது தமிழாராய்ச்சி மாநாடும்

நம்பமுடியவில்லைத்தான். ஆனாலும் உண்மை அதுவாகத்தானே இருக்கிறது. பாரம்பரியமும் வரலாறும் பெருமையும் கொண்ட இந்திய தேசத்தின் ஆட்சி ஒரு "இத்தாலிய அழகி"யின் (காங்கிரஸ்காரர்கள் அப்படித்தான் கருதுகிறார்களாம்: இண்டியா டுடே) சுட்டுவிரல் அசைவில் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறது. இந்தப் பெண் முகம் சுழித்தால் எங்கே தங்கள் அதிகாரம் பறிபோய்விடுமோ என்று இந்திய அரசியல்வாதிகள்அஞ்சுகின்றனர். அவரது மனம் நோகாமல் நடந்துகொள்வதில் போட்டிபோடுகின்றனர். அவரது ஒரு புன்சிரிப்பே தங்களை வாழவைக்கும் என்று நம்புகின்றனர். அவரைத் திருப்திப்படுத்துவதற்காக என்னென்னவெல்லாம் செய்யலாம் என்பதே இன்று இந்திய ஆளும்கட்சியின் பிரதான பிரச்சினையாகவுள்ளது.

இந்தப் பெண் சோனியா ஈழத்தமிழர்கள்மீது ஆறாத வஞ்சினம் கொண்டுள்ளவர். இவரை மகிழ்விப்பதற்காகவே உலகத் தமிழராய்ச்சி மகாநாட்டுக்காக வந்த தமிழீழ அறிஞர்களை இந்திய அரசு நாடுகடத்தி அவமானப்படுத்தியதாக கருதப்படுகிறது. சோனியாவுடன் இந்திய ஆளும் வர்க்கமே இந்தச் சம்பவத்தால் மிகவும் மகிழ்ந்துபோயிருக்கிறது. அமைதிப்படை என்ற காடையர் கூட்டம் ஈழத்தில் பட்ட அவமானத்தினால் நொந்திருந்த இவர்களுக்கு இந்தச் சம்பவம் ஆறுதலையளித்துள்ளது.

ஆனால் தஞ்சையில் தமிழாராய்ச்சி மகாநாடு நடாத்தப்பட்ட விதத்தை அறியும்போது அந்த மகாநாட்டில் எங்கள் தேசத்து அறிஞர்கள் பங்குபற்றியிருந்தால் உண்மையால் அதுவே பெரும் அவமானமாக இருந்திருக்கும். சினிமா நடிகை ஜெயலலிதாவின் புகழ்பாட ஒரு உலகத் தமிழாராயச்சி மகாநாடு நடாத்தப்பட்ட கேவலத்தை எப்படி தமிழகத் தமிழர்கள் சகித்துக்கொள்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியம்.

உலகத் தமிழாராயச்சி மகாநாட்டுச் சின்னத்தில் இலங்கையை நீக்கி எங்களைப் புறக்கணித்துவிட்டார்களாம்! இந்தச் சினிமாக்காரர்களின் கோமாளித்தனத்தை நினைக்க சிரிப்புத்தான் வருகிறது. ஆனாலும் ஒருவகையில் ஜெயலலிதாவுக்கு நன்றி சொல்லலாம். இந்தவகையில் தான் நடாத்தும் "தமிழாராய்ச்சி(?) மகாநாடு" இலங்கையில் வாழும் ஈழத்தமிழருக்குப் பொருத்தமற்றது என்று அவர்

www.tamilarangam.net

அறிந்திருக்கிறார் என்றும் சொல்லலாம். தமிழாராய்ச்சி மகாநாட்டின் ஸ்தாபகர்களில் முக்கிமானவரான எங்கள் தனிநாயக அடிகளார் இன்று உயிரோடிருந்து இந்த மகாநாட்டில் கலந்துகொண்டு தமிழகத் தமிழரின் தமிழ்த்தாய் ஜெயலலிதாதான் என்று அறிய நேர்ந்து தமிழுக்கு ஏற்பட்ட அவமானம் கண்டு நெஞ்சு வெடித்து இறந்துபோகாமல் எற்கனவே இயற்கையாய் மரணித்துப்போனது அவரது அதிர்ஸ்டமே.

ஆனால் எங்களை உண்மையில் அவமானப்படுத்தியது தமிழராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொண்ட சில ஈழத் தமிழர்களே. இந்தியா இவ்வாறு தமிழீழ அறிஞர்களை நாடுகடத்தியபோது தமிழீழ மக்களின் பிரதிநிதிகள் என்று தங்களைச் சொல்லிக்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெயலலிதாவின் மகாநாட்டில் கலந்துகொண்டு ஈழத்தமிழர்களை தலைகுனிய வைத்துள்ளனர். "எங்கள் மண்ணுக்கு நேர்ந்த அவமதிப்பு இது" என்று கூறி அவர்களும் அந்த மகாநாட்டை புறக்கணித்திருந்தால் எங்களை அவமதிக்க நினைத்த இந்தியாவின் ஜெயலலிதாவின் முகத்தில் கரியைப் பூசியிருக்கலாம். ஆனால் இது கனவில் மட்டுமே சாத்தியம் என்பதை கூட்டணியினர் தங்கள் வரலாற்றில் பலமுறை நிருபித்துள்ளனர்.

கூடவே இன்னொரு கனவு. தமிழறிஞர் பீட்டர் சால்க்கை நாடு கடத்தியதை கண்டித்து சுவீடன் அரசு இந்திய அரசிடம் விளக்கம் கேட்டுள்ளது போலவே தமிழீழத்தவர்களை நாடுகடத்தியதைக் கண்டித்து இந்திய அரசிடம் விளக்கங்கேட்க நமக்கும் ஒரு அரசு வேண்டும். அரசு இருப்பதற்கு ஒரு நாடும் வேண்டுமல்லவா? இலங்கை அரசுக்கு இத்தகைய விசாலமான மனப்பாங்கு இருந்திருந்தால் வரலாறு எப்படியெல்லாம் இருந்திருக்கும்! சிங்களப் பத்திரிகைகளுக்கு பெருமகிழச்சி. இருக்காதா? தமிழர்கள் இந்தியாவை நம்பிய காலம்போய் சிங்களப் பேரினவாதிகள் இந்தியாவை நம்பியிருக்க ஆரம்பித்துள்ளார்கள். தங்கள் இராணுவத்தில் பெருமளவு நம்பிக்கையில்லை; எனவே கடைசி நேரத்தில் இந்தியா தலையிட்டு தமிழருக்கு ஒரு நாடு கிடைத்துவிடாது செய்துவிடும் என்பதில் சிங்களப் பேரினவாதிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர். நாங்கள் நம்பிக் கெட்டோம். இந்தியாவைப் புரிந்துகொள்வதற்கு ஏழாயிரம் பேரை காவு கொடுக்க வேண்டியதாயிற்று. இப்போது அவர்களின் முறை. வரலாற்றிலிருந்து யார்தான் கற்றிருக்கிறார்கள்?

தமிழீழவராகிய எமக்கு அமைந்த பெரிய துரதிர்ஸ்டம் என்ன வென்றால் இந்தியாவின் அயல்நாடாக நாம் இருப்பதுதான் என்று எண்ணத் தோன்றுகிறது.

**ஒரு தமிழன்**

www.tamilarangam.net

*"இன்றைய இலங்கை மக்கள் ஒரு ஜனநாயக மயமாக்கலுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளார்கள். சமூகநலக் கொள்கைகளுக்கு ஆதரவைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுடன் ஒரு திறந்த பொருளாதாரக் கொள்கை என்பதே இன்றைய நிலை. இது ஒரு புதிய நிலையாகும்." - சமுத்திரன்*

நோர்வேயில் வசித்து வரும் பேராசிரியர் ந.சண்முகரத்தினம் (சமுத்திரன்) 1994 பிற்பகுதியில் இலங்கை சென்று திரும்பினார். ஏறத்தாழ மூன்று மாதங்கள் அங்கு தங்கியிருந்த அவர் இந்தச் சந்திப்பில் தற்போது அங்கு ஏற்பட்டு வரும் அரசியல் மாற்றங்கள் பற்றிய தனது அபிப்பிராயங்களைத் தெரிவித்தார்.

# தாயகத்திற்கு ஒரு மீள்பயணம்

## இலங்கை சென்று திரும்பிய சமுத்திரனுடன் ஒரு சந்திப்பு

இந்தப் பயணம் எந்த வகைப்பட்டது என்பதைச் சிறிது கூறுவீர்களா?

*இந்தப் பயணம் செப்டம்பர் நடுப்பகுதியில் இருந்து டிசம்பர் முற்பகுதி வரை நீடித்தது. என்னைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாற்ற அழைத்திருந்தார்கள். அத்துடன் நோர்வேஜிய அரசின் அபிவிருத்திக்கான பிரிவு (நோராட்), கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தின் விவசாயப் பீடம் பற்றிய அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் என்னைக் கேட்டது. இந்தக் காரணங்களால் நான் அங்கு சென்றிருந்தேன்.*

*பொதுத் தேர்தல் முடிந்திருந்த நிலையில் அங்கு சென்ற நான், ஜனாதிபதித் தேர்தல் நிகழ்ந்ததையும் அங்கிருந்து அவதானிக்க முடிந்தது. அரசியல் ரீதியாக மிகவும் முக்கியமான காலகட்டம் இது எனக் கருதுகிறேன். கடந்த 45 வருட காலத்தில் முதன்முறையாக தேசிய இனப் பிரச்சனைக்கு ஒரு அரசியற் தீர்வு வேண்டும் எனும் நிலைப்பாட்டில் ஒரு முன்னணி ஆட்சியைக் கைப்பற்றியது இந்தத் தடவைதான். அதேபோல் யுத்தத்திற்கும், இனப் பிரச்சனைக்கும் ஒரு அமைதியான தீர்வு எனக் கூறி ஒரு ஜனாதிபதி பதவிக்கு வந்ததும் இப்போதுதான் முதற் தடவையாக நிகழ்ந்திருக்கிறது.*

*நீங்கள் வடபகுதிக்குச் சென்றிருந்தீர்களா?*

வடபகுதிக்குச் செல்ல எனக்கு அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது. யாழ் பல்கலைக்கழக, கிளிநொச்சி விவசாயப் பீடாதிபதி எனக்கு அங்கு வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால் எட்டு வாரங்கள் பேராதனையில் விரிவுரையாற்ற வேண்டிய நிலையில் இருந்ததால் நேரம் கிடையாது போக முடியவில்லை. ஒரு வாரத்துக்கு மேல் கிழக்குப்

www.tamilarangam.net

பல்கலைக்கழகத்தில் நின்று சில வேலைகளைச் செய்ய வேண்டியும் இருந்ததால், எனக்கு வடக்குக்குச் செல்ல விருப்பம் இருந்தும் போக முடியவில்லை.

*நீங்கள் அங்கு செல்லுமுன் உங்களுக்கு இருந்த எதிர்பார்ப்புக்கும், அங்கு நீங்கள் போய்ச் சேர்ந்த பிறகு அவதானித்த விடயங்களுக்கும் ஏதாவது வேறுபாடுகள் இருந்தனவா? அப்படி இருந்தனவாயின் என்ன வேறுபாடுகள் இருந்தன.*

ஓரளவு அங்கிருக்கக்கூடிய நிலைமைகளை ஏற்கனவே நான் சில அனுமானங்களைக் கொண்டிருந்தேன். நண்பர்கள் மூலமும், பத்திரிகைச் செய்திகள் மூலமும் இது சாத்தியப்பட்டது. தெற்கில் மாகாணசபைகளின் தேர்தல் நிகழ்ந்த போதே என்னால் சில விடயங்களை ஊகிக்க முடிந்தது. வடக்கில் மக்களைப் பாதிக்கும் இந்த யுத்தம் - இது தெற்கில் சிங்கள மக்களையும் பாதிக்கிறது - நிறுத்தப்பட வேண்டும்; ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி மாற்றப்பட வேண்டும் என்ற போக்குகள் சிங்கள மக்கள் மத்தியில் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. தமிழ் மக்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகள் சிங்கள மக்கள் மத்தியில் பரவலாக ஆதரவு பெறுவதை நான் ஊகித்திருந்தேன்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பும் பின்பும் ஏற்பட்டுள்ள உற்சாக நிலைமை, சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் பரஸ்பரம் ஏற்பட்டுள்ள புதிய உறவுநிலை, கலந்துரையாடல்கள் என்பன புதியன. கிராமப்புற, வறிய மக்கள் தாங்களே யுத்தத்தால் சகல இழப்பையும் சந்திப்பதையும், மறுபுறத்தில் அரச சார்பான ராணுவ உயர்மட்டத்தினர் யுத்தத்தால் லாபம் பெறுவதையும் உணர்ந்திருக்கிறார்கள். பொதுவாக சிங்கள மக்கள் மத்தியில் யுத்தம் ஏற்படுத்திய பாதகமான விளைவுகள் பற்றிய பரந்த அறிவு பெருகியுள்ளது.

பொருளாதார ரீதியில் ஐதேக ஆட்சி சில முன்னேற்றங்களைக் கண்டிருந்தாலும், பொதுமக்களுக்கு அது பெரிய முன்னேற்றத்தைத் தரவில்லை. 1987க்குப் பிந்திய காலப் பகுதியில் சிங்களப் பகுதிகளில் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் ஏராளம் சிங்கள மக்களைப் பலியெடுத்திருக்கிறது; பலர் காணாமற் போயுள்ளனர். இவைகளால் ஐதேக அரசை எப்படியாவது தூக்கியெறிய வேண்டுமென்ற எண்ணம் சிங்கள மக்கள் மத்தியில் வலுப்பெற்றிருந்தது.

*இவை பொதுமக்கள்* ஐக்கிய முன்னணிக்கு ஏற்பட்ட சாதகமான நிலைகள். இவை பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் ஏற்படுத்தப்பட்ட நிலைமைகள் அல்ல; ஐக்கிய தேசியக் கட்சியின் போக்குகளால் ஏற்பட்ட மக்கள் வெறுப்பை இக் கூட்டணி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தியது. மக்களின் விருப்பைச் சந்திரிகா சரியாகப் பிரதிபலித்தது அவர்களது வெற்றிக்குக் காரணம்.

*இந்த நிலையைப் பேரினவாதத்தின் தோல்வி எனக் கொள்ளலாமா?*

மக்கள் மத்தியில் ஐதேகவை நிராகரிக்க இருந்த பல காரணங்களில் ஒன்று யுத்தம். அந்த யுத்தத்தை நிராகரிப்பதால் மக்கள் இனப் பிரச்சனைக்கான தீர்வு ஒன்று தேவை என்பதையும் ஏற்றுக் கொள்கிறார்கள். அவ்வகையில் சிங்களப் பேரினவாதத்திற்கு இது ஒரு பலத்த அடி எனக் கருதுகிறேன். அதேவேளை கடந்த 35 வருடங்களாக சிங்கள இனவாதம் ஸ்தாபனமயப் படுத்தப் பட்டுள்ளது. சிங்கள இனவாதம் முற்றாக அழிந்து விடவில்லை. அது மீண்டும் தலைதூக்கா வண்ணம் பார்த்துக்கொள்ளல் அவசியம். திரும்பவும்

www.tamilarangam.net

பழைய நிலை ஏற்படாது தடுப்பது இந்த அரசாங்கம் இனப் பிரச்சனைக்கான நியாயமான தீர்வை ஏற்படுத்துவதிலும், அதை விடுதலைப் புலிகள் ஏற்பதிலும்தான் தங்கியுள்ளது.

*இன்றுவரை சிங்களக் கட்சிகள் - சிறிலங்கா சுதந்திரக் கட்சியாயினும் சரி, ஐக்கிய தேசியக் கட்சியாயினும் சரி, இனவாதக் கட்சிகளாகவே இருந்து வந்துள்ளன. இந்நிலையில் சி.சு.கட்சியைப் பிரதானமானதாகக் கொண்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியால் ஒரு சரியான சமாதானத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியும் என நீங்கள் கருதுகிறீர்களா?*

முடியுமென்று நான் நம்புகிறேன்; அதற்கான சாத்தியப்பாடுகளைக் கருத்திற் கொண்டு. இரு பெரிய கட்சிகளும் இனவாதக் கட்சிகள் என்பது உண்மைதான், ஆனால் இன்று பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன், வெளிக் கட்சிகள் பல இணைந்துதான் இந்தக் கூட்டணி உருவாகியுள்ளது. அதேவேளை முன்னணியின் தலைவராக உள்ள சந்திரிகா, இதற்கு முன் குறிப்பிட்ட காலம் வேறு கட்சிகளில் இருந்து அரசியலில் ஈடுபட்ட பின்னர், மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து தலைமைப் பதவியைப் பெற்றவர். இம்முன்னணியில் இனவாத சக்திகள் அல்லாதோர் தற்போது கணிசமாக உள்ளனர். இனவாத சக்திகளை விட, இனப் பிரச்சனைக்குத் தீர்வு வேண்டும் என்று கருதுபவர்கள் அங்கு பலம் வாய்ந்தவர்களாக உள்ளனர். இவர்கள் எல்லோரும் சிங்கள தேசியவாதத்தை நிராகரிப்பவர்கள் என்றும் சொல்ல முடியாது. இனப் பிரச்சனைக்கு ஒரு தீர்வு தேவை என்ற நிலைப்பாட்டுக்கு இவர்கள் வந்துள்ளனர். தமிழ் மக்களது உரிமைகளை அங்கீகரிக்காதவர்களும், அவ்வாறு எண்ண நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளனர். சிங்கள பௌத்த மக்களுக்குப் பாதிப்பற்ற வகையில் தமிழ் மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவோர்

---

## வரவேற்பு

கனிவண்ணன்

நண்பனே வருக நலமா?
காயங்கள் ஆறினவோ?
இதயத்திலும்.....

திரும்பி வந்தாய் தலை
குனிந்தபடியே
மணமகளைப் போல
அலங்கார பொம்மை ராஜாக்கள் சூழ

எதற்குப் போனோம்
எதற்கு மடிந்தோம்
என்றறி யாமலேயே
ஏவல் நாய்களாய் எகிறிப் போனாய்

ரத்த வாடையும் மாமிச அழுக்கும்
மேனியில் வீச
எலும்புத் தண்டு ஊன்றி
திரும்பி வந்தாய்....
சமாதானப் பூக்கள் கறுப்பு நிறத்தில்.....

வரவேற்க ஆளில்லையே என்ற
வருத்தம் வேண்டாம்.
இனியாவது
புறப்படுமுன் கேள் -
எங்கே?
ஏன்?
யார் ஆணையில்?

---

www.tamilarangam.net

இருக்கிறார்கள். வேறு சிலர் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிரா விட்டாலும், பலம் பெற்றுள்ள சக்திகளின் பின்னால் அணிதிரள்கிறார்கள்.

இந்தக் காரணங்களால் முன்னணிக்குள் சிங்கள இனவாத சக்திகள் பலம் குறைந்துள்ளன. முற்றாக இல்லாமற் போய்விட்டதாக நம்பமுடியாது. எனது அபிப்பிராயத்தில் கடந்த தேர்தலில் தீவிர சிங்கள இனவாதிகள் ஐதேக ஆதரவாளர்களாக மாறினார்கள் என்றே நம்புகிறேன். ஐதேகவிடம்தான் தற்போது மிக மோசமான இனவாதிகள் சேர்ந்திருக்கிறார்கள். இனப் பிரச்சனைக்கு அமைதியான தீர்வு காணப்படும் என்று கூறித்தான் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வெற்றி பெற்றார் என்பதையும் மறக்க முடியாது.

*சிங்கள தேசியத்தைப் பிரதிபலிக்கும் சந்திரிகாவிடமோ, தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் விடுதலைப் புலிகளிடமோ இனப் பிரச்சனைக்கான தீர்வுத் திட்டமெதுவும் தெளிவாக இல்லை. முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முஸ்லிம் கொங்கிரசிடமும் அது இல்லை. வடபகுதியில் முஸ்லிம்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது. இந்நிலையில் எப்படி வெறுமனே பேச்சுவார்த்தையை நடத்திக் கொண்டிருக்க முடியும்?*

இலங்கையின் தேசிய இனப் பிரச்சனைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு இந்த மூன்று பகுதியினரும் ஒரு நியாயமான சமரசத் தீர்வுக்கு வருவது அவசியம். தீர்வுக்கான ஒரு சரியான திட்டம் இன்றியே பேச்சுகள் ஆரம்பித்தது என்பது உண்மையே. பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குத் தேர்தல் மூலம் மக்கள் வழங்கிய கட்டளை யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவது, ஜனநாயகத்தை மீளக் கொணர்வது, தேசிய இனப்பிரச்சனைக்கு நியாயமான தீர்வு ஒன்றைக் காண்பது போன்றன. ஆனால் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் தேர்தலுக்கு முன் இனப் பிரச்சனைக்கும், இலங்கையின் பொருளாதார மாற்றங்களுக்குமான திட்டங்களோ எந்தவித ஆயத்தங்களோ இருக்கவில்லை. இனப் பிரச்சனை தொடர்பான பேச்சுகள்



ஆரம்பிக்கும் போதே இனப் பிரச்சனையின் தீர்வுக்கான வேலைத் திட்டங்களும் ஆரம்பித்தன எனச் சொல்லலாம். ஆனால் இன்று விடுதலைப் புலிகளிடமும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடமும் *ஒரு தீர்வுத் திட்டத்துக்கான தயாரிப்புகள் ஆரம்பித்திருப்பது போல் தெரிகிறது. மூன்றாவது* பகுதியான, முஸ்லிம் மக்களின் பிரதிநிதி எனக் கணிக்கப்படும் முஸ்லிம் கொங்கிரசின் பங்குபற்றல் இன்னும் நிகழவில்லை. அவர்களது பங்குபற்றலும்

www.tamilarangam.net

ஒரு கட்டத்தில் அவசியம். அவர்களது சம்மதமின்றி ஒரு நியாயமான தீர்வைப் பெறுவதோ நடைமுறைப் படுத்துவதோ சாத்தியமில்லை.

அரசாங்கத்தைப் பொறுத்தவரை பண்டாரநாயகா - செல்வநாயகம் ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொள்வது தெரிகிறது. அதே நேரம் சமஷ்டி என்ற சொல் - முன்பு விரும்பப்படாத ஒரு சொல்லாக இருந்தது - இன்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஒரு சொல்லாக உள்ளது. சிங்கள மக்கள் இதனைத் தீர்வுக்கான ஒரு சொல்லாகப் பார்க்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரை இரு அரசுகள் - ஒரு அரசியலமைப்பு - ஒரு நாடு - என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இது பழைய சோவியத் யூனியனின் அரசியலமைப்பை ஒத்தது.

*பேச்சுகளில் ஒரு பொது அடிப்படை உருவாகும் வாய்ப்புகள் தென்படுகின்றன. ஆயினும் இன்னும் தெளிவில்லை. இரு பகுதியினரது கோரிக்கைகளுக்கும் இடையே எங்கு* சமரசம் ஏற்படப் போகிறது என்பதுதான் கேள்வி. இதில் முஸ்லிம் மக்களின் பங்கும் அவசியம். அந்தப் பங்குபற்றல் இல்லாமல் எந்தத் தீர்வும் நடைமுறைக்கு வரமுடியாது.

*இனப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பது என்ற தனது நிலைப்பாட்டில் சந்திரிகா எவ்வளவு தூரம் உறுதியாக நிற்பார்? இனப் பிரச்சனைக்குத் தீர்வு அவசியம் என்று கூறும் அவரே, பௌத்த சிங்களவரது உரிமைகள் பாதுகாக்கப்படும் என்றும் கூறியுள்ளாரே?*

இனப் பிரச்சனைக்குத் தீர்வு வருவதில் பல எதிர்ப்புகள் ஏற்படும் என்பது உண்மையே. சிங்கள மக்கள் ஒரு சமஷ்டித் தீர்வை ஏற்றுக் கொள்வர் என்றே நான் நம்புகிறேன். இந்த அரசாங்கம் சமஷ்டி

## மரணம் கலந்த வாழ்வு

வேலணையூர் நவமகன்

எதுவுமே
நேசங் கொண்டவையாக அல்ல
அலுத்துப் போயிற்று.

காற்று மழை வெய்யிலென்று
இயற்கைகள்கூட
இழுத்துப் போர்த்திவிடுகிறது
மரணப் போர்வையைத்தான்.

செதில்கள் கொட்டிய
தொட்டி மீனாய்
வாழ்க்கை.

வறண்டுபோன
மண்டை உச்சியில்
எண்ணெய் தோய்த்து
தோயத்தானும்
ஆசை மறந்துபோச்சு.

கணவனின் மீதான
மனைவியின் நேசத்தைக்கூட
பறித்துவிடுகிறது
குழந்தையின் பால்ப்பவுடர.

வாழ்க்கையின் ருசி
உப்புச் சப்பற்ற
ரொட்டித் துண்டாய்

வானத் தகடும்
வந்துவிழுமென்ற அச்சம்தான்
எவருமே
பூமியைத் தோண்டவில்லை.

முண்டுகொடுக்க
முடியுமென்ற நம்பிக்கையுடன்
வானத்தை எதிர்த்து
முஷ்டிகளை உயர்த்தியபடிக்கு
மரணம் கலப்படமான வாழ்வை
நகர்த்திக் கொண்டு.

www.tamilarangam.net

அமைப்பிலேயே ஒரு பல்லின நாடாக இலங்கை அமைதியாக வாழ முடியும் என்று எடுத்துக் கூறினால் அதைப் பெரும்பான்மையான சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்வர் என்று நம்புகிறேன். ஆனால் சிங்கள இனவாதிகள் இதை ஒரு பிரச்சனையாக்கலாம். இந்தச் சக்திகள் தீர்வை எதிர்க்கலாம்.

சந்திரிகாவின் வாயிலிருந்து அந்தக் குறிப்பிட்ட உரை, (சிங்கள பௌத்தத்தைப் பாதுகாப்பது பற்றி) வருமெனப் பலரும் எதிர்பார்த்திருக்கவில்லை. எனக்கும் அது ஏமாற்றத்தையே தந்தது. அது, ஒருவேளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்குள் இருந்த அழுத்தம் காரணமானதோ தெரியவில்லை. ஆனால் நாங்கள் இது எப்படிப் போகிறது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இதேவேளை, தமிழ் அரசியற் சக்திகளும் இந்த நிலைகளை எப்படி எதிர்கொள்ளலாம்; சிங்கள மக்கள் மத்தியில் உள்ள இனவாத சக்திகளை எப்படித் தோற்கடிக்கலாம் என்ற விடயங்களைக் கவனத்தில் எடுப்பது நல்லது. உதாரணமாக விடுதலைப் புலிகள் சிங்கள மக்கள் மத்தியில் நம்பிக்கையைப் பெற்று, அங்குள்ள இனவாதச் சக்திகளைத் *தனிமைப்படுத்த உதவலாம். இதைச் செய்தால் தீர்வுக்குச் சாதகமான நிலைகளே தோன்றும் என நம்புகிறேன். ஆனால் அவர்கள் அதைச் செய்வதாகத் தெரியவில்லை.*

(அடுத்த இதழில் முடியும்)

## பனியில் மொழி எழுதி

சோலைக்கிளி

உனக்காகவே கவிதை எழுதுகிறேன்.
எனது ஒவ்வொரு மூச்சையும் உனக்காகவே
விட்டு அதில் பூச்சூட்டிக் காட்டுகிறேன்.
பொதுவாகச் சொன்னால்;
எல்லாம் உனக்காகத்தான்.
மணல்களுக்கு உயிரேற்றி அவைகளுக்குக்
கண்வைத்து
நீ போகின்ற இடமெல்லாம் கவனிப்பது
நீராகி வந்து
நீ குளிக்கக் குளிரவது
எல்லாம்
எல்லாம்
எல்லாமேதான்.

நித்திரையில்
நான் எழும்பி நடப்பது
உனக்காகத்தான்.
வெயிலுக்குள் நான் முளைத்து
கன்னிகட்டிப் பூப்பது
நெருப்பில்
சீனி செய்வது
பனியில் மொழி எழுதி பத்திரிகை தயாரித்து
உன் செய்திகளை உலகு அறியப் பரப்புவது
அனைத்தும்;
ஆம்
உலகத்தைத் தூக்குவது
என் உள்ளங் கையுள்
அதைப் பொத்திக் காட்டுவது
நிலவை
அடைக்கு வைப்பது
அதன் குஞ்சுகளை
என் கவிதைக்குத் தீன் கொடுத்து
அது குளிர்ந்து கொழுக்க
செய்வதுகூட.

யார் அந்த நீ?

யாருமில்லை.

www.tamilarangam.net

# ஐரோப்பிய ஒன்றியமும் நோர்வேயும்

● சஞ்சயன்





ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதில்லை என்ற நோர்வேயின் முடிவு பல ஐரோப்பிய நாடுகளுக்கு ஏமாற்றத்தை வழங்கியுள்ள அதேவேளை ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும், நோர்வேயும் 'பொதுவான விதிகளி'ன் அடிப்படையில் எவ்வாறு செயலாற்றலாம் என விவாதித்து வருகின்றன. ஸ்பெயினும், போர்த்துக்கலும் நோர்வேயின் முடிவால் அதிருப்தியுற்றுள்ள அதேவேளை பிரான்ஸ் மீனவர்கள் நோர்வேயில் இருந்து இறக்குமதியாகும் மீனைத் தடுத்து நிறுத்தக் கோரி ஆர்ப்பாட்ட வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். நோர்வேயில் இருந்து கொண்டு செல்லப்பட்ட பல லட்சம் குறோணர்கள் பெறுமதியான மீன்கள் வீதிகளில் தூக்கி எறியப்பட்டு நாசம் செய்யப்பட்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான எதிர்ப்பணியினர் வெற்றி வெற்றதைத் தொடர்ந்து தற்போதும் எதிரும் புதிருமாக இருந்து வெவ்வேறு மாற்று ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றனர். ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மாற்றீடாக ஐரோப்பியப் பொருளாதாரக் கூட்டுழைப்பு ஒப்பந்தம் (EØS) விளங்குகின்ற போதும், எதிர்ப்பணியினரின் பிரதான கட்சிகளான மத்திய கட்சியும் (SP), சோசலிச இடதுசாரிக் கட்சியும் (SV) இவ்வொப்பந்தத்தில் கணிசமான திருத்தங்களைக் கோரியுள்ளதுடன் இவ்வொப்பந்த விதிமுறைகள் மக்களின் கருத்துக் கணிப்பிற்கு விடப்பட வேண்டும் எனக் கோரியுள்ளன. இதில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது என்னவெனில் ஐரோப்பிய ஒன்றியப் பிரச்சாரம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்த பொழுது எதிரணியினரும், ஆதரவு அணியினரும் இந்த ஒப்பந்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தியமையாகும். ஆதரவு அணியினர் ஒப்பநத்ம் நடைமுறை ரீதியில் வலுவற்றது எனவும் ஒப்பீட்டு ரீதியில் பாதகமான அம்சங்களையே கொண்டுள்ளது எனவும் கூறினர். எதிரணியினரோ ஒப்பந்தம், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நிகரான சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளது எனப் பிரச்சாரம் செய்தனர். இன்று இருவரும் தத்தமது நிலைகளை மாற்றிக் கொண்டு தொடர்ந்து முரண்படுகின்றனர்.

1994 ஆரம்பம் முதலே ஐரோப்பிய பொருளாதாரக் கூட்டுழைப்பு ஒப்பந்தத்தை (EØS) நடைமுறைப் படுத்துவதில் தொழிற்கட்சி அரசு தொடங்கியிருந்த

www.tamilarangam.net

போதிலும் தாமதம் காட்டியே வந்தது. தற்போது ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதில்லை என்ற மக்களின் முடிவு தெளிவான பின் இவ்வுடன்படிக்கையைத் தூசு தட்டி நடைமுறைப் படுத்தும் விஷயத்தில் துரிதமாகச் செயலாற்றி வருகிறது. இதற்கு எதிரணியினரில் கிறிஸ்தவ மக்கள் கட்சி, இடது கட்சி என்பனவற்றின் ஆதரவும் ஆளும் சிறுபான்மைத் தொழிற் கட்சிக்குக் கிடைத்துள்ளது.

மத்திய கட்சியின் (SP) புதிய வியூகம்

ஐரோப்பிய ஒன்றிய எதிர்ப்பு ராணி எனப் பலராலும் அழைக்கப்பட்ட மத்திய கட்சித் தலைவி அன்ன எங்ஙர் லா∴ன்ஸ்ரைன் (Anne Enger Lahnstein) பொதுசன வாக்கெடுப்பில் வெற்றி வெற்றதைத் தொடர்ந்து பொதுமக்கள் மத்தியிலும், தொடர்பு சாதனங்கள் மத்தியிலும் சர்ச்சைக்குரிய நபராகியுள்ளார். வலதுசாரிப் போக்கைக் கொண்டிருந்த கட்சியின் முன்னைய செயற்பாடுகள் அன்னவின் தலைமையேற்பை அடுத்து எதிர்ப்புறம் திரும்பின. பாராளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சியான தமது கட்சி இனிமேல் அரசாங்கத்தைப் பாதுகாக்கும் கட்சியாகச் செயற்படப் போவதில்லை என்றும் அடுத்த தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதே தமது நோக்கம் என அறைகூவல் விடுத்துள்ளார்.

நாட்டின் வடபகுதிகளிலும், விவசாயிகள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் தனது தளங்களைக் கொண்டுள்ள இக்கட்சி ஏனைய பிரதேசங்களில் தனது நடவடிக்கைகளை வலுப்படுத்தி வருகிறது.

மத்திய கட்சியின் அபார வளர்ச்சிக்குக் காரணமாயிருந்த ஐரோப்பிய ஒன்றிய விடயம் போன்றே தற்போது அரசினால் விவாதிக்கப்படும் நகரம் - கிராமம் பிரச்சனையும். இதுவும் மத்திய கட்சிக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே கருதப்படுகிறது. பல சிறிய கிராமங்களை ஒன்றிணைப்பதன் மூலம் பெரிய கிராமங்களாக மாற்றி நகரங்களுக்கு நிகரான வசதிகளை அளிப்பது; இதுதான் அரசின் திட்டம். இதனூடாகப் பல கோடி பணத்தைச் சேமிக்கலாம் என அரசு கருதுகிறது. எனினும் நடைமுறையில் இதற்கு பரவலான ஆதரவு கிடையாது. குறிப்பாக மத்திய கட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமங்களின் பொருளாதாரமும் நிர்வாகமும் மிகச் சிறப்பாக இருப்பதாய்க் கோடிட்டுக் காட்டப் பட்டுள்ளது. தனிநபர் வருமானம் அதிகமாகவும் வேலையின்மை குறைவாகவும் சமூக உதவிக் கொடுப்பனவுகள் திருப்தியாகவும், சிறுவர் சிறுவர் கல்வி மற்றும் பராமரிப்பு நிலையங்கள் போதிய அளவிலும் சுற்றுப்புறச் சூழல் சிறப்பாகப் பராமரிக்கப் படுவதாயும் எல்லாவற்றுக்கும் மேலாக இந்த இடங்களின் நிதி வளங்கள் கணிசமானளவு திருப்தியுறக் கூடியதாகவும் உள்ளன (டாக்பிளாத பத்திரிகைத் தகவல்).

மத்திய கட்சியைப் பொறுத்தவரை சிறிய கிராங்களே அதன் அரசியல் ஆணிவேராக உள்ளது. இந்நிலையில் அரசின் திட்டத்தை எதிர்த்துப் போராடப் போவதாகக் கூறியுள்ளது. நாட்டில் உள்ள 600க்கு மேற்பட்ட மாநகரசபைகளில்/ கிராமங்களில் (Kommune) கணிசமானவை சிறிய கிராமங்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

சோசலிச இடதுசாரிக் கட்சியின் (SV) 'புதிய முகம்'

ஐரோப்பிய ஒன்றிய எதிர்ப்பணியில் முக்கிய பங்காற்றிய சோசலிச இடதுசாரிக் கட்சி தற்போது மிகவும் குழப்பத்தையே உண்டு பண்ணியுள்ளது. அண்மையில் அதன் தலைவர் எறிக் சூல்ஹெய்ம் (Eri Solheim) பாராளுமன்றத்தில் கூறியுள்ள கருத்தும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்காக அவர் கூறியுள்ள நிபந்தனைகளும் ஐரோப்பிய ஒன்றிய

www.tamilarangam.net

எதிர்ப்பாளர் மத்தியில் பரவலான அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன. 2000ம் ஆண்டளவில் மீளவும் நடக்கும் என எதிர்பார்க்கப்படும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவது பற்றிய சர்வசன வாக்கெடுப்பில் எறிக் சூல்ஹெய்மும் அவரது கட்சியும் ஆதரவு அணிக்குள் இடம் மாறிவிடுவர் என எதிர்பர்க்கப் படுகிறது. நோர்டிக் (வடபுல) நாடுகளைப் பொறுத்தவரை நோர்வே, ஐஸ்லாந்து தவிர ஏனைய நாடுகளின் சோசலிச ஜனநாயகவாதிகள் பலரும் ஐ.ஒ.க்கு ஆதரவாகவே உள்ளனர். இந்நிலையில் இத்தொற்று நோய் நோர்வேயிலும் இவர்களைப் பீடிக்குமா என்பது தொடர்ந்த காலங்களில் தெரிந்து விடும்.

தொழிற்கட்சியின் (AP) கண்ணாமூச்சி விளையாட்டு

நேரத்திற்கு ஒரு நிறம் காட்டும் பச்சோந்தி போன்றே தொழிற் கட்சியின் அண்மைக் காலச் செயற்பாடுகள் அமைந்துள்ளன. குறிப்பாக ஐ.ஒ. வாக்கெடுப்பின் பின் கட்சியின் நடவடிக்கைகள் கட்சி அங்கத்தவர்களுக்கே குழப்பத்தை உண்டுபண்ணுவதாகக் கூறப்படுகிறது. ஐ.ஒ.தொடர்பாகத் தொழிற்கட்சியின் கொள்கைக்கு விரோதமாகக் கட்சிக்குள் இருந்தபடியே செயலாற்றிய 'ஐ.ஒ.க்கு எதிரான சோசலிச ஜனநாயகவாதிகள்' (S.M.E) வாக்கெடுப்பு முடிந்தவுடன் தமது அமைப்பைக் கலைத்துள்ள போதிலும் கட்சித் தலைமைப் பீடம் இவர்கள் மீது ஆதரவுக் கரம் எதையும் நீட்டவில்லை. எஸ்எம்இயில் அங்கம் வகித்த ஒஸ்லோ நகர முதல்வர், தொழிற்கட்சி இளைஞரணித் தலைவர் உட்படக் கட்சியின் பல சிரேஷ்ட அங்கத்தவர்கள் ஓரங் க்கடடப்பட்டு வருகின்றனர். இவர்கள் பாரபட்சம் இன்றிக் கட்சியின் பதவிகளில் அமர்த்தப் படுவார்கள் என கட்சித் தலைமை அறிவித்த போதிலும் இற்றைவரை உட்கட்சி உறவுகள் திருப்திகரமாக இல்லை என்றே தெரிவிக்கப் படுகின்றது. அது மாத்திரமன்றி இவ்வாண்டு புரட்டாதியில் நிகழவுள்ள மாகாண, மாநகரத் தேர்களில் கட்சித் தலைமையுடன் மாறுபாடு கொண்டவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. தனிக்கட்சி என்ற ரீதியில் தொழிற் கட்சியே அதிக செல்வாக்கைக் கொண்டிருந்த போதிலும், நாட்டின் தலைவராக மக்களால் மிக அதிகமாக விரும்பப் படுபவர் கட்சித் தலைவி குறூ ஹாலம் புருண்ட்லாந் (Gro Harlem Brundtland) அவர்களே. கட்சியில் நிகழும் மாற்றங்கள் அடுத்த தேர்தலில் எத்தகைய மாற்றங்களைக் கொண்டுவரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.



www.tamilarangam.net

# சுவடுகள்

## விழிப்பாய் இருப்போம்

மிகக் குறுகிய காலத்தில் அரசியலின் உச்சாணிக்கு வந்தவர் சந்திரிகா. இவர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு மாற்று அரசியலை முன்வைத்ததாலேயே தன்னை மக்கள் மத்தியில் இனங்காட்ட முடிந்தது. ஆயினும் இவரது மாற்று அரசியல் மேலோட்டமானதே. சமாதானம், இனப் பிரச்சனைக்குத் தீர்வு, மீண்டும் இலங்கையில் ஜனநாயகச் சூழல் என்பன இவரது முன்னிறுத்தல்கள். இவரது கருத்துகளுக்குப் பெரும்பாலான வாக்காளர்கள் (தமிழ் முஸலிம் சிங்கள) வாக்களித்திருந்தனர். இதன் மூலம் ஒன்றுமட்டும் தெளிவாகத் தெரிந்தது; சந்திரிகா உண்மையில் அமைதி, ஜனநாயகம், நீதி என்பவற்றை விரும்புகிறாரோ இல்லையோ, இலங்கை மக்கள் – சகல இனத்தவரும் – அவற்றை விரும்புகின்றனர்.

சந்திரிகா பிரதமரான மறுகணமே அவரது புகழ்பாடலைப் பலரும் தொடங்கிவிட்டனர். ஜனாதிபதி ஆனவுடன் இந்த நிலை பல்கிப் பெருகியது; குறிப்பாகத் தமிழ்ப் பத்திரிகைகள் (வெளிநாடு உட்பட). தமிழ்த் தலைவர்களும், இயக்கங்களும் ஐதேகவை விட்டு ஓடிப் போய்ச் சந்திரிகாவுடன் நின்றுகொண்டன. அது மட்டுமல்ல அவரை இரட்சிக்க வந்தவராகவே வர்ணிக்கின்றன. ஆனால் சந்திரிகா ஜனாதிபதியானவுடன் கூறிய இரண்டு விடயங்கள் இதனைச் சந்தேகத்துக்குரியதாக ஆக்கியுள்ளது. ஒன்று: ராணுவத்தினரிடம், அரசியல் தீர்வு சரிவராவிட்டால் ராணுவத் தீர்வே என்று கூறியது. இரண்டு: தமிழர் பிரச்சனை தீர்க்கப் படுகையில் சிங்களவர் நலம் பாதுகாக்கப்படும் என உறுதியளித்தது.

இவை இரண்டும் இன்னும் சந்திரிகாவும், அவரது கட்சியும் தம்மை இனவாத சிந்தனையில் இருந்து விடுவிக்கவில்லை என்பதை உறுதிப் படுத்துகின்றன. சிங்களப் பேரினவாதம் தமிழரது உரிமைகளை நசுக்கித் தன் ராணுவப் பிடிக்குள் பல தசாப்தங்களாக வைத்துள்ளது. எனவே தமிழர்களது உரிமைகளை வழங்குவதும், சமத்துவமான நிலையை உருவாக்குவதும், இனப் பிரச்சனையைத் தீர்ப்பதும் எந்த வகையிலும் சிங்களவரது நலன்களைப் பாதிக்கப் போவதில்லை.

இரண்டாவதாக சந்திரிகா அரசியல் தீர்வு அல்லாவிடில் ராணுவத் தீர்வு என்று கூறுவது, உண்மையில் இனப் பிரச்சனையைப புரிந்துகொள்ளாததாகவே இருக்கும். உண்மையான அமைதியை விரும்பும் தலைவர்கள், ஒருபோதும் இனப் பிரச்சனைக்கு ராணுவத் தீர்வை விரும்ப மாட்டார்கள். போரினால் சிங்கள மக்கள் மத்தியில் எழுந்துவந்த அதிருப்தியைத் தனது அரசியல் நலனுக்காகப் பயன்படுத்த நினைத்தால் அது பெரிய அரசியற் தற்கொலையாகவே முடியும். கடந்த காலங்களில் சமாதானம், இனப் பிரச்சனைக்கான தீர்வு

www.tamilarangam.net

என்பவற்றில் சந்திரிகா சிங்களத் தரப்பிலான பார்வையையே கொண்டுள்ளார். இதுவரை இனவாத அடக்குமுறையாலோ, போராலோ தமிழர்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டதாக அவரால் சொல்ல முடியவில்லை.

ஆயினும் சகல மக்களும் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் எந்தக் காலத்திலும் விரும்புவது நிச்சயம். ஆனால் சமாதானமானது உண்மையான, நியாயமான அரசியற் தீர்விலேயே தங்கியுள்ளது.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படும்வரை தமிழர் நாம் விழிப்பாய் இருப்போம். தமிழ் முஸ்லிம் சிங்கள இனவாத சக்திகளின் எச்சசொச்சங்கள் இருக்கும்வரை தொடர்ந்தும் போராடவேண்டும். அப்போது மட்டுமே நிலையான சமாதானம் சாத்தியமாகும்.

## சிரித்து வைப்போம்!

மேலே சொன்னது போல், சிங்கள பேரினவாதத் தலைவர்கள்தான் தமிழர்களின் பிரச்சனையை, இனப் பிரச்சனையாகப் பார்க்கத் தெரியாமல் தடுமாறுகிறார்கள் (நடிக்கிறார்கள்) என்றால் சில 'தமிழ் இயக்கத் தலைவர்க'ளும் அப்படித்தான் என எண்ணத் தோன்றுகிறது.

ஈபிடிபி தலைவர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இலங்கை ஜனாதிபதியிடம், தமிழர்களை ராணுவத்தில் சேர்த்துக் கொள்ளாததுதான் இனப்பிரச்சனைக்குக் காரணம் என்பது போலவும், ஒரு தமிழ் இராணுவப் பிரிவு உருவாக்கப் பட்டால் இந்தப் பிரச்சனை தீர்க்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

சிங்களப் பேரினவாதக் கருத்தியலின் அடிப்படையிலேயே அரசும், படைகளும், நிர்வாகமும் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. கடந்த காலங்களில் இந்தக் கருத்தியலுக்காகச் சேவகம் செய்த பல தமிழ்ப் பொலிசாரும் நிர்வாகிகளும் எவ்வாறு தமிழின விரோத வேலைகளில் ஈடுபட்டார்கள் என்பது கண்முன்னே உள்ள வரலாறு. ஈழத்துக்காகப் போராடுவதாகக் கூறிக்கொண்டு புறப்பட்ட டக்ளசும் மறுபுறத்தில் பிரச்சனையில் ஆழத்தைக் காணத் தவறிவிடுகிறார்.

அது போகட்டும், கடந்த பத்தாண்டுகளில் போராடப் புறப்பட்டதாகச் சொல்லிக்கொண்ட 'விடுதலை' அமைப்புகள் எத்தகைய மக்கள் விரோதச் செயற்பாடுகளைச் செய்தார்கள் என்பதும், எத்தனை சக இயக்கத் தோழர்களையும், மாற்றியக்கத் தோழர்களையும் கொன்று போட்டார்கள் என்பதும் நாம் கண்ட கொடிய வரலாறுகள். இதற்கு மேலே ஒருபடி போய் இந்திய ராணுவம் நடாத்திய பேயாட்சியின்போது, மாகாணசபை அதிகாரங்களில் இருந்த ஈபிஆர்எல்எஃப் அமைப்பு, பிள்ளைபிடிகாரர்கள் போல மாறித் தமிழ்த் தேசிய ராணுவம் அமைத்ததையும், அது பின்பு முடமானதையும் இவர் அறியவில்லைப் போலும்.

ஒரு தமிழ் ராணுவத்தைக் கட்டுவது மட்டும் போதாது. அது ஒரு சரியான அரசியற் கருத்தியலைக் கொண்டிருக்க வேண்டும். அல்லாவிடில் சிங்களப் பேரினவாத அரசின் பசிக்குச் சேவை செய்யும் சிங்கள ராணுவம் போலவே தமிழர்களை அழிக்கப் பயன்படும்.

எமது இன்றைய தேவை சிங்கள ராணுவத்திற்குப் பதிலாக இன்னொரு தமிழ் ராணுவம் அல்ல. தமிழர்களின் சுயத்தைப் பாதுகாக்க, சுயநிர்ணயத்தை வென்றெடுக்க ஒரு விடுதலைப் படையே.

www.tamilarangam.net

## கேட்டு வைப்போம்!

தேசியச் சிறுபான்மை இனமான தமிழர்களது சுயநிர்ணய உரிமையும், அதற்கான போராட்டமும் எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம், சிறுபான்மைக்குள் சிறுபான்மையான முஸ்லிம் மக்களது சுயமும், சமமான அந்தஸ்தும்.

சில மாதங்களுக்குமுன் விடுதலைப் புலிகளின் தலைவர் முஸ்லிம் மக்களின் பாரம்பரியம் வடக்கு கிழக்குத்தான் எனவும், அவர்கள் மீளவும் வடக்கில் வாழ அனுமதிக்கப்படுவர் எனவும் கூறியது தமிழர்களது உண்மையான விடுதலையை நேசிப்பவர்களுக்கும், தமிழ் மக்களுக்கும் மிக மகிழ்ச்சியை அளித்தது.

ஆனால் அண்மையில் ஒரு பேட்டியில் 'முஸ்லிம்கள் எப்போது திருப்பி அழைக்கப் படுவார்கள்?' என்ற கேள்விக்கு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வழங்கிய பதில் மீண்டும் இந்த விடயம் தொடர்பான கவலைகளைத் தோற்றுவிக்கக் கூடியது.

அவரது கருத்துப்படி வலிகாமம் வடக்கு தீவுப் பகுதிகளில் ராணுவம் இருப்பதால் இப்போது முஸ்லிம் மக்களை அழைக்க முடியாது; ராணுவம் அங்கிருந்து வெளியேறியபின் தமிழர்கள் மீண்டும் அங்கு சென்று குடியேறிய பின்னரே முஸ்லிம்கள் அழைக்கப் படுவார்கள்.

இக் கூற்றானது, இராணுவ ஆக்கிரமிப்பே முஸ்லிம் மக்களை வெளியேற்றக் காரணம் என்றும், அல்லது யாழ்ப்பாணத்தில் இடநெருக்கடியாலேயே அவர்கள் வெளியேற்றப் பட்டனர் எனவும் கருத இடமளிக்கிறது. இலங்கை அரசு போல் அடிப்படைப் பிரச்சனையை மறுதலிக்கும் விதத்தில், மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போன்று இந்த வாக்குமூலம் உள்ளது. இதனால் நாம் யதார்த்த நிலையை வெற்றிகொள்ள முடியாது என்பது நம்முன் உள்ள வரலாறு. பிறருக்குச் சம அந்தஸ்தைக் கொடாமல் நாம் எமக்குரிய உரிமைகளுக்காகப் போராடுவது, உலகெங்கும் எமது குரலைப் பலவீனமடையவே செய்யும்.

சுவடுகள் 62,
ஒஸ்லோ.
டிசம்பர் 1994

Suvadugal, Herslebs gt43, 0578 Oslo.

www.tamilarangam.net

இளைய அப்துல்லாஹ்

# அபசகுனம்

"அட குமரேசு, இஞ்சாலை வாடா..... உன்ரை குருகுருப்பை என்னாலை அடக்கேலாது" செல்லாச்சி கடைக்குட்டி குமரேசனை அதட்டினாள். குசினிக்குள் ஒரு குப்பி லாம்பு - மண்ணெண்ணையைக் கண்டு கிட்டத்தட்ட மூன்று வருடங்களைப் பூர்த்தி செய்துவிட்டிருந்த குப்பி லாம்பு, வீட்டுக் கோடியில் இருந்த ஒரு தென்னை மரத்துத் தேங்காயின் உதவியுடன் எரிந்துகொண்டிருந்தது. ஆம், இப்போது இப்படித்தான் சில வீடுகளில் தேங்காயெண்ணை விளக்கெரியும். இன்னும் சில வீடுகளில் சூழ் எரியும். அனேகமான வீடுகள் எங்கள் மக்கள் உள்ளங்களைப் போல வெறுமை இருட்டில் மூழ்கிக் கிடக்கும்.

"எணை அம்மா! ஐயோ! என்ரை அம்மா!" நித்திரைப் பாயில் கிடந்த சரசு வாய்விட்டு அலறினாள். நேரம்.... இப்பதான் அம்புலிமாமா கொஞ்சம் கிழக்குப் பக்கமாகச் சாய்கிறது மாதிரித் தெரிந்தது. யேசுவெள்ளி வடக்காலை வாலை விட்டிருக்கு. ஒரு....பன்னண்டு மணி இருக்கும் என நினைத்தபடி.... "என்னடி சரசு இந்த நேரத்திலை பேய்மாதிரி அலறுறாய்"

"அம்மா... எணை அம்மா..." பிதுங்கிய கண்களுடன் படுக்கைப் பாயில் இருந்து எழும்பி ஓடிவந்து தனது தாயின் காலடியில் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்தாள் சரசு.

"அம்மா.... இப்ப.... இப்ப...." விம்மினாள். கேவினாள். நல்லாப் பயந்துபோனாள். "அம்மா அந்தத் தொண்டமானாத்துச் சந்நதியான் அறிய நாங்கள் எல்லோரும் வீட்டோடை எரிஞ்சு...." அழுதாள் சரசு.

"சரி சரி வா பிள்ளை" என்று செல்லாச்சி தன் மகளைத் தான் பால் கொடுத்து அன்பு அமுதூட்டிய மார்புடன் இறுக அணைத்துக்கொண்டு தலையை வருடிவிட்டு ஆறுதல் சொன்னாள்.

"அம்மா... எனக்கென்னவோ... அந்தக் கனவு அபசகுனமாத்தான் விளங்குதணை"

"புள்ளை எங்களுக்கு எதுதான் அபசகுனமில்லை.... இண்டைக்கு இந்த யாழ்ப்பாண மண்ணிலை பிறந்தது மட்டும் என்ன நல்ல சகுனமே....!? ஏதோ நான் எண்டபடியால்தான் தாங்கிக்கொண்டு



www.tamilarangam.net

இருக்கிறன். இல்லாட்டி உங்கடை ஐயா அந்தக் காலத்திலை பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமே?


அப்ப இந்த இடத்திலை இருந்த பெரிய காணி வளவிலைதான் நாங்கள் எல்லாரும் இருந்தம். அப்ப உன்ரை ஐயா பெரிய எக்கவுண்டன்ற். அந்தக் காலத்திலை இங்கிலீசுக் காரரிட்டைப் பாதிரிமாரிட்டைப் படிச்சவர். கணக்கிலை புலி. அப்ப உள்ள எல்லாரும் என்ன பிரச்சினை கணக்கிலை எண்டாலும் உன்ரை ஐயாவிட்டைத்தான் வந்து கேப்பினம். இந்த யாழ்ப்பாணத்திலை உள்ள பெரிய கடையளிலை எல்லாம் கணக்குப் பாக்கிறவர் ஐயாதான். அந்தக் காலத்திலை கடைக் கணக்குகளை எல்லாம் செய்யிறதிலை பெரிய கெட்டிக்காரர்.

அப்ப என்னைக் கலியாணம் செய்தார். ஓம், நானும் அவரோடைதான் புறாப்பொறுக்கிச் சந்தியிலை நிண்டு பஸ்ஸிலை போவம். அந்த நேரத்திலைதான் எங்கள் இரண்டு பேருக்கும் காதல் ஏற்பட்டுது. நான் அப்ப யாழ்ப்பாணம் கல்விக் கந்தோரிலை ரைப்பிஸ்டா இருந்தன். நாங்க இரண்டு பேரும் ஒண்டாப் போவம். ஒண்டாத் திரும்பி வருவம். இப்பிடி ஒரு வருசம் மட்டிலை கழிஞ்சுபோயிருக்கும். அதுக்குப் பின்னாலைதான் உன்ரை ஐயாடை ஆக்கள் சாதியிலை உயந்தவை. எங்கட ஐயா எல்லாம் பனைசீவித்தான் காலத்தை நடத்திறது. இப்ப, இனி... இந்தக் காதல் விசயம் ஊருக்குத் தெரிஞ்சுபோக ஓம் பிள்ளை, காதலையும் கர்ப்பத்தையும் மறைக்கேலாது எண்டு சொல்லுவினமே. அப்பிடி உங்கட ஐயாவின்ரை ஆக்களுக்குத் தெரிஞ்சுபோச்சு. என்ரை குணத்தையும் தெய்வபக்தியையும் பாத்த உங்கட ஐயா, வாழுறதெண்டா என்னோடைதான் வாழுறது. இல்லாட்டி இரண்டு பேருமா செத்தே போயிடுறது எண்டு முடிவெடுத்திட்டார்.

அப்ப வந்த சண்டையை இப்ப நினைச்சாலும் பயமாக் கிடக்கு. – ஓம் பிள்ளை, வெள்ளாள சாதி ஒரு பக்கம். எங்கடை பனை சீவுற சாதியள் மறுபக்கமா.... ஏதோ... ராமாயணப் போருக்கு வியூகம் செய்த மாதிரி... இஞ்சாலை பாளை சீவுற கத்தியளோடை ஆம்பிளை பொம்பிளையள் எல்லாம். அங்காலை... பொல்லு வாளுகளோடை உயந்த சாதி ஆக்கள். ஐயாடை வீட்டிலை அவரை வீட்டிலை அடைச்சுப் போட்டினம். அவரெண்டால் ஒருமனதோடைதான் இருந்திருக்கிறார். அவரின்ரை திடமான நம்பிக்கையைக் கண்டவுடனே அவங்கடை ஆக்களெல்லாம் – அந்தியேட்டி, கருமாதி, சாந்தி எல்லாம் செய்து, செத்துப் போனவன் எண்டு சொல்லி வீட்டைவிட்டுத் துரத்திப் போட்டினம். புறகு எங்கடை வீட்டுக்கு வந்தார் ஐயா. அப்ப நானும் ஏதோ நாலு வார்த்தையைப் படிச்சு நாலு விசயத்தை விளங்கி தெரிஞ்சிருந்ததாலை உங்கடை ஐயாவுக்குத் தைரியத்தைச் சொல்லி இந்த யாழ்ப்பாணத்திலை நாங்க ஒரு முன்மாதிரியாய் வாழுவம் எண்டு.... விடாப்பிடியாச் சொன்னன். அப்பவும் சாதித் தடிப்புகள் எங்களைச் சூழத் தொடங்கிச்சு. அதுக்குப் பின்னாலை உங்கடை ஐயா கணக்கு வேலை பாத்த கடைகளிலை எல்லாம் நளப் பெட்டையைக் கலியாணம் செய்துகொண்ட கீழ்சாதியை எங்கடை கடையிலை வேண்டாம் எண்டு ஒதுக்கிப் போட்டினம். அதுக்குப் பிறகு, ஐயா வீட்டோட வந்து கொஞ்ச நாள் இருந்து பார்த்தார். அவருக்கு ஒண்டும் விளங்கேல்லை. இப்பிடித்தான் ஒருநாள் காட்டு ஐயனார் கோயிலுக்குப் போயிட்டு வரேக்குள்ளை அவரின்ரை முகமெல்லாம் ஒரு சந்தோஷமாய் இருந்துது.

எனக்கும் அண்டைக்கு ஒரு நேத்தி இருந்திச்சு. அதையும் முடிச்சுப்போட்டுப் பின்னேரம் அப்பிடியே அம்மன் கோயிலுக்கும் போயிட்டு வருவமெண்டு

www.tamilarangam.net



பூப்பூடுங்கப் போன நேரம் - உங்கட ஐயா கூப்பிட்டார். என்ன எண்டு கேக்கிறதுக்குக் கிட்டப் போனா... அவர் சொன்னார் - "இண்டையிலை இருந்து நான் சீவப்போறன்" எண்டு.... அவர் அதைச் சொல்லுற நேரம் - முகத்திலை, தொழில் இல்லாமை இருந்து ஒரு தொழில் கிடைச்சால் எவ்வளவு சந்தோஷப் படுவினமோ ஆக்கள் அந்தப் பூரணமான சந்தோஷம் இருந்ததை நான் பாத்தன். எனக்கெண்டா கொஞ்சம்கூட விருப்பமில்லை. அவரைச் சீவவிடுகிறதுக்கு அழகான முறையிலை இருந்து செல்வமா செழிப்பா இருந்து ஃபானுக்குக் கீழே இருந்துகொண்டு இருந்த உடம்பு, பனையைக் கட்டிப் பிடிச்சு ஏறி... பாளை தட்டி முட்டி கட்டி கள்ளு இறக்கி தவறணைக்குப் போய்.... எனக்கெண்டா உங்கடை ஐயா கஷ்டம் தெரியாத மனுஷன் கஷ்டப்படுறதை கண்கொண்டு பாக்க விருப்பமில்லாமை எங்கடை அண்ணன்மாரிட்டைப் பேசி வேறை ஏதும் கடையைக் கிடையைப் போட்டிட்டு இருக்கச் சொல்லத்தான் பாத்தன்.

ஆனா அவர் ஒரே புடியாச் சொல்லிப் போட்டார் "நான் பனை சீவப்போறன்" எண்டு. கடவுளே... இந்த யாழ்ப்பாணத்திலை இப்பிடி ஒரு மனிசனை என்ரை கண்ணாலையும் காணேல்லை - அப்பிடி யாரும் கண்டுவந்து சொன்னாக்கூட நான் அடிமையா இருந்திட்டுப் போயிடுவன். அதுக்குப் பிறகு ஐயா வந்து எங்கடை அண்ணரிட்டை இருந்துகொண்டு மரம் சீவப் பழகினார்.

எங்கடை இந்த மண்ணிலை - நளச் சனத்தைக் காணுறதே அருவருப்பு எண்டு நினைக்கிற மக்கள் மத்தியிலை மேளம்

www.tamilarangam.net

அடிக்கிறதுக்கு ஒருத்தன், சவம் தூக்கிறதுக்கு ஒருத்தன், வெளுக்கிறதுக்கு ஒருத்தன், அம்பட்ட வேலை செய்ய ஒருத்தன் எண்டு குதறுப்பட்டுப் போய்க் கிடக்கிற எங்கடை பூமியிலை, என்னைக் கலியாணம் முடிச்சு... போதாததுக்கு எங்கடை வீட்டிலையே வந்து இருந்து - இண்டைக்கு கள்ளும் சீவி குடும்பத்தை நடத்திக் காட்டினார் அந்தத் தெய்வம்.

அவர் மரம் சீவுறதிலை வலு கெட்டிக்காரர். மற்ற மனிசரிலையும் பாக்க இவருக்குத்தான் கள்ளு நல்லாப் பாளையிலை ஊறும். எதிலையும் முற்போக்கு எண்ணம் அவருக்கு இருக்கு. அவர் அடிக்கடி சொல்லுற தாரக மந்திரம் - "வெள்ளாள சாதி உயர்ந்த சாதி எண்டு என்ன இருக்கு. கடவுள் படைச்ச உலகத்திலை ஏதோ வாழ்ந்திட்டுப் போறதுக்கு எண்டு செய்யிற தொழிலை மதிச்சு நடந்தாப் போச்சு" இப்பிடிச் சொல்லிச் சொல்லிக் கொண்டிருப்பார். யாருக்குமே அடிபணிஞ்சு நடக்க மாட்டார். அப்பிடி வாழ்ந்து காட்டின மனிசன். புள்ளை! பாவம் அந்த உசிரை எடுத்திட்டுப் போன எமன் என்ரை உசிரை மட்டும் வைச்சிருக்கிறானே.

செல்லாச்சி அழுதபடி மூக்கை உறிஞ்சித் தனது முந்தானைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள்.

"அந்த இடி என்ரை தலையிலை விழுந்து ஆறமுதல்லை வவுனியாவுக்குப் போன உன்ரை மூத்த அண்ணனைப் புடிச்சுக் கொண்டுபோன ஆமிக்காரங்கள் புறகு புலி எண்டு சொல்லி ரயரிலை போட்டிட்டானுகளாம். அந்தச் சேதியையும் கேள்விப்பட்ட எனக்குப் பைத்தியமே பிடிச்சிடும் போல இருந்த நேரத்திலைதான் உன்ரை தம்பி பிறந்தான். அப்ப நீ சின்னப்பிள்ளை. உனக்கு ஒண்டுந் தெரியாது. அப்ப இருந்தே இந்த இடிஞ்ச மண்வீடுதான் தஞ்சம். எங்கடை அண்ணன்மார்தான் எங்களைப் பாக்கிறது. அவையளும் இப்ப என்னத்தைத்தான் செய்யிறது? இடிஞ்சுபோன உணர்வுகளோடை பாடுபட்டுப் போன எத்தினை உசிருகள் இந்த யாழ்ப்பாண மண் தாங்கிப்போய் இருக்கு.

இப்ப கொஞ்ச நாளா புலியள் ஒரு சட்டம் போட்டிருக்கினம். யாரையும் சாதியைச் சொல்லி அவமானப் படுத்தக்கூடாது.... அப்பிடிக் கூப்பிட்டோ - இல்லாட்டிப் பேசியோ, இல்லாட்டி அவமானப் படுத்தினாலோ 500ரூபா தண்டம் குடுக்க வேணும். நடுச்சந்தியிலை வைத்து மன்னிப்புக் கேக்கவேணும் எண்டெல்லாம் - அது ஒரு இடத்துக்கு ஒருமாதிரித் தண்டனை குடுத்திருக்கினம்.

அதுக்குப் பிறகு கீழ்சாதி எண்டு ஒதுக்கப் பட்டிருந்த இடத்திலை எல்லாம் கலியாணம் முடிச்சிருக்கினம். சட்ட முறையிலைதான் இது நடந்துபோகுமே தவிர - உள்ளத்தாலை உணர்ந்து செய்ய இதுவரையிலை யாரும் முன்வரேல்லை. சிலபேர் விரக்தியிலை - இப்பிடிக் கீழ்சாதி எண்டு முந்தின யாழ்ப்பாணத்தைப் பிளவுபடுத்தின நல்ல(?!) உள்ளங் கொண்ட தன்வாசிக்காரரின்ரை வாரிசுகள் கீழ்சாதிப் பொம்பிளையளை எடுத்தினம். ஆனா அதுவும் பழைய ரத்தம், நிறமூர்த்தக் கோளாறு எல்லாம் ஒரு புள்ளையோடை, இரண்டு பிள்ளை பெத்ததோடை சாதி சம்பிரதாயம் எல்லாம் புத்துக்குள்ள இருந்து வந்த விஷநாகம் போல படமெடுத்தாடப் போக - திரும்ப ஞானதீட்சை பெற்றுக்கொண்டு கலியாணத்தை டைவோஸ் பண்ணின புரட்சிவாதிகளும் இருக்கினம். இப்ப பழையபடி இரத்த துவேஷம் ஊறிப் போயிட்டுது.

புள்ளை! இன்னும் உனக்குக் கொஞ்சம் காலம் போனாத்தான் விளங்கும். இப்ப ஊர் இருக்கிற நிலைமைலைகூட சாதிப் பிரச்சனை தலைதூக்காம இல்லை. தின்ன வழியில்லை - ஒழுங்கான

www.tamilarangam.net

வெளிச்சமில்லை - கால்நடையாப் பயணம். எத்தினை சின்னஞ்சிறுசுகள் செத்து மாஞ்சுகொண்டு போடுதுகள். அங்காலை ஆமிக்காரன் - இஞ்சாலை புலியள். நாங்கள் யாருக்குப் பயப்பிடுகிறது எண்டது இன்னொரு கேள்வி - ஆ.. அதுவே... அது கீழ்சாதியள் இதுகளுக்கு நாங்கள் உதவி செய்ய மாட்டம் எண்ட மேல்சாதியளின் பிடிவாதமும் வக்கிரமும்.

இது என்ன... இப்பிடிப் போனா சுதந்திரத்தை எந்த முகத்தோடை கொண்டாடுறது? எந்த முகத்தோடை நாங்கள் மண்ணிலை வாழப்போறது. சாகுமட்டும் நாங்களும் எங்களுக்குள்ளை எதிரிகளா? வெள்ளாளனும் பனை சீவுறவனும் தமிழன் தானே. தமிழ்த் தாய்தானே பெத்தெடுத்தவள். தமிழ்த் தாய்தானே பாலூட்டினாள். தமிழ்த் தாய்தானே வளர்த்தாள். வாத்திமாரும் தமிழ் - தமிழ் படிப்பிச்ச பள்ளிக்கூடம் இதெல்லாத்தையும் ஒதுக்கி வைச்சிட்டு வெறுமனே தமிழ் பேசுற மனிசர் மட்டும் என்ன? ஓடுறது உடம்புகள் எல்லாத்திலையும் சிவப்பு ரத்தம். இப்பிடி ஒரு உணர்வு வராதவரைக்கும் தமிழர்கள் பிரிஞ்சுபோய் சிதறிச் சின்னாபின்னப் பட்டுப்போய்க் கிடக்க வேண்டியதுதான் கடவுளே!"

செல்லாச்சியின் கண்கள் சமுதாயத்திற்காகக் கலங்கின.

"புள்ளை நீ கண்ட கனவிலை மிச்சத்தைச் சொல்லம்மா" செல்லாச்சி மகளைக் கேட்டாள்.

"அம்மா அது ஆமியும் போடேல்லை, புலியும் போடேல்லை. அது.... அது..... அப்பிடியே... ஒரு நெருப்புக் குண்டுபோல ஒரு பெரிய.... பென்னாம் பெரிய நெருப்புப் பாளம் ஒண்டு விளாசி எரிஞ்சுகொண்டு வந்து.... ஓம் - யாழ்ப்பாணத்துக்கு மேலை அப்பிடியே விழுந்து.... சத்தியமாய் இன்னும் கண்ணுக்குள்ளை இருக்குதெணை -

## வேர்கள் இலக்கிய இயக்கம்

தமிழில் நல்ல நூல்களை வெளியிடத் திட்டமிட்டுள்ளது வேர்கள் இலக்கிய அமைப்பு. ஆயிரம் ரூபாய் செலுத்தும் அங்கத்தவர்களுக்கு ஐந்தாண்டுகள் தொடர்ச்சியாகத் தரமான நூல்கள் (ரூ.200 பெறுமதியானவை) அனுப்பி வைக்கப்படும்.

தொடர்புகள்: வேர்கள் இலக்கிய இயக்கம், 12 டி தந்தை பெரியார் சாலை, வட்டம் 7, நெய்வேலி 607 803.

அப்பிடியே விழுந்து யாழ்ப்பாணமே... எரிஞ்சு போச்சுதம்மா.... அதிலை நாங்களும், எலலாரும்...." சரசு கூறினாள்.

"கடவுளே நல்லூர்க் கந்தா, நீதான் காப்பாத்த வேணும். உனக்குத்தான் வெளிச்சம். கண்ணகி ஆச்சி மதுரையை எரிச்சதுபோல -

எங்கடை ஊரிலை இருக்கிற எத்தினை சாக்கடை நாத்தங்களை எல்லாம் எரிச்சுப்போட்டுத் துப்பரவாக்குறதுக்கு கடவுள் நினைச்சுப் போட்டாரோ தெரியாது. அதுதான் முழு மனிசரையும் எரிச்சுச் சாம்பலாக்கிப் போட்டு புதுசா... நல்ல மனிசர்களை உருவாக்கப் போறாரோ..... அப்பனே..! உனக்குத் தெரிஞ்சதை நாங்கள் அறிவமே -

ஆ.... அந்தா இந்த இராவிலையும் பொம்பர் இரைஞ்சு கேக்குது. கந்தா! வாங்கோ...." மிஞ்சின தனது இரண்டு பிள்ளையளையும் இழுத்துக் கொண்டு செல்லாச்சி அந்த இடிஞ்சுபோன பங்கருக்குள் குனிந்து அவசரமாகப் போகவும்,

பக்கத்து மதில் வீட்டு உடையார் வீட்டுக்கு மேல் செல் ஒன்று விழுந்து வெடிக்கவும் நேரம் சரியாக இருந்தது. தீச்சுவாலையொன்று வானம் நோக்கிக் கெம்பி எழுந்தது.

www.tamilarangam.net

● திருச்செல்வம் திலீபன்

# ஜனநாயகம் நீதியானதா?

மக்களால் மக்களை மக்களின் பிரதிநிதிகள் ஆள்வது ஜனநாயகம். இதுவே சிறந்த ஆட்சிமுறை என அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் கொக்கரிக்கின்றன. சில ஐரோப்பிய நாடுகள் வெற்றியும் கண்டுள்ளன. ஏன் இந்த ஜனநாயகம் மூன்றாம் உலக நாடுகளில் வெற்றியளிக்கவில்லை; பொருளாதார உயர்வைக் காணவில்லை. இந்த ஜனநாயக நாடுகளிலேயே போர், போரபாயம், சமய வெறியாட்டங்கள் நிகழ்கின்றன. சிறுபான்மையினர் அடக்கப் படுகின்றனர். இன மொழி மத சாதி சம்பிரதாயம் என மக்கள் பிரிக்கப்பட்டு அடக்கப் படுகின்றனர்; ஒடுக்கப் படுகின்றனர்.

ஜனநாயகம் முதலாளிகளை உருவாக்காதா? நீதியான ஆட்சிமுறையா? என்று கேட்கும்போது இல்லை என்றுதான் சொல்லவேண்டும். ஜனநாயக முறைப்படி, பெரும்பான்மை தனது தேவைகளை, கருத்துகளை, வாக்குகள் என்ற ஆயுதத்தின் மூலம் சுவீகாரம் செய்துகொள்கறிது. சிறுபான்மையினரின் ஆசைகள் அபிலாஷைகள் நிராகரிக்கப் படுகின்றன. இங்கே பெரும்பான்மை ஏகாதிபத்தியம் முதலாளித்துவமாகிறது. இம் முதலாளிகள் அரச ஆசனங்களில் பாராளுமன்றங்களில் இருந்துகொண்டு சிறுபான்மையினரையும் ஏழைகளையும் சுரண்டும்வரை சுரண்டிவிட்டு பெரும்பான்மையினரின் ஆசை அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து, அடுத்த



முறைக்கான வாக்குகளுக்குத் தயாராவார்கள். இது முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் இல்லையா? நீதியான சிறுபான்மை இனத்தின் வேண்டுதல்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப் படுகின்றதா? இது நீதியான ஆட்சி முறையா? முதலை ஆள்பவன் மட்டுமல்ல முதலாளி. ஏழை, எளிய, பாமர மக்களின் உழைப்பிலும் உதிரத்திலும் தன்னை வளர்த்துக் கொள்பவனும் முதலாளிதான். மற்றவர்களைச் சுரண்டி, ஏமாற்றி, அதிகாரத்தை வெறித்தனமாகப் பாவித்து மக்களை அடக்கி ஆள்பவனும் முதலாளியே.

உலகின் எந்த மூலையை எடுத்துக் கொண்டாலும் சிறுபான்மை இனமாகிய இரண்டாவது இனமே ஆயுதம் எடுத்துப் போராடுகிறது. வாக்குகளால் அடிக்க வலுவற்ற முதலாளிப் பெரும்பான்மையை ஆயுதத்தால் அடிக்க முயல்கிறது. இலங்கையை எடுத்துக்கொள்ளுங்கள். ஜனநாயக சோஷலிசக் குடியரசு எனக்

www.tamilarangam.net

கொட்டை எழுத்தில் எழுதப் பட்டுள்ளது. எங்கே ஜனநாயகம்? எங்கே சோஷலிசம்? எங்கே நீதி? ஏன் அங்கே போர்? தனிப்பட்ட மனிதர்களே வஏக்குகளை விலைகொடுத்து வாங்குமளவுக்கு ஜனநாயகம் முதலாளிகளை உருவாக்கியுள்ளது.

பொருளாதார நிலையில் சில ஜனநாயக நாடுகள் சிறிது முன்னணியில் நிற்பதற்குக் காரணம் என்ன? தனி மனிதனுடைய முயற்சிக்குரிய இலாபம் அவனை அடைகிறது. இதனால் போட்டி அதிகரிக்கிறது. சிறந்த பொருட்கள் உருவாகின்றன. அதேவேளை உள்ளவன் இல்லாதவனைச் சுரண்டுகிறான். உள்ள நாடுகள், இல்லாத நாடுகளின் முதுகில் விஞ்ஞானம், மருத்துவம், நோய், உதவி, பொருளாதார உதவி என்று ஊடுருவுகின்றன. இதில் மதங்கள்கூட ஒன்றை ஒன்று உதவி என்று கூறிக்கொண்டு ஊடுருவி, சிறுபான்மை மதங்களை விழுங்குகின்றன.

ஜனநாயகம் வெற்றி அளிக்கும் சில ஐரோப்பிய நாடுகளை எடுத்துப் பாருங்கள். அவை பணக்கார நாடுகளாக இருக்கும். அதேவேளை மற்றவர்களும் மனிதர்கள் என்று மனச்சாட்சியுடன் சிந்திப்பவாகளாக இருப்பார்கள். பசி என்ற ஒரு நிலை வரும்போது மனச்சாட்சிக்கு இடமேது? ஒருவனை மற்றவன் பிடித்து உண்ண முயற்சிப்பான்.

ஜனநாயக மலை என்று கூறப்படும் அமெரிக்காவில் சிறுபான்மையினரான கறுப்பர்கள் சரியான நீதியைப் பெறுகிறார்களா? 'சமாதானத்தை விரும்பும்' ஐ.நா.விலுள்ள நாடுகள் ஆயுதம் தயாரிக்க வில்லையா? அவற்றை வறிய, மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்கவில்லையா? இது முதலாளித்துவ ஏகாதிபத்தியம் இல்லையா? ஆயுதம் ஒருபோதும் அமைதி காக்காது. சுவீடன் இந்தியாவுக்கும், நோர்வே ரொக்கட்டுகளை அமெரிக்காவூடு நிக்கரகுவாவிலும் பயன்படுத்தவில்லையா? ஜனநாயகம், உலக சமாதானம் என்று கூறிக்கொள்ளும் இந்த நாடுகள் பொருளாதாரத்தில் சிறுபான்மையாக உள்ள மூன்றாம் உலக நாடுகளுக்குப் பின்கதவால் ஆயுதங்களும், முன்கதவினால் உதவி, மருத்துவம், விஞ்ஞானம் என்றும் ஊடுருவுகின்றன. மற்ற நாடுகளும் ஜனநாயக நாடுகள் எனும்போது இவர்களின் ஊடுருவல் இலகுவாகின்றது. கிழக்கு ஜேர்மனி, சோவியத் யூனியன், நிக்கரகுவா வரிசையில் இப்போது வடகொரியாவை நெருக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஜனநாயக நாடுகள் தமது வழிக்கு சோஷலிச நாடுகள் வராவிடில் எதிர்த்து ஊடுருவுவார்கள். சீனாவில் ஜனநாயகம் என்று மாணவர் புரட்சி ஏற்படுத்தி அது தோல்வியில் முடிவடைந்தது. இன்று அணுக்குண்டுப் பரிசோதனை என்று வடகொரியாவை நெருக்குகிறார்கள்.

ஜனநாயக, முதலாளித்துவ, ஏகாதிபத்திய நாடுகள் அணுக்குண்டு தயாரிக்கலாம் அல்லது வைத்திருக்கலாம். ஏன் சதாம் குசேன், வடகொரியா வைத்திருக்கக் கூடாது. அணுக்குண்டு வேண்டாம் என்று கூறும் ஏகாதிபத்திய ஜனநாயக நாடுகள் ஏன் அணுக்குண்டுப் பரிசோதனை செய்கின்றன. மற்ற நாடுகள் வைத்திருந்தால் போட்டுவிடுவார்கள் எனப் பயப்படும் ஜனநாயக அமெரிக்கா ஏன் அன்று ஹிரோசிமா, நாகசாகியில் அணுக்குண்டு போட்டது? இன்றும் அங்கு பெரும் பாதிப்பை அந்தக் குண்டுகள் ஏற்படுத்துகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பானைவிடப் பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருந்தவன் ஹிட்லர். ஏன் அந்த அணுக்குண்டு ஐரோப்பாவில் போடப்படவில்லை? இவர்கள் அமெரிக்காவின் சகோதரர்கள். ஒரே இனம், ஒரே மக்கள், பெரும்பான்மை என்பதுதான் இதற்குக் காரணம்.

www.tamilarangam.net

ஜப்பானில் போட்டால் அழிந்துபோவது வேறு இனம், ஐரோப்பாவுடன் ஒப்பிடுகையில் அவர்கள் சிறுபான்மை இனம், சிறிய நாடு. போரில்கூட சிறிய எதிரியே அழிக்கப் படுகிறான். பெரிய எதிரி வளர்ந்து தன்னைப் பலப்படுத்திக் கொள்கிறான். இப்படியான நோக்கங்கள் முதலாளித்துவ, ஏகாதிபத்திய நோக்கங்களே.

ஜனநாயக முறையில் ஐரோப்பிய சமூகத்தை ஓர் முதலாளித்துவ சமூகம் என்றே கூறலாம். பணவசதி கொண்ட பெரும்பான்மை நாடுகள் இணைகின்றன. மலிவான மூலப்பொருட்களைத் தருவித்தும், ஆயுதங்களை விற்றும் தனது பணப்பையை நிரப்புகின்றன. இந்த முதலாளித்துவ நாடுகள் ஏன் வறிய, பொருளாதாரத்தில் சிறுபான்மையினரான மூன்றாம் உலக நாடுகளுடன் சேரக்கூடாது? ஜனநாயகம் முதலாளித்துவத்தை உருவாக்குகிறது என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

ஜனநாயகத்தின் காவலரண் எனக் குறிப்பிடப்படும் அமெரிக்கா யாருடைய சொந்த நாடு? செவ்விந்தியர்களுடைய சொந்தநாடு. இன்று அவர்களின் நிலை என்ன? அந்தச் சிறுபான்மை இனத்துக்கு நீதி எங்கே? ஜனநாயக முறைப்படி ஓர் இனமே அழிக்கப் படுகிறது. நாகரிகம் என்ற போர்வையில் (கிறிஸ்தவ) மதம் திணிக்கப் படுகிறது. கட்டிடக் கலை, வானசாஸ்திரம், நல்ல கலாச்சாரம் கொண்டிருந்தவர்கள் செவ்விந்தியர்கள். ஆழமான மதநம்பிக்கை மூலம் பலவற்றைக் கண்டுபிடித்தவர்கள். இன்று அவர்களின் மதம், கலை, கலாசாரம் என்பன நாகரிகப் படுத்தல் எனும் பெயரில் கிறிஸ்தவ மத ஊடுருவலால் அழிக்கப் படுகிறது; அவர்களது தனித்துவம் ஏப்பம் விடப்படுகிறது.

நேபாள நாட்டை எடுத்துக் கொள்வோம். ஜனநாயகமாக்கு எனத் தூண்டி ஜனநாயக நாடு ஆக்கினார்கள். இன்று எண்பத்தியொரு மிஷன்கள் உதவி செய்கிறோம் என்று அங்கு போய்நிற்கின்றன. உதவி என்று போகும் இவர்கள் ஏன் பிரதிபலன் எதிர்பார்க்கிறார்கள்? தமது மதத்தில் சேரவேண்டும் என்று நெருக்குகிறார்கள். இதற்குப் பொருள் உதவியல்ல, விலைகொடுத்து வாங்குதல் ஆகும்.

ஜனநாயகம் என்ற போர்வையில் சிறுபான்மை இனம், மொழி, மதம், கலை, கலாச்சாரங்கள் அழிக்கப் படுகின்றன. சிறுபான்மை இனத்தின் தனித்துவம் இழக்கப் படுகிறது. போர்கள் உருவாகின்றன. துவேச எண்ணங்கள் தலைதூக்குகின்றன.

ஜனநாயகம் தனிப்பட்ட முதலாளிகளை உருவாக்குகிறது. கொம்யூனிசம் அல்லது சோசலிசம் ஆட்சிப் பீடத்தில் உள்ளவர்களை முதலாளி ஆக்குகிறது. இவை இரண்டும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே. ஒரே சட்டம், ஒரே நீதி என்று கூறும் ஜனநாயகம், சோசலிசம் என்றாவது சிறுபான்மை இனத்தைப் பாதுகாக்கச் சட்டமியற்றியதா? ஜனநாயகம் பெரும்பான்மையின் நலனுக்குக் கைகொடுக்கிறது. கைதூக்கியும் விடுகிறது. ஜனநாயக ஆட்சி ஒருபோதும் சிறுபான்மை இனத்திற்கு நீதி வழங்காது. சிறுபான்மையைப் பாதுகாக்கும் முறையில் சட்டம் இயற்றப்பட்டு அது நடைமுறைப் படுத்தப்படாதவரை ஜனநாயகம் நீதியற்றதும் வெறும் கண்துடைப்புமாகும். இயற்றப்படும் சட்டமானது அடிப்படைச் சட்டமாகவும், மூன்றிலிரண்டு பங்கால் மற்றக் கட்சிகள் மாற்ற முடியாததாகவும் இருக்க வேண்டும்.

www.tamilarangam.net

# அமைப்பியலும் தமிழவனின் வாதங்களும்

**அமைப்பியல்வாதமும் தமிழ் இலக்கியமும், தமிழவன், காவ்யா, பெங்களூர், 1991, 151+8ப., விலை இந்திய ரூபா 30.**

சி. சிவசேகரம்

## இரண்டு கதைகள்

புத்தகத்தைப் பற்றி எழுதுமுன் இரண்டு கதைகளைச் சொல்லலாமென்று நினைக்கிறேன். முதலாவது, ராமகிருஷ்ணர் சொன்ன கதையின் மாற்று வடிவம்:

ஒரு ஊரிலே ஒரு குரு. அவருக்கு ஒரு சீடர். குருவுடன் இருந்து எதையுமே சாதிக்க முடியவில்லையே என்ற விரக்தி அவருக்கு. திடீரென ஒருநாள் எங்கோ போய்விட்டார். வெகுகாலம் கழித்து வெகு உற்சாகமாகத் திரும்பி வந்தார். பழைய குருவைக் காணப் போனபோது குரு தியானத்தில் இருந்தார். தியானம் முடிந்த குரு சீடரைப் பார்த்து வாய்திறக்கு முன்னரே "கண்டுபிடித்துவிட்டேன்! கண்டுபிடித்துவிட்டேன்!!" என்று சீடர் கூறினார். குரு நிதானமாக "எதை?" என்று கேட்டார். கேட்ட குருவின் கையைச் சீடர் பற்றித் தரதரவென இழுத்துக்கொண்டு ஆற்றங்கரைக்குப் போனார். குருவைக் கரையில் நிறுத்திவிட்டு ஆற்றுநீர் மேல் நடந்து திரும்பிவந்து குருவிடம் "இதைத்தான் கண்டுபிடித்துவிட்டேன்" என்று மிகுந்த பெருமையுடன் சொன்னார். குரு புன்முறுவலுடன் "இதற்காகவா நீ இவ்வளவு காலத்தையும் செலவிட்டாய்? படகோட்டியிடம் அரை அணா கொடுத்தால் அவனே உன்னைக் கொண்டு போய்க் கொண்டுவந்திருப்பானே!" என்றார்.

இரண்டாவது நிசமாக நடந்தது. பேர்களைக் குறிப்பிட அவசியமில்லை.

என்னுடைய சகபாடிகளில் ஒருவர் புதிதாக மாக்ஸியத்தால் ஈர்க்கப்பட்டு இயங்கியல் பற்றி நிறைய வாசித்தார். தேனீர் அருந்தப் போனாலும் இயங்கியல் பற்றியே பேசுவார். படம் பார்க்கப் போனாலும் சாப்பிடப் போனாலும் இயங்கியலே பேச்சாக இருந்தது. ஒருநாள் ஒரு இளம் பட்டதாரி மாணவர் எங்களைப் பார்த்துப் போக வந்திருந்தார். அவர் முன்னிலையிலும் இயங்கியல் பற்றிய பேச்சு எழுந்தது. மிகவும் மரியாதையாக "இயங்கியல் என்றால் என்ன என்று சொல்ல முடியுமா?" என்று கேட்டார். தோழர் பெருமையுடன் "அதையெல்லாம் லேசாக விளக்க முடியாது. நிறைய வாசிக்க வேண்டும்." என்றார். பழைய மாணவர் ஒருவித

www.tamilarangam.net

*சலனமுமின்றி "இயங்கியலைக் கொண்டு என்ன செய்ய முடியும் என்றாவது சொல்ல முடியுமா?" என்றார். தோழர் மிகவும் உற்சாகமாக "எதை வேண்டுமானாலும் செய்ய முடியும்." என்றார். பழைய மாணவர் "என்னுடைய பாலுணர்வை எப்படி இயங்கியல் மூலம் கட்டுப் படுத்தலாம் என்று சொல்கிறீர்களா?" என்று சிரிக்காமலே கேட்டார். அதற்குப் பிறகு நம்மிடையே இயங்கியலுக்குச் சிறிது ஓய்வு கிடைத்தது.*

சீடர் நீர்மேல் நடக்கக் கற்றது போலவும் தோழர் இயங்கியல் பற்றிக் கற்றது போலவும் தமிழவன் அமைப்பியல் பற்றிக் கற்றிருக்கக் கூடுமோ என்னவோ. தமிழில் அமைப்பியல்வாதத்தைப் பற்றி முதலில் வெளிவந்த நூல் 1982 மட்டில் வந்த "ஸ்ட்ரக்சுரலிஸம்". தமிழவன் எழுதியது. அதை வாசித்து விளங்குவதற்கு ஒருவர் எடுக்க வேண்டிய சிரமம் அதிகம். அதற்குப் பதிலாக, அவர் ஆங்கிலமோ பிரெஞ்சு மொழியோ கற்று அந்த மொழியில் ஏதாவது நல்ல புத்தகத்தை வாசித்து அந்த விஷயத்தை அறிய அதைவிட அதிகம் சிரமம் தேவைப் பட்டிருக்குமோ தெரியாது.

தமிழ்ப் புத்திஜீவிகளும் இஸங்களும்

தமிழ்நாட்டிலே புதிய 'இஸங்'களுக்கும் 'லாஜி'களுக்கும் எப்போதுமே மவுசு உண்டு. யாருமே முன்பு அறிந்திராத ஒரு இஸத்தையோ, லாஜியையோ கண்டுபிடித்த ஒருவர், மா வெந்து உருகி ஆவியாகும்வரை அரை அரையென்று அரைத்துத் தள்ளலாம். அந்த இஸமோ லாஜியோ அவர்களது பேட்டை. அதற்குள் அயலார் கால் வைத்தால் வந்தது தகராறு.

'புதுமை புதுமைக்காகவே' என்ற போக்கைப் பற்றிய எனது சொற்கள் புதிதாகத் தமிழுக்கு எதையும் கொண்டு வருகிறவர்களை ஏளனம் செய்ய முனையவில்லை. எல்லாமறிந்த விதமாக நடக்கிற பம்மாத்துக்களை மட்டுமே கடுமையாக விமர்சிக்கிறேன். ஒருவர் புதிதாகக் கொண்டுவரும் இஸமோ லாஜியோ புதிய விஷயங்களையும் புதிய அணுகுமுறைகளையும் நமக்குக் காட்டுகிற அளவில் அவரது பங்களிப்பு முக்கியமானது. அதன் நிறைகுறைகளை அவர் நிதானமாக ஆராய்ந்து விளக்குவாரானால் அது போற்றத் தக்கது. அதன்மூலம் மட்டுமே சில காரியங்கள் சாத்தியம் என அவர் நம்பினால் அதை அவ்வாறு பிரயோகித்துக் காட்ட வேண்டும். தமிழவன் அமைப்பியல்வாதத்தின் மூலம் செய்து காட்ட முனைவதைக் கேள்விக்கு உட்படுத்த எவருக்கும் உரிமை உண்டு. நான் என்னுடைய உரிமையை இங்கு பிரயோகிக்கிறேன். என்னுடைய அமைப்பியல் அறிவின் அளவோ தரமோ இங்கு முக்கியமானவை அல்ல. என் கைம்மண்ணளவுக்குள் அமைப்பியல்வாதம் அடங்கவில்லை. ஆயினும் தமிழவனது புதிய நூலின் தன்மையை அளவிட அது தடையாக இல்லை.

அமைப்பியல் அணுகுமுறையைப் பாவித்து விஷயங்களை ஆராய்வதன் மூலம் எதைச் சாதிக்கலாம் என்பதல்ல இங்குள்ள பிரச்சனை. தமிழவன் இநத் நூலில் எதைச் சாதித்துள்ளார் என்பதே நமது கவனத்துக்குரியது. முன்னுரை தவிர எட்டுக் கட்டுரைகள் உள்ள இத்தொகுப்பில் அமைப்பியலின் பிரயோகம் பற்றி நேரடியான விளக்கம் உள்ள ஒரு கட்டுரை "அமைப்பியல் திறனாய்வும் தமிழும்". மற்றையவற்றில் அமைப்பியல் பற்றிய தமிழவனது புரிதல் வேறுபடும் அளவுகளிற் புலனாகிறது.

விஞ்ஞானம் பற்றித் தமிழவன் வைத்திருக்கும் பார்வையும் தமிழ் மாக்ஸிய விமர்சகர்கள் பற்றிய அவரது கணிப்பீட்டின் விளைவுகளும் பெரும்பாலான கட்டுரைகளில் வெளிப்படுகின்றன. அவரது தாக்குதலுக்குப் பிரதான இலக்காக

www.tamilarangam.net

இருப்பவர் கைலாசபதி. அவரது பார்வையில் மாக்ஸிய இலக்கிய விமர்சனத்தின் சகல குறைபாடுகட்கும் காரணி Positivism எனப்படும் பொருண்மைவாதம்(?). மேலைய (முக்கியமாக பிரித்தானிய) மாக்ஸியவாதிகளின் வழிகாட்டல், பண்டித மாக்ஸியம் (பண்டித அமைப்பியல்வாதம் என்று ஒன்று இருக்குமா?) என்றவாறு அக் குறைபாட்டுக்கு ஆதாரமாகச் செயற்பட்டவற்றின் பட்டியல் நீளுகிறது. பிறகு சர்வரோக நிவாரணியாக தமிழவனுடைய அமைப்பியல் வந்து தமிழ் இலக்கிய விமர்சனத்தின் உயிரைக் காக்கிறது.

தமிழவனின் அமைப்பியல் நோக்கு ஆக்க எழுத்தாளன் தன் படைப்பினுள் விமர்சகனாவதை எதிர்க்கும் (ப.95). ஆய்வறிவாளன் விமர்சகனாவதற்குக் கண்டனம் தெரிவிக்கும் (ப.35). அங்கே கே.டானியலின் சாதி உணர்வு(!) கைலாசபதியின் விமர்சனக் குறைபாடுகள் எல்லாவற்றுக்கும் ஆதாரபூர்வமான விளக்கங்கள் இருக்கும். இலங்கையின் தேசியவாதத் தலைமையான தமிழரசுக் கட்சி (தமிழவனுக்கு பெடரல் கட்சி) இடதுசாரி இயக்கம் பற்றிய மதிப்பீடுகள் தமிழகத்தில் தி.மு.க, கம்யூனிஸ்ட் கட்சி என்பன பற்றிய தமிழவனது மதிப்பீடுகளின் அடிப்படையில் கண்மூடித் தனமாக மேற்கொள்ளப்படும். "இந்தியாவிலும் இலங்கையிலும் பரவிய மாக்ஸியம் இவ்விரு நாடுகளின் காலனியாதிக்க எஜமானர்களாயிருந்த பிரிட்டிஷ்காரர்கள் வழியாகத்தான் வந்தது என்பதைக் கவனிக்க வேண்டும்." (ப:25) என்று தமிழவன் எழுதுவதில் உள்ள பிசகு கவனயீனத்தின் விளைவுதான். ஆனாலும் இலங்கையில் எவ்வாறு ட்ரொட்ஸ்கியம் அதிமுக்கிய இடதுசாரிக் கட்சிக்கு வழிகாட்ட நேர்ந்தது என்பதற்குத் தமிழவனுடைய விளக்கம் என்னவென்று தெரியவில்லை. கைலாசபதி மீது அவர் சுமத்துகிற குற்றத்தை விடப் பாரதூரமான குற்றங்கள் அவர் எழுத்தில் உள்ளன.

<u>டானியலைக் கூறுபோட்டுக் கண்டது</u>

கதைசொல்லியின் அரசியல் என்ற கட்டுரை டானியலின் "கானல்" பற்றிய விமர்சனம். இது யதார்த்த பாணி நாவலைப் பற்றிய கண்டனமுங்கூட. தமிழவனின் அபிப்பிராயத்தில் யதார்த்தபாணி நாவல் உண்மையைச் சொல்வதாக வேஷம் போடும். அதைத் தோலுரித்துக் காட்டி அப்பாவி வாசகனை ரட்சிப்பது விமர்சகனின் கடமை. மிகையான கூற்றுத்தான். ஆனாலும் அது ஒரு நியாயமான அடிப்படையில் எழுகிறது. டானியலின் நாவலைத் தோலுரித்துத் தமிழவன் கண்டுபிடித்தது என்ன என்று பார்ப்போமா? கதைசொல்லியின் குரல் கிறிஸ்தவ மதச் சாய்வும் உயர்சாதி மீதான சாய்வையும் காட்டுகிறதாம்! பாவம் டானியல். இரு பாகங்களில் வந்த பஞ்சமர் நாவலில், உயர்சாதியார் மீது துவேஷத்துடன் எழுதியதாகக்

## பதிவுகள்

முதன்முதலாக நோர்வேயில் முழு ஓவிய நூலாக குணாவின் பதிவுகள் வெளியாகியுள்ளது. நோர்வேயின் வெவ்வேறு நகரங்களில் காட்சிக்கு வைக்கப்பட்ட இவை பார்வையாளர்கள் பலாது வரவேற்பைப் பெற்றவை. பிரதி ஒன்றின் விலை 25 குறோணர்கள். உரிய தொகையைச் சுவடுகளுக்கு அனுப்பிப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

www.tamilarangam.net

கண்டிக்கப்பட்ட மனிதர். இன்னொரு அபாரமான போடு போடுகிறார் தமிழவன்: "கதைசொல்லி நாவலின் மொழியின் குரல். மொழியை அது என்று கூறலாம் தானே. 'அவள்' என்று ஏன் கூறக்கூடாது என்று பெண்மைவாதிகள் கேட்பார்கள். கதைசொல்லி 'அவள்' என்று பார்த்தால் ஒரு பெண்ணிய விமர்சனம் கிடைக்கும்.

இப்போது என் நோக்கம் அதுவல்ல." (ப105). தமிழவன் தமாஷ் பண்ணுகிறாரென நம்புகிறேன். அல்லாது போனால் அவரது அமைப்பியல்வாதம் எவ்வளவு எளிதாக ஒரு பெண்ணியப் பார்வையைச் சாத்தியமாக்கி விடுகிறது என்று நாம் அசந்து போகவேண்டும். டானியலின் விமர்சகனின் பிரச்சனை என்னவென்றால், டானியல் சித்தரிக்க முனையும் சமுதாயச் சூழலையே அறியாமல், எட்ட இருந்து உதிர்க்கும் ஊகங்களுக்கு அமைப்பியல் வர்ணம் பூசி அவற்றை உண்மையாக்கும் அவஸ்தைதான்.

பாரதிதாசனில் தெரியாது போனவை

பாரதிதாசன் பற்றிய ஆய்வில் பாரதிதாசனின் ஒரு அம்சம் வெகு கவனமாக மூடிக் கட்டப் பட்டுள்ளது. "பாரதிதாசனின் தமிழுணர்வு நாணயமானது. பொருள் செறிந்தது. அதனைக் குறைகூற முடியாது. ஏனெனில் தமிழ் என்ற குரலின் மூலம் அவர் வலியுறுத்தியது வேறு சிந்தனைகளையாகும்" (ப.132). பாரதிதாசனுக்குள் இருந்த ஒரு முரண்பாடு பழமையை எதிர்க்கும் பகுத்தறிவுவாதப் பார்வைக்கும் 'தமிழின் பழம்மேன்மைக்கு' மீளும் அகச்சார்பான ஆவலுக்குமிடையிலான மோதல். இதை அவராற் தீர்க்க முடியவில்லை. இது முழுத் திராவிட இயக்கத்திற்குள்ளும் இருந்த பிரச்சினை. இதைக் கவனமாக ஒதுக்கி வைப்பதன் மூலம் பாரதிதாசனது தமிழுணர்வு பற்றிய புரிதலைப் பலவீனப் படுத்த மட்டுமே முடியும். வடமொழியைத் தமிழுக்கு எதிரி என்று காட்டித் தமிழுக்கு நிசமான ஆபத்தாக வந்த ஆங்கில மோகத்தை (முக்கியமாகத் தமிழ்நாட்டுப் புத்திஜீவிகளது ஆங்கிலத் தமிழ்நடை போன்ற வெளிப்பாடுகளை) முற்றாகவே தவறவிட்டவர்களுள் பாரதிதாசனும் ஒருவர்தான். பாரதிதாசனின் சமூகப் பிரக்ஞையின் வலிய அம்சங்கள் பலவீனப் படுவதும் இந்தக் குறுகிய பார்வையின் விளைவுதான். எனக்கு இந்த ஆய்வின் நோக்கம் என்னவென்று தெரியாது. அது எதுவானாலும், மற்றவர்களுடைய எழுத்துகளில் இல்லாத முரண்பாடுகளை எல்லாம் தேடியறிய வல்ல கட்டுரையாளர், பாரதிதாசனுக்குள் உள்ள அடிப்படையான முரண்பாடுகளை மட்டும் அழகாக ஒதுக்கிவிட்டு "பாரதிதாசனில் தமிழ் எனும் அரத்த பரிமாணத்தை" அலசுகிறார்.

ஈழத்துப் புதுக்கவிதையா? அதென்ன?

தமிழ்ப் புதுக்கவிதை பற்றிய ஒரு கட்டுரை. அங்கே ஈழத்துக் கவிதை பற்றி ஒரு சொல் கிடையாது. "எண்பதுகளில் புதுக்கவிதை: தமிழனின் இரண்டாம் எதார்த்தம்" என்று கட்டுரைத் தலைப்பு. பசுவய்யா என்கிற சுந்தர ராமசாமி, பிரம்மராஜன் போன்றவர்களது தத்துவ விசாரங்களை எல்லாம் விழுந்து விழுந்து ரஸித்துப் போதாக்குறைக்கு தன்னுடைய வியாக்கியானங்களையும் சேர்த்து அவர் காணும் இரண்டாம் யதார்த்தம் பற்றிய விளக்கம் இது:

எண்பதுகளில் கவிஞன் முற்றாய் உள்முகமாகி விட்டான்..... ஆனால் உள்முகமாகப் போகும் பொருள்முதல்வாதி மொழியின் பயங்கர உள்தார்க்கத்தின் வீச்சால் ஆகர்ஷிக்கப் படுவது நடக்கும். எண்பதுகளில் புதுக்கவிதைகளில் அதுதான் நடந்துள்ளது. புறப்போராட்டத்தைப் புதுக்கவிஞர்கள் இப்படி நடத்தியுள்ளனர். இது அவர்களைச் சமூகப் பொறுப்பற்றவர்

www.tamilarangam.net

களாக்கிவிடாது. புதுக் கவிதையின் சமூகப் பொறுப்பு வடிவம்தான் இதுவும். உள்வயமாக, அதாவது மொழிவயமாகிப் புற உலகக் கொடுமையைக் கண்ட பாணி இது. இதில் ஆத்மாநாம் மட்டும் புற உலகக் கொடுமையையும் சேர்த்து உள்வயமாக்கும் கவிஞராகக் கிடைக்கிறார்......

"இந்த இரண்டாம் எதார்த்தமென்பது இவ்வகையில் பார்த்தால் முதல் எதார்த்தத்தின் சாயை. அதாவது முதல் எதார்த்தமே ஒரு சாயை என்கையில் இரண்டாம் எதார்த்தம் அதன் இரண்டாம் சாயை..... முதல் எதார்த்தம் ஒரு நிழல் என்பதை இரண்டாம் எதார்த்தம் நிரூபிக்கிறது..... மொழிவயப்பட்ட முதல் எதார்த்தம் தத்துவமாய், சித்தாந்தமாய் எதார்த்தத்தை ஒரு சட்டகத்துள் அடக்குகையில் இரண்டாம் எதார்த்தம் முளைக்கிறது.... வறுமை, சுரண்டல் பற்றி ஆயிரமாயிரம் வரிகள் கவிதையாய், கட்டுரையாய், வேறு பல வடிவங்களாய் எழுதப்பட்ட போது உண்மையை நுட்ப உணர்வால் கண்டு எழுதப்பட்ட இரண்டாம் யதார்த்த மொழியே இரண்டாம் யதார்த்தக் கவிதைகள்."

தமிழ்நாட்டுப் புதுக்கவிதையின் அவலத்தை, சமுதாய உணர்வினின்று ஒதுங்கிய சோகைபிடித்த நிலைமையை அழகுபடுத்த வேண்டுமானால் நிச்சயமாக அதற்கான ஆட்கள் இருக்கிறார்கள். தமிழ்நாட்டுப் புதுக்கவிதைகளை ஈழத்துப் புதுக்கவிதைகளுடன் ஒப்பிட்டால் இந்த இரண்டாம் யதார்த்தம் என்ற கவிதைப் போக்கின் வறுமை விளங்கிவிடும். தமிழவன் இதை அறியாதவரல்ல என ஊகிக்கிறேன். தமிழவன் போற்றும் தமிழ்நாட்டுப் புதுக்கவிதை சமுதாய யதார்த்தத்தினின்று தப்பி ஓட முனைகிறது. அதற்கு என்ன பேர் வைத்தாலென்ன.

ராஜாவின் துணி அலுமாரி

இந்த இடத்தில் தமிழவன் 1983 அளவில் சுந்தர ராமசாமியின் ஜே.ஜே.:சில குறிப்புகள் பற்றி எழுதிய நீண்ட விமர்சனம் பற்றிக் குறிப்பிடுவது பயனுள்ளது. மையத்தைத் தகர்க்கும் நாவல் என்றும் இடதுசாரிகள் மீது ராமசாமியின் ஒட்டுமொத்தமான தாக்குதல் பற்றிக் குறிப்பிட்ட விமர்சனங்களை எல்லாம் தட்டிக் கழித்தும் எழுதியிருந்தார். ராமசாமியின் எழுத்தின் நேர்மையீனம் பற்றி நான் 'அலை'யில் வந்த சுருக்கமான விமர்சனத்தில் எழுதியிருந்தேன். அவரது பாத்திரப் படைப்பின் குளறுபடிகள் பற்றியும் நாவலுடைய யதார்த்தப் பண்பை அதிகப்படுத்தும் முனைப்பிலான சில பம்மாத்துகளைப் பற்றியும் எழுதியிருந்தேன். சில ஆண்டுகள் முன் ஞானி இந்த நாவல் பற்றி எழுதியதை அண்மையிற் காணக் கிடைத்தது. எனக்குப் பல விஷயங்களில் மிகவும் உடன்பாடாக இருந்தது. தமிழவனுடைய அமைப்பியற் பார்வை அப்பட்டமாகத் தெரியும் உண்மைகளை அலட்சியம் செய்கிறது. ஏனெனில் ராஜாவின் புதிய ஆடைகளை வர்ணிக்கும் ஆற்றல் உள்ள ஒருவருக்குத்தான் சாமான்யரின் கண்களுக்குத் தெரியாத சிறப்புகளெல்லாம் தெரியும்.

(அடுத்த இதழில் முடியும்)


## எரியும் வண்ணங்கள்

தமிழ் ஓவியர்களில் குறிப்பிடத்தக்க ஓவியராக வளர்ந்துள்ள புகழேந்தியின் ஓவியங்களைக் கொண்ட தொகுதி வெளிவந்துள்ளது. விலை 75இந்திய ரூபாய்கள். நூலைப் பெறத் தொடர்புகளுக்கு: தாமரைச்செல்வி பதிப்பகம், 31/48 ராணி அண்ணா நகர், சென்னை 78.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம்.ஏ.நுஃமானின் கவிதைகள்

## உனது போர்

தோழனே
யாருடன் பொருதினாய் நீ?
யாரிடம் தோற்றாய் இறுதியில்?

உன் துப்பாக்கி
உன் கண் ஒன்றைக் குறிபார்த்துச் சுட்டது
நீ அரைக் குருடானாய்.

உன் துப்பாக்கி
உன் காது ஒன்றைக் குறிபார்த்துச் சுட்டது.
நீ அரைச் செவிடானாய்.

உன் கை ஒன்றையும் துளைத்துச் சென்றது
உன் துப்பாக்கிக் குண்டு
நீ ஒரு சொத்தியன் ஆனாய்.

உன் கால் ஒன்றும் பலியாயிற்று
உன் துப்பாக்கிக் குண்டுக்கு
நீ முடவனும் ஆனாய்.

தோழனே
நீ உன்னோடே பொருதினாய்
உன்னிடமே தோல்வியுற்றாய்
உனது உடலும் ஊனமுற்றது
உனது போரும் தோல்வியுற்றது.

## கடவுள்

கடவுளே கடவுளே
நீ எங்கே நீ எங்கே
என்றேன் நான்.

ஒரு மௌனம்
பின் ஒரு முனகல்......

இதோ இதோ
இந்தச் சாம்பல் குவியல்
நான்தான்

இதோ இதோ
இந்த மனிதப் பிணங்களும்
நான்தான்.

இதோ இதோ
இந்த உறைந்த குருதி
எனதுதான்.

கடவுளே கடவுளே
என்றேன் நான்.

www.tamilarangam.net



## என் கடைசி வார்த்தைகள்

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்

எங்கு சமத்துவம் இல்லையோ
அங்கு சமாதானம் இல்லை
எங்கு சமாதானம் இல்லையோ
அங்கு சுதந்திரம் இல்லை

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்.

நீ என் சமத்துவத்தை நிராகரிக்கிறாயா?
நீ சமாதானத்தை இழந்தாய்
நீ உன் சுதந்திரத்தை இழந்தாய்

என் சமத்துவத்தை அழித்திட
துப்பாக்கியை நீட்டுகிறாயா?
துப்பாக்கி சமாதானத்தின் எதிரி
சுதந்திரத்தின் எதிரி

என் கடைசி வார்த்தைகள் இவைதான்
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்
வான் அதிரக் கூவுங்கள் மனிதர்களே
சமத்துவம் சமாதானம் சுதந்திரம்.

## அடிமை

கைகட்டு
வாய் பொத்து
மௌனமாய் இரு
அன்றேல் செத்துமடி
என்றது துப்பாக்கி

"ஆம்" என்று சொல்லத்தான்
வாய்திறந்தேன்
தொண்டையைக் கிழித்து
சென்றதொரு குண்டு
செத்து விழுந்தேன் நான்.

www.tamilarangam.net

# நாநந்தி

### இலக்கியத்துக்கு வர்க்கச் சார்பு உண்டு

சுவடுகள் 59இல் "உண்மையான உண்மை" என்ற தலைப்பில் புலவன் எழுதிய விடயத்தை ஒட்டிய ஒரு விமர்சனத்தை முன்வைக்கிறேன்.

எஸ்.வி.ராஜதுரையின் "ரஷ்யப் புரட்சி இலக்கிய சாட்சியம்" என்ற புத்தகத்தை ஒட்டிய கருத்துகளை புலவன் எடுத்து சில கருத்துகளை சொல்ல முற்பட்டுள்ளார்.

ஒரு உண்மை என்பது என்ன? அதை எப்படித் தீர்மானிப்பது? என்கிறபோது, ஒரு செய்தி அது எந்த சமுதாயத்தைப் பிரதிபலிக்கிறது என்ற ஆய்வு மட்டுமே தீர்மானிக்கிறது.

இதை ஆய்வுக்கு எடுக்கும் ஒவ்வொரு மனிதனும் ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் இருந்தபடியே காண்கின்றனர்.

இந்தவகையில் எஸ்.வி.ராஜதுரைக்கும், புலவருக்கும், எனக்கும், ஸ்டாலினுக்கும், ட்றொட்ஸ்கிக்கும் ஒரு சமுதாயக் கண்ணோட்டம் இருக்கிறது. அந்தச் சமுதாயக் கண்ணோட்டத்தில் இருந்தபடியே விடயங்களை மதிப்பிடுகின்றனர்.

என்பதையே அவரின் அடிப்படைக் கோட்பாடாகவும் வளர்த்துக் செல்கின்றார்.

இலக்கியம் இச்சமூகத்தில் வர்க்கம் சார்ந்து செயல்படாத ஒரு நடுநிலைத் தன்மை வாய்ந்தது என்ற இக்கோட்பாடு பாட்டாளி வர்க்க சமுதாயத்துக்கு எதிரானது. இதை அவரின் எழுத்தில் நாம் காணமுடியும். உதாரணமாக அண்மையில் பாரிஸில் வெளிவரும் "மௌனம்" என்ற சஞ்சிகையில் அவர் எழுதியதைப் பார்ப்போம். "அரசியல் இலக்கியச் என்றுகூடச் சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் புரட்சி என்பது தலைமையின் அரசியல் நடவடிக்கை....." (தொழிலாளி வர்க்கத்தின் அரசியல் நடவடிக்கை பற்றி என்ற விமர்சனத்தில்)

எஸ்.வி.ராஜதுரையின் உலகக் கண்ணோட்டம் நடுநிலையானது என்ற போர்வையில் தன்னைப் புரட்சியாளராக இனங்காட்டியபடி பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக உள்ள நபரே. அவரது ஆய்வுகள் செயல்கள் எல்லாம் புரட்சிக்கு எதிரானவையாகவே உள்ளன.

www.tamilarangam.net

ஆதிக்கத்தில் உள்ள சமூக அமைப்புக்கு சார்பாகவும், எதிராகவும் செய்திகள் இருப்பதுடன் இது வர்க்க இருப்புடன் நீடிக்கின்றது.

இது சோவியத்தில் புரட்சிக்குப் பின்பும் நீடித்துள்ளது. எஸ்.வி.ராஜதுரை சோவியத் புரட்சிக்குப் பிந்திய பக்கங்களில் அச்சமூக அமைப்பின் வர்க்க செயற்பாட்டை நிராகரித்த வகையில் அவரது புத்தகம் அமைகிறது.

அந்த வகையில் புத்தகத்தில் வர்க்க சமுதாயப் பிரச்சனைகளையிட்டு அலட்டிக் கொள்ளாதது மட்டுமன்றி எஸ்.வி.ராஜதுரை இலக்கியத்துக்கு வர்க்கத் தன்மை இருக்க முடியாது சண்டைகளில் மௌனம் சிக்கிக் கொள்ளாமலிருக்க வேண்டும்" (மௌனம் 3)

இந்த வகையில் எஸ்.வி.ராஜதுரை மௌனத்துக்கு ஆலோசனை வழங்குவதன் மூலம் நீங்கள் வர்க்கமற்ற இலக்கியத்தைப் படைப்பதாகப் பாராட்டுகின்றார். வர்க்கம் என்ற குழுச்சண்டையில் ஈடுபடாது நடுநிலையாக இருங்கள் என்கின்றார். இதன் மூலம் இலக்கியம் மீதான வர்க்க இருப்பை நிராகரித்தல் என்பதன் வெளிப்பாட்டில் எழுந்ததே 'ரஷ்யப் புரட்சி இலக்கிய சாட்சியம்' என்ற புத்தகமும்.

அரசியல்/ இலக்கியச் சண்டைகளில் சிக்கிக் கொள்ளாத நடுநிலை பற்றியோ, அரசியலில் ஈடுபட வேண்டாம் என்ற கூற்றுகளினை ஒட்டி எங்கெல்ஸ் என்ன கூறுகிறார் எனப் பார்ப்போம். "வர்க்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்று நாம் விரும்புகின்றோம். இதை நிறைவேற்றுகிற வழி எது? பாட்டாளி வர்க்கத்தின் அரசியல் ஆதிக்கம் ஒன்றே வழியாகும். இது எங்குமே அதிகரிக்கப் பட்டிருக்கும்போது, அரசியலில் தலையிட வேண்டாம் என்று நம்மிடம் சொல்கிறார்கள். தலையிடாமையைப் பின்பற்றுகிற எல்லோரும் தங்களைப் புரட்சியாளர்கள்

எஸ்.வி.ராஜதுரை "ரஷ்யப் புரட்சி இலக்கிய சாட்சியம்" என்ற புத்தகத்தில் இறுதிப் பக்கத்தில் சோஷலிசத்தைப் பற்றி மதிப்பீட்டில் லெனின் காலத்துக்குப் பின் கொர்பச்சேவின் ஆட்சிக் காலமே சோசலிசத்தை உண்மையில் அமுல் செய்வதாக வாதாடுகின்றார்.

சாதாரணமாக புரட்சியில் பற்றுள்ள அனைவருக்கும் தெரியும் கொர்பச்சேவின் சோசலிசம் பற்றி. இதைச் சோசலிசம் என ஏகாதிபத்தியத்துடன் இணைந்து எஸ்.வி.ராஜதுரை அறைகூவல் விடுக்கும்போது நாம் அந்தப் புத்தகத்தையும் மதிப்பிட முடியும்.

எஸ்.வி.ஆர். அப்புத்தகத்தில் அடுக்குகின்ற இலக்கியவாதிகளின் புத்தகங்களில் பெரும்பாலானவை கொர்பச்சேவ் வெளியிட்டதுடன் சில தமிழிலும் கிடைக்கின்றன. அவ்இலக்கியங்களை ஒரு புரட்சியாளன் புரட்சிகர சமுதாயத்தில் வைத்து ஒப்பிடும்போது எப்படி எதிர்ப் புரட்சிக்குச் சேவை செய்கின்றது என்பதைக் காணமுடியும்.

உதாரணமாக டொக்டர் ஸிவாகோ என்ற நாவலை எழுதிய எழுத்தாளனைப் பாதுகாக்க முனையும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எஸ்.வி.ராஜதுரை ஒரு கொம்யூனிச விரோதப் படைப்பை கொம்யூனிசச் சார்புப் படைப்பாக வாதிடுகின்றார். இதை நான் உதாரணமாக எடுக்கக் காரணம் இந்நாவலுக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டு இருந்தது.

உலகில் இன்றுவரை நோபல் பரிசு எந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது? ஒரு பாட்டாளி வர்க்க எழுத்தாளருக்கு நோபல் பரிசுக்குழு ஒருக்காலும் பரிசு வழங்காது என்பதை நாம் அனைவரும் நன்றாக அறிவோம். ஏனெனில் நோபல் குழு என்பது எல்லா வகையான சரண்டும் மேற்தட்டுப் பிரிவுகளை உள்ளடக்கியதே.

அவர்கள் இதற்குப் பரிசு வழங்கின் அந்நாவல் எப்படிக் கொம்யூனிச எதிர்ப்பைப் பிரசாரம் செய்கின்றது என்பதைக் காணமுடியும். இந்த நாவலைக் கொம்யூனிச விரோதப் படைப்பாளிகள் படமாக்கியதுடன் இன்று ஏகாதிபத்திய நாட்டுத் தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் போட்டு கொம்யூனிச விரோதப் பிரசாரத்தை முடுக்கிவிட்டுள்ளனர். இந்த நாவல் எஸ்.வி.ராஜதுரைக்குக் கொம்யூனிசச் சார்பு நாவலாகவும் இந்நாவல் கொம்யூனிச சமுதாயத்தில் தடைசெய்யப்படக் கூடாது என அக்காலத்திற்கு ஏற்ப சமரசங்கள் செய்யப் பட்டன.

இக்காலத்தில் அக்காலகட்ட நிலைமைகளுடன் இலக்கியத்தின் மாறுபட்ட நிலைகளில் ஐக்கியம், எதிர்ப்பு என எல்லாம் நிகழ்ந்தன. இக்காலத்தில் பழைய சரண்டும் சார்பு இலக்கியம் மீட்சிபெற இடைவிடாது முயன்றது.

இக்காலத்தில் ஸ்டாலின் தலைமையிலான கட்சி சில கோட்பாட்டுத் தவறுகளை இழைத்தது என்பது உண்மை. நகரத்துக்கும் கிராமத்துக்கும் இடையிலும், விவசாயிகளைப் புறக்கணித்தும், நிலங்கள் கூட்டுப் பண்ணையாக்குவதில் வேகப்படுத்தியதில் எனச் சில தவறுகளை இழைத்தது. இத்தவறுகள் எல்லாவற்றிலும் பாதித்தன. இந்த வகையில் இலக்கியத்திலும் பாதித்தன.

இத்துடன் எதிர்ப் புரட்சி சட்டவிரோதமாகச் செயற்பட்ட நிலைகளிலும் வன்முறைகள் ஊடாக எதிர்ப் புரட்சியை அடைய முற்பட்ட நிலைகளில் எதிர்ப்புரட்சியை அழிப்பதில் சிறுதவறுகளைக் கட்சி இழைத்தது. அப்போது இது இலக்கியம் உட்பட எல்லாத் துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியது.

சோவியத் எழுச்சிக்குத் தலைமை தாங்கிய ஒருவர் ட்றொஸ்கி. அவர் 1917களில் புரட்சியின் எழுச்சியுடன் போல்ஷவிக் கட்சியுடன் ஒரு குழுவாகவே இணைந்தவர். அதுவரை அதற்கு எதிராகவே போராடி வந்தவர்.

1917ல் இணைந்த ட்றொஸ்கி யுத்த காலத்தில் பல முரண்பாடுகளால் பின்தள்ளப்பட்டு வாழ்வுக்கான யுத்தத்தை நடாத்திய நிலைகளில்கூட ட்றொஸ்கி முரண்பட்டபடியே இருந்தார். அவர் சார்ந்த குழு எப்போதும் போல்ஷவிக் கட்சிக்குள் போராடியது.

உள்நாட்டு யுத்தம் முடிந்த நிலைகளில் லெனினின் நோய், பின் மரணத்துடன் கூடிய காலங்களில் அவர் போல்ஷவிக் கட்சியுடன் போராடினார். அதேநேரம் சட்டவிரோதச் செயல்பாடுகளில் செயல்பட்டார். இதை ட்றொஸ்கி தனது சுயவரலாற்றில் குறிப்பிட்டுச் சொல்கிறார். 1923முதலே (லெனின் காலத்தில்) சட்டவிரோதச் செயலில் ஈடுபட்டதைத் தனது சுயவரலாற்றில் கூறுகிறார்.

சட்டவிரோத நடவடிக்கை என்பது உள்ள ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான செயல்களே. இக்காலத்தில் கட்சி, அரசு என நீண்டகாலம் செயற்பட்ட ட்றொஸ்கி இரகசிய வேலைகளைச்

www.tamilarangam.net


வாதிடுவது அந்தச் சமுதாயத்தைப் படைக்க, புரட்சியைக் குழிபறிக்கச் செய்யும் முயற்சியாகும்.

சோவியத் சமூகத்தில் எந்த எழுத்தாளனும் எழுதச் சுதந்திரம் இருந்தது. அவை அச்சமூகத்தில் விமர்சனத்துக்கு உள்ளாகியதுடன் சமுதாய அமைப்புக்கு எதிரானவை தடைசெய்யப் பட்டன என்பதே உண்மை.

சுரண்டுவதை ஆதரிக்கும், சுரண்டும் சமுதாயத்தை மீட்க என முயன்ற அனைத்தும் விமர்சனத்துடன் தடை செய்யப்பட்டன; அல்லது திருத்தக் கோரப்பட்டன. இதைமீறிச் சட்டவிரோதமாகவும், சுரண்டும் சமுதாயத்தை மீட்க முனைந்தவர்கள் தண்டிக்கப் பட்டனர்.

இந்நிலையில் சோவியத் சமுதாயத்தில் லெனின் காலத்தில் அதாவது புரட்சிக்குப் பிந்திய நெருக்கடியான காலத்தில் இடைக்காலப் பொருளாதாரம் அமுல் செய்யப்பட்டது. அங்கு சில முதலாளித்துவ உற்பத்திகள் அனுமதிக்கப் பட்டன.

அதிலிருந்து மீண்ட காலம் ஸ்டாலின் ஆட்சியுடன் அம் முதலாளித்துவ உற்பத்தி அழிக்கப் பட்டது. பின் இரண்டாம் உலக யுத்த காலத்தில்



எஸ்.வி.ராஜதுரை எழுதுவது என்பது இந்த வகையில் பாதிக்கப் பட்டவைகளை விமர்சன நோக்கில் இருந்து எழுதுவது அல்ல. மாறாக இவைகள் பற்றி அக்கறை இன்றி எதிர்ப் புரட்சிக் கலை இலக்கியத்தையே

பாதுகாப்பதுடன் இலக்கியத்துக்கு வர்க்கத் தன்மை இருக்காது என்கிறார்.

இந்த இடத்தில் புலவன், ட்றொஸ்கி பற்றி எடுத்துக் கையாண்டுள்ளார். ட்றொஸ்கி ஒரு தனிநபர் அல்ல. அவருக்கு என ஒரு அரசியற் கருத்து உண்டு. இது மாற்றுக் கருத்து என்ற வகையில் அழிக்கப் படவில்லை.

மாறாக ட்றொஸ்கி அரசியல் வாழ்வு தொடங்கியதுமுதல் போல்ஷவிக் கட்சி அவரது மரணம் வரையும், அதன்பின்பும் போராடியது. 1905ம் ஆண்டுகளில் சட்டவிரோதமாகச் செய்தார். இதை போல்ஷவிக் கட்சி தடுக்க வேண்டிய நிலை ஏற்படுவது இயல்பானதே. இந்த வகையில்தான் ட்றொஸ்கி உட்பட்ட சிலர் மீதான நடவடிக்கைகள் அமைந்தன. இதை வரலாற்று ரீதியாக சம்பவங்கள், செயற்பாடுகளுடன் நாம் காணமுடியும்.

சிவராம்

அன்புடையீர்,

சுவடுகளில் வரவரக் கவிதைகள் குறைந்து கொண்டே போகிறது. ஆங்காங்கே ஓரிரண்டு கவிதைகள்தான் பிரசுரம் பெறுகிறது. ஏன் கவிதைகளுக்கு அவ்வளவு தட்டுப்பாடா?

சுவடுகளில் இடம்பெற்ற 'இன்னும் ஒரு அரசியற் படுகொலை' என்ற குறிப்பு உண்மையிலேயே சில உண்மைகளை உணர்த்தியுள்ளது. காமினியின் மரணத்தில் கவலையுறத் தமிழ் மக்களுக்கு நியாயமில்லைத்தான். அதேபோல்தான் முஸ்லிம் மக்களும். காமினி அரசியல் மேடைகளில் முஸ்லிம் மக்களைக் கீழ்த்தரமாகப் பேசியுள்ளார். அறிவுக்குத் தீயிட்ட

www.tamilarangam.net

அரசியல்வாதியல்லவா அவர். இருந்தும் அப்பாவி ஜனங்களின் படுகொலைகளைச் சுவடுகளுடன் சேர்ந்து நானும் கண்டிக்கிறேன்.

அடுத்த இதழை எதிர்பார்த்து,
நேசங்களுடன்,
முகமட் அபார்.

சுவடுகள் ஆசிரியருக்கு,

சுவடுகள் இதழ் 59ல் பூகம்பன் சுருக்கமாகத் தனது பதில் கடிதத்தில் ஆண்களைச் சாடியிருந்தார். பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் விபச்சாரம் செய்யும் நாடுகளில் வாழும் நாம், எமது உடல் மீதான அவமரியாதையாகவே விபச்சாரத்தைக் கருதுவது நல்லது. விபச்சாரத்திற்கு அவர் கூறும் நியாயம் ஏற்றுக்கொள்ள முடியாதது. வறுமை மாத்திரம் ஒருவர் விபச்சாரத்தில் ஈடுபடக் காரணமாக ஏற்க முடியாது. ஒருவகையில் 'இலகுவான' தொழில் என்ற ரீதியிலேயே பல பெண்கள் இந்தத் தொழிலுக்கு வருகிறார்கள். நிர்ப்பந்தம் காரணமாக வருபவர்களை நான் குறிப்பிடவில்லை.

எஸ்.முரளிதரன்,
சுவிற்சர்லாந்து

## என் நினைவு

புதுவை.பொன்.கோணேஸ்

நான் படுக்கை அறையிலிருந்து
வெளியே விழிகளைச் சுழல விட்டேன்....
ஆங்காங்கே வெள்ளை நிற....
மனிதர் கூட்டம்.
வீதியோரங்களில்....... பல நிற
வாகனங்களின் வரிசைகள்...
யன்னல் திறந்தால்....
ஜில்லென்று மேனியை தொடும்
குளிர் காற்று - இருந்தும்...
சிந்தனைகளைச் சிறகடிக்கவிட்டேன்.
உற்று....... நோக்கினால்
வெண்ணிற மேடைகள் - ஆங்கே
பல நிற மேலாடைகள் என்
கண்ணுக்குத் தெரிகின்றன
ஆடி அசையும் உருவங்களாய்
கண்களுக்கு விருந்தாய்....
காட்சி தந்தன....! பாரிய
மலைகளை அரவணைக்கும்
வெண்பனித் தகடுகள் - நானோ
சிந்தனையை விட்டுவிலகவில்லை..??
நமது புண்ணிய பூமியில் - வெண்
பனிமலைகள் இல்லையே..?
தூக்கத்திலிருந்து விழித்தவன் போல
வெண்மணல் பரப்புகளும் அங்கு..... ஆனால்
ஆங்கே கோடை வெயில் இங்கே
நடுங்கும் குளிர் நமது நாட்டு மலைத்
தொடர்கள் பெரும் பயிர்களைத்தாங்கி
நிற்கிறது - ஓ
பனிக்கட்டிகள் தானோ வெள்ளை நிற...
மனிதர்களின் பாய்விரிப்புகள் என மீண்டும்
யோசித்து
விழிகளை மூடச்சென்றேன் - ஆனால் என்
நினைவு
அந்த சொர்க்க பூமியை பற்றித்தான்

www.tamilarangam.net

# காதில பூ

உலகைக் குலுக்கிய ஒக்டோபர் புரட்சியின் 77வது ஆண்டு நிறைவில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. லெனினிற்குப் பிறகான, புரட்சியின் தவறான வழிகள் இன்று எதிர்ப் புரட்சிகர மக்கள் விரோத ஆட்சியை முன்நிறுத்தியுள்ளது என்பது கவலைக்கிடமான உண்மை. சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் உடைவிற்கும் மேற்கத்தைய நலன்களுக்கும் கதவைத் திறந்துவிடத் தலைமை தாங்கியவர் தற்போதைய ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்ற்சீன்.

தமது நலன்களுக்காக சோவியத் பேரரசை வீழ்த்தக் காத்திருந்த அமெரிக்க, மேற்கத்தைய நாடுகள் யெல்ற்சீனை ஜனநாயகத்தின் காவலனாகவும், பண்பாளனாகவும் பிரச்சாரம் செய்தன. ஆனால் மூன்று வருட முடிவிற்குள் யெல்ற்சீன் பற்றிப் பல அபிப்பிராயங்கள் வெளிவருகின்றன. அவர் ஒரு குடிபோதையாளர் என்றும் வர்ணித்துச் சில ஐரோப்பியப் பத்திரிகைகள் எழுதுகின்றன.

மூன்று வருடத்தின் முன்



www.tamilarangam.net

சோவியத்தை உடைக்க யெல்ற்சீன் முன்வநத்போது ஜனநாயகத்தின் காவலனாக மேற்கத்தைய நாடுகளுக்குத் தெரிந்த யெல்ற்சீன் இன்று சிறுபான்மைத் தேசிய இனமான செச்சேனியர்கள் மீது தொடுத்திருக்கும் கொடூரமான யுத்தம் பற்றிப் பெரிய அளவில் குரல்கள் எழவில்லை. பல்லாயிரம் பொதுமக்கள் இறந்து, பலகோடி பெறுமதியான சொத்துகள் நாசமடைந்தது பற்றி இவர்களது கவலை பெரிதாக இல்லை.

ஒரு வருடத்தின் முன்பாக எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறையை ஏவி, ரஷ்யப் பாராளுமன்றத்திற்குக் குண்டு வீசி எரித்தபோது, யெல்ற்சீனை ஜனநாயகத்தின் காவலனாகவே பார்த்தன இந்த நாடுகள்.

இவற்றில் இருந்து தெரிகிறது உண்மையில் இவை ஜனநாயகத்தைக் காக்கின்றனவா என்று. உலக மக்களுக்குக் காதில் பூ. அவர்களுக்குக் கோடிக் கணக்கில் வருமானம். இதுதான் இப்போதைய ஜனநாயகம்●



● உலகநாதன்

## கங்காருக்களின் கதி

ஒரு காலத்தில் பல்கிப் பெருகிவந்த அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகமான கங்காரு வெகு வேகமாக அழிந்து வருகிறது. கங்காருவின் எண்ணிக்கை மிக அதிகளவில் வீழ்ச்சி அடையக் காரணம் கங்காருவின் இறைச்சி பெரும் லாபத்தை அள்ளித் தருவதுதான். அவுஸ்திரேலிய வர்த்தகர்கள் கங்காருவில் அதிக லாபம் காண்பதால் வருடாந்தம் பெரும்தொகை இறைச்சியை ஏற்றுமதி செய்கின்றனர். கடந்த சில வருடங்களில் வர்த்தக ரீதியான கங்காருவின் விற்பனை பல மடங்கு அதிகரித்துள்ளது. 1992ம் ஆண்டுவரை பிராந்திய மாநிலங்களான நியூசவுத் வேல்ஸ், விக்டோரியா, குயீன்ஸ்லாந்து, மேற்கு அவுஸ்திரேலியா ஆகிய பிரதேசங்களில் மக்களின் பாவனைக்காக கங்காருவின் இறைச்சி விற்பனை தடைசெய்யப் பட்டிருந்தது குறிப்பிடத் தக்கது. இதே சமயம் குடியரசாக மாறவுள்ள நாட்டின் புதிய தேசியக் கொடியில் கங்காருவின் படமும் இடம்பெற வேண்டும் எனப் பிரதமர் போல் கீற்றிங் கேட்டுள்ளார்●

● சஞ்சய்

www.tamilarangam.net

● ராமன்

# அம்பேத்காரும் சாதிவாதமும்



தாழ்த்தப்பட்ட மக்களின் மிகநேசத்துக்குரியவரும், சமூகமாற்ற சக்திகளின் விமர்சனத்துடன் கூடிய விருப்புக்கு உரியவருமான அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்காக அயராது உழைத்து வந்தவர். தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை வெறும் ஜனநாயகக் கோரிக்கைக்கு மேல் உயர்த்த முடியாதுபோன அம்பேத்காரால் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை தேசிய விடுதலையுடன் இணைப்பதில் தலையாய பாத்திரத்தை வழங்க முடியாது போனது - அவரது தேசிய விடுதலை தொடர்பான பலவீனமான நிலைப்பாடே.

இன்று தேசிய விடுதலைக்கு மாக்சிசம் தீர்வுவைக்கத் தவறிவிட்டதென்றும், அறியப்பட்ட மாக்சிசமானது போதாது பொருந்தாது எனச் சாதித்தும் வருபவர்கள் அம்பேத்கார், பெரியார் போன்றோரின் கருத்துகளை எதுவித விமர்சனமுமின்றி மாக்சிசத்தில் கலவையீடு செய்கின்றனர். இவ்வாறான கலவைவாதத்தின் கசிவு, 'சுமைகள் 11'ல் சாதிவாதமாக வெளிப்பட்டுள்ளது.

நோர்வேயின் 'வர்க்கப்போர்' (Klassekampen) பத்திரிகையாளரான றெய்டுன் அஸ்த்ரி நீடாலின் (Reidun Astrid Nydal) நேர்காணல் ஒன்றை (அம்பேத்காரின் துணைவியுடனானது) எதுவித விமர்சனமுமின்றிச் சுமைகள் பிரசுரித்திருந்தது. இந்தியப் பார்ப்பணிய தேசியக் கருத்தாடலில் அம்பேத்கார் ஊசலாடும் ஒத்த தன்மையைக் கொண்டிருந்தமையை விமர்சிக்காமல் அவரை இந்திய தேசியப் போராட்ட வீரராக சுமைகள் காட்டிநிற்பது அம்பேத்காரின் கருத்துகளையும் அவர் வழிப்பட்ட வழிமுறைகளையும் தேசிய விடுதலையின் பெயரால் கோருவதற்கான வழிமுறையே.

அம்பேத்கார் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வாழ்நாள் பூராவும் உழைத்தபோதிலும் அவர் மாக்சிசத்தின் மீது நம்பிக்கை கொண்டவரோ, பாட்டாளி வர்க்கத் தலைமையையும் அதன் வழிப்பட்ட வழிமுறைகளையும் ஏற்றுக் கொண்டவரோ அல்லர். இந்துமதம் பார்ப்பணிய மதமென்றும், சாதி என்பது மதம்தான் என்றும் கூறிய அவர் சாதியைப் புனிதப் படுத்தும் இந்துமத இதிகாச புராண இலக்கியங்களையும், அதுசார்ந்த நிறுவனங்களையும் தொடர்ச்சியாகவே அம்பலப்படுத்தி வந்தார். இதுவரை யாருமே அம்பலப் படுத்தாத அளவிற்கு அது இருந்தது. வர்ண - சாதி முறைக்கு எதிராக தலையாய போராட்டத்தை முன்னெடுத்த அம்பேத்கார் தேசிய விடுதலையோடும் அதிலிருந்து பிரிக்க முடியாத வர்க்கத் தலைமையோடும் தாழ்த்தப் பட்டோர் விடுதலையை இணைப்பதில் தவறிழைத்தார்.

தீண்டாமை ஒழிந்த, சாதி வேறுபாடு அற்ற, ஒரு ஜனநாயக சமூகத்தை விரும்பிய அம்பேத்கார் அதற்காகவே பார்ப்பணிய வர்ண - சாதிமுறைக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிராகக் கடும்பிடியாகப் போராடினார். சாதி ஒழிப்பு - உழவர் புரட்சியும் தேசிய விடுதலையும் இணையும்போதுதான், இன்றைய சமுதாய அமைப்பு அடியோடு புரட்டப்படும் போதுதான் சாத்தியமாகும் என்பதை அவர் உணர்ந்திருக்கவில்லை. இதன் காரணமாக இந்திய பார்ப்பணிய தேசிய கருத்தாடலில் சமரசமான, ஊசலாடும் தன்மையை அவர் பல சந்தர்ப்பங்களில் கொண்டிருந்தார்.

மொழிவழி மாநிலங்கள் குறித்த அவரின் விவாதத்தின்போது:

*"ஜனநாயகத்திற்கான பாதையை எளிமைப் படுத்துவது, இனமோதல்களை அகற்றுவது ஆகிய இரு காரணங்களுக்காக நாம் மொழிவழி மாநில அமைப்புகளை விரும்புகிறோம்...... மொழிவழி மாநிலத்தின் சாதகமான அம்சங்களைச் சொல்லும்போதே அதன் அபாயத்தையும் நான் சொல்லவேண்டும். ஒரு மொழிவழி மாநிலம் அதன் சொந்த மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டிருக்குமானால் அது எளிமையாக ஒரு சுதந்திரமான தேசிய இனமாக வளர்ந்துவிடும். சுதந்திரமான தேசிய இனத்திற்கும், சுதந்திரமான அரசுக்கும் இடைவெளி மிகக் குறுகியது. அவ்வாறு நிகழுமானால் இந்தியா நவீன இந்தியாவாக மாறாது. மாறாக மத்திய காலத்தைப் போலவே மோதலும் பகையும் கொண்ட பல அரசுகளின் இந்தியாவாகிவிடும். இந்த அபாயத்தைத் தவிர்ப்பது எப்படி? இதற்கு ஒரே வழி பிரதேச மொழிகள் மாநிலங்களின் ஆட்சி மொழியாகலாம் என்று அரசியல் சட்டம் அனுமதிக்கக் கூடாது. மாநிலங்களின் ஆட்சி மொழியாக இந்தி மட்டுமே இருக்கலாம். இதை இந்தியர்கள் ஒப்புக் கொள்ளவில்லை எனில் மொழிவழி மாநிலங்கள் எளிதில் ஆபத்துக்கு உள்ளாகிவிடும்.*

*ஒரு மொழி மக்களை இணைக்கும்: இரண்டு மொழிகள் நிச்சயமாகப் பிளவுபடுத்தும். இது ஒரு தவிர்க்க முடியாத விதி. கலாச்சாரம் மொழியால் பாதுகாக்கப் படுகிறது. இந்தியர்கள் ஒரு பொதுக் கலாசாரத்தில் இணைந்து அதை வளர்க்க விரும்பினால் எல்லா இந்தியர்களும் இந்தியைத் தமது சொந்த மொழியாக ஏற்றுக் கொள்வது அவர்களது கடமையாகும். எந்த ஒரு இந்தியனும் இந்த ஆலோசனையை மொழிவழி மாநிலத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ள மறுத்தால் அவன் இந்தியனாக இருப்பதற்கு உரிமையற்றவனாவான். அவன் நூறு விழுக்காடு மராத்தியன் ஆகவோ, குஜராத்தியனாகவோ, தமிழனாகவோ இருக்கலாம். ஆனால் நில எல்லைகளின் அர்த்தத்திலன்றி உண்மையான அர்த்தத்தில் அவன் ஒரு இந்தியனாக இருக்க முடியாது".* (Vol.1, P. 145 - 6)

பல்வேறுபட்ட தேசிய இனங்களின் சுதந்திரமும், தேசிய சிறப்புரிமையுடன் கூடிய வாழ்வும், அவற்றின் இனக்கூறுகளும் அழிக்கப்பட்டு இந்தி மொழியால் உறுட்டித் திரட்டிய ஒரு கலாச்சாரத்தில் நவீன இந்தியா உருவாக வேண்டுமென்றே அம்பேத்கார் விரும்பினார். இதுதான் அவரது தேசிய நிலைப்பாடு. இதுவே அவர் எதிர்த்துவந்த இந்தியப் பார்ப்பணிய தேசியத்தின் விருப்பாகவும் இருந்தது. இது அப்பட்டமாக தேசிய இனங்களின் ஜனநாயக உரிமையை எதிர்ப்பதே ஆகும்.

அம்பேத்காரின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையானது ஒரு சட்டவாதக் கோரிக்கை என்பது ஒருபுறமிருக்க; இவ்ஒதுக்கீட்டுக் கொள்கையை முன்வைத்ததனூடாக தாழ்த்தப்பட்ட மக்களுக்குள்ளேயே அந்நியமாதல் மட்டுமே நிகழ்ந்தது. தாழ்த்தப்பட்ட ஒரு சிறு பகுதியினர், மிகப் பெரும்பான்மையினரான

www.tamilarangam.net

தாழ்த்தப்பட்ட மக்களிடம் இருந்து தம்மைத் தனிமைப் படுத்திக் கொண்ட மேல்வர்க்கச் சமூகப் பிரிவினராக மாறியிருந்தனர். இதற்குமேல் எதுவுமே நிகழவில்லை.

1931ம் ஆண்டு ஒடுக்கப்பட்ட மக்களுக்கான தனித்துவமான தேர்தலும், அரசியல் அதிகாரமும் தேவையென்ற அரசியற் தீர்மானத்தை முன்மொழிந்த அம்பேத்கார் காந்தியின் மிரட்டலுக்கும், தேசிய விடுதலையை அது பாதிக்கும் என்ற பயத்திற்கும் பணிந்தே போனார். தேசிய விடுதலை தொடர்பான அம்பேத்காரின் இந்நிலைப்பாடானது விமர்சனத்துக்குரியதல்ல/ சரியானது என சுமைகள் நினைப்பின்; யாழ்ப்பாணத் தேசியத்தையும் இவர்கள் சரியென அங்கீகரிக்கிறார்கள்.

யாழ்ப்பாணத் தேசியமானது சாதியத்தையும் அதன் பொருளாதார அமைப்பையும் கையிறுக்கில் வைத்தே இருந்தது. காந்தியின் மிரட்டலைப் போலவே மிரட்டலையும், தொடர்ச்சியான காட்டிக் கொடுப்பையும் செய்தே வந்தது. 1969ம் வருடம் 'தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தி'னரால் ஆலயப் பிரவேசங்களும், தேனீர்க்கடைப் பிரவேசங்களும் நிகழ்த்தப்பட்ட போது "ஒரு வியட்நாமை இங்கு உருவாக்க வேண்டாம்" என அது எச்சரித்தது. 1971ம் ஆண்டு ஏப்ரல் மாதம் விஜேவீரவை விடுவிப்பதற்கான ஜே.வி.பி.யினது (JVP) யாழ் கோட்டைத் தாக்குதலின் போது திருநெல்வேலி மின்சார நிலையத்தில் குண்டொன்றை வெடிக்க வைத்து, பிரபல எழுத்தாளரும் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முன்னணி உறுப்பினருமான கே.டானியலைப் பொய்க் குற்றம் சாட்டி இரகசியமாகக் காட்டிக் கொடுத்தது*. தமிழ் மாணவர் பேரவையினரையும், அதைத் தொடர்ந்த இளைஞர் பேரவையினரின் உறுப்பினர்களையும் அரசுக்குக் காட்டிக் கொடுத்தவர்களைத் 'தமிழ்த் துரோகி' 'எட்டப்பன்' என்று பட்டம் சூட்டிய இந்த யாழ்ப்பாணத் தேசியம் தாழ்த்தப்பட்ட மக்களிடம் அமைப்புருவாகிவந்த தீ.ஒ.வெ.இயக்க முன்னணித் தோழர்களைக் கூச்சமின்றித் தொடர்ந்தும் காட்டிக் கொடுத்தே வந்தது.

---

## இருத்தலிற்காய்

**சுகன்**

இரவோடு இரவாக
இன்னோர் எல்லைக்குள்
போவதறிவார்கள் போகும்
வகையறிவார்கள்.

அத்திலாந்திக் பசுபிக் கரீபியன் கடல்
கட்டுச் சோறுமின்றி காற்றின் துணையுமின்றி
கடப்பதறிவார்கள் கடலுள்
அமிழ்ந்ததுமறிவார்கள்

இந்தப் பனிமலையின் இடுக்குகளூடு
இடுப்பிலிரண்டு குழந்தைகள் ஏந்தி
இவ்விருளும் பொழுதைக் கடந்துவிட்டாலோ
இத்தாலி வந்துவிடும் என்ற மொழிகேட்டு
எட்டிவைத்த கால்கள் தளர
இறந்த குழந்தைகள் கதையறிவார்கள்.

தீவுகள் சமுத்திரம் பெருநிலப் பரப்புகள்
திக்கொன்றாக இருக்கிற உறவுகள்
தேடியலைந்தும் துரத்தப்பட்டும்
பைத்தியம் பிடித்தும் பாதியில் திரும்பியும்
திருப்பித் திருப்பி வெளிக்கிடுகின்றார்
விதிக்கெதிராக
இருத்தலிற்காய்.

---

www.tamilarangam.net

தமிழ்பேசும் மக்களைக் கொண்ட வட - கிழக்குப் பிரதேசம் ஒரு அரசு சமூகம் என்பதை மறுத்துத் தனது பெரும் தேசிய (தமிழ் தேசியம்) லாபங்களுக்காக அகண்ட தேசியக் கொள்கையைப் பின்பற்றியது. வட - கிழக்கு முஸ்லிம் தேசிய சிறுபான்மை இனத்தவரின் இனக்கூறுகளின் அங்கீகாரத்தையும், சுயத்தையும் ஒரு சட்டவாதக் கோரிக்கையாக குறுக்கியே பார்த்தது. ஒடுக்கப்படும் அரசு சமூகமாகிய வட - கிழக்குப் பிரதேசத்திற்கான விடுதலை கூட்டரசை நோக்கியதாகவும், அதற்கான சர்வதேசிய கொள்கையைக் கொண்டிருக்க வேண்டிய வரலாற்றுத் தேவையையும் தனது பெருந்தேசிய நலன்களின் அடிப்படையில் பிடிவாதமாக மறுத்தது.

தேசிய விடுதலை தொடர்பான அம்பேத்காரின் பணிதலை விமர்சனமின்றி ஏற்பதும், யாழ்ப்பாணத் தேசியத்தை ஏற்பதும், இரண்டும் ஒன்றுதான். இந்தியப் பார்ப்பணியத் தேசியத்தினதும், யாழ்ப்பாணத் தேசியத்தினதும் ஆதரவாளர்கள் தேசிய ஒடுக்குமுறையின் ஆதரவாளர்களே!

மாக்சிச - லெனினியத்தில் போதாமை கூறி அம்பேத்கார் பெரியார் சிந்தனைகளை (விமர்சனமின்றிக்) கலவைவாதம் ஆக்குவதும், அதை வழிகாட்டும் தத்துவ மட்டத்திற்கு உயர்த்திக் காட்டுவதும் பாட்டாளி வர்க்கத்தின் ஒளியூட்டும் தத்துவமான மாக்சிச - லெனினியத்தை நிராகரிக்கின்ற தத்துவ மறுப்பேயாகும். தேசிய, விடுதலைக்கு 'தன்னுரிமைப் புரட்சியையும்' பாட்டாளி வர்க்கத் தலைமைக்குத் 'தாழ்த்தப் பட்டோர் தலைமை'யையும் கோருவது கலவைவாதம் பெற்றெடுக்கும் இரட்டைக் குழந்தைகளே. பாட்டாளி வர்க்கத் தலைமையை நிராகரித்துத் தாழ்த்தப் பட்டோர் தலைமையைப் பதிலீடாக்குவதும் தேசிய விடுதலையின் முன்நிபந்தனையாக (சுயநிர்ணயத்துக்குப் பதில்) சாதி ஒழிப்பை முன்நிறுத்தக் கோருகின்ற அனைத்தும் சாதிவாதமாகும்.●

* *ஆதாரம்: சின்னத்தம்பி வேலாயுதத்தின் ஈழம் ஒரு தொடர்கதை'32. தாயகம் - கனடா 8.5.92*

---

அண்மையில் வெளிவந்த 'சுமைகள்' இதழில் சுவடுகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இவ்வாறான குற்றம் சாட்டலின் நோக்கம் தெளிவானதாகத் தோன்றவில்லை. சுவடுகளை ஒழுங்காக வாசிப்போர் இவ்வாறான குற்றச்சாட்டுகளில் உள்ள பொய்மையை அறிவர்.

சுவடுகள் ஆரம்பத்தில் இருந்தே, இங்கு தமிழ் மக்களிற் சிலரால் நடத்தப்படும் வன்முறையைக் கண்டித்து வந்திருக்கிறது. இவ்வன்முறைகள் எமது நாட்டின் விடுதலைக்கான போரையும், இங்கு வாழும் ஏனைய தமிழர்களையும் பாதிப்பன என்பதால் இவற்றை ஏனையோரும் கண்டிக்க வேண்டும் என்பதில் நாம் இப்போதும் உறுதியாக உள்ளோம்.

இங்கு வாழும் தமிழர்கள் ஈழத்திற்கு எக்காரணம் கொண்டும் திருப்பி அனுப்பப்படக் கூடாது என்பதைச் சுவடுகள் பல தடவைகள் தெளிவாக வெளியிட்டுள்ளது. அதற்கான பணிகளிலும் சுவடுகள் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. சுமைகள் தனது தவறான செய்தி வெளிப்பாட்டைத் திருத்திக்கொள்ளும் என நம்புகிறோம்.

- சுவடுகள் -

www.tamilarangam.net

# கண்டது கேட்டது கண்டவர் சொன்னது



யாழ்ப்பாணத்தில் இப்போது தமிழகத் திரைப்படங்களைப் பார்க்க முடியாது என்றும் அங்கு, ஈழத்தில் உருவான படங்களை மட்டுமே பார்க்கலாம் என்றும் அங்கு சென்றுவந்த பலர் உங்களிடம் கூறியிருக்கலாம், அல்லது பத்திரிகைகளில் நீங்கள் இந்தச் செய்தியைப் படித்துத் தெரிந்திருக்கலாம். நீண்ட காலத்துக்கு முன்பு இலங்கையை விட்டு வந்தவர்களுக்கு இது கொஞ்சம் அதிர்ச்சியூட்டும் விசயமாகத் தெரியலாம். ஆனால் ஏறத்தாழ இருபது வருடங்களின் முன் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டாட்சி திரைப்பட இறக்குமதி தொடர்பான சில கட்டுப்பாடுகளை மேற்கொண்டு தமிழகத்தில் இருந்து வரும் படங்களின் எண்ணிக்கையைக் குறைத்தது. இது தமிழர்களுக்கு எதிரான சதி என்று குரல் கொடுத்தவர்களும் இருக்கிறார்கள். அப்போது இலங்கையில் ஒரு சில திரைப் படங்கள் தயாரிக்கப்பட்டு வெளியாகின. சில, நீண்ட நாட்கள் ஓடி வெற்றியும் கண்டன. குறைந்த பட்சம் இலங்கையில்

அயலான்

www.tamilarangam.net

திரைப்படம் தயாரிக்கவும், அதை வெற்றி பெறச் செய்யவும் முடியும் என்று நம்பிக்கை ஏற்பட்டது அந்தக் காலத்தில்தான்.

இப்போது யாழ்ப்பாணத்தில் உள்ள நிலைமை முற்றிலும் மாறுபட்டது. ஒருபுறத்தில் கொழும்பில் தாராளமயக் கொள்கையால் எல்லாத் தமிழகத் திரைப்படங்களும் வீடியோவிலும் திரைப்பட அரங்குகளிலும் கொட்டமடிக்க, யாழ்ப்பாணம் 'பாலைவனம'ாக மாறிவிட்டது. ஒன்றுமே இல்லாவிட்டால் கிடைக்கும் எதையாவது பார்ப்பார்கள் தானே பார்வையாளர்கள். ஆம், யாழ்ப்பாணத்தில் புலிகளால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப் படங்கள் இப்போது காட்சியளிக்கின்றன. இவை சில காலங்களாக ஐரோப்பாவிலும் கிடைக்கின்றன. வணிக நோக்கம் முக்கியமாகிப் போய்விட்டதால் கலைத்தரத்தில் சீரழிந்து போய்விட்ட பெரும்பாலான தமிழகத் திரைப்படங்களைவிட எத்தனையோ மடங்கு தரத்தில் உயர்ந்து நிற்கும் இந்தப் படங்களின் தயாரிப்பு எத்தனை காலம் நீடிக்கும் என்பது தெரியவில்லை. அதன் வர்த்தக ரீதியான வெற்றி தமிழகத் திரைப்படங்கள் வராத மட்டுமே இருக்கும்

என்பதும் கவலைக்குரிய விடயம். ஒரு அமைதியான தீர்வுக்கு இப்போதைய பேச்சுகள் இட்டுச் சென்றால் அப்போது தமிழர்களது பார்வைக்கு வரப்போகும் திரைப்படங்கள் பற்றிய கட்டுப்பாடு எங்கே போகும் என்பது சிக்கலான கேள்வி. தாராளமயக் கொள்கையையே அம்மையார் அரசும் பின்பற்றுவதால் கொழும்பே இந்தக் கட்டுப்பாட்டைத் தனது கையில் வைத்திருக்கும் அபாயம் உண்டு. தமிழகத் திரைப்படங்கள் தமிழகத்தைச் சீரழித்ததுடன் நிற்கட்டும். ஈழத்துக்கு அவை அவசியமில்லை. தரமான படங்கள் மட்டும் அனுமதிக்கப் பட்டால் நல்லது. வசூகட்டுவது யார்? மணிகட்டுவது யார்?

தமிழகத்திற்கும் ஈழத்தவர்களுக்கும் இடையிலான தொடர்பு சில சக்திகளால் அச்சுறுத்தலுக்கு உள்ளானாலும் அதை எப்போதைக்குமாக இல்லாது செய்து விடுவது பகற்கனவு. தமிழகத்தவர் பற்றி எப்போதும் ஈழத்தவர் அக்கறை கொண்டிருப்பர். அவ்வாறே ஈழத்தவர் பற்றியும் தமிழக மக்களின் அக்கறையை மாற்றிவிட முடியாது.

அண்மையில் தமிழகத்தில் இருந்து ஒரு புதிய சஞ்சிகை வெளிவர உள்ளதாகத் தமிழகத்தில் இருந்து எனது நண்பர் ஒருவர் எழுதியிருந்தார். தமிழகம் ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தொழில் ரீதியில் பின்தங்கியுள்ளது எனக் குறைப்படும் அந்தப் புதிய சஞ்சிகையின் ஆசிரியர், சர்வதேச ரீதியாகத் தமிழர்களிடையே தகவற் பரிமாற்றம் ஒன்றை - தொழில்கள் வணிகம் தொடர்பான - நிகழ்த்தக் களம் அமைக்க உள்ளார். ஐரோப்பிய, அமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் உள்ள ஈழத் தமிழ் நண்பர்கள் இந்த முயற்சியில் பங்கெடுக்கலாம்.

தமிழீழத்தின் தொழில் வணிக வளர்ச்சி மாத்திரமன்றித் தமிழகத்தின் வளர்ச்சியும் எமது அக்கறைக்கு உரியதா இருக்க வேண்டும். தமிழகம் பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கிச் செல்ல, அங்குள்ள ஊழல் நிரம்பிய அரசியல்வாதிகள் ஒரு காரணம் போக, சரியான வெளிநாட்டுத் தொடர்புகள் கிடையாமையும் காரணமாகலாம். லட்சக் கணக்கில் புலம் பெயர்ந்து வாழும் நாம் தமிழகத்தவருக்கு இந்தத் துறையில் எவ்வாறு உதவலாம் என்பது பற்றிச் சிந்திப்போம்.

இந்தப் புதிய சஞ்சிகை பற்றியும், ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்கள்

www.tamilarangam.net

# பஞ்சாங்கம்

●சௌமி



"ஏதோ உச்சீலை விழுந்திட்டுது"
"பல்லி போல கிடக்கப்பா"
"பாரிஸிலை எங்கயப்பா பல்லி"
"இல்ல.... உங்க... உங்க பாருங்கோ, செற்றிக்கை பூந்திட்டுது"

"உச்சீலை விழுந்தது என்ன நாசமோ" பதறியடித்தபடி பஞ்சாங்கத்துடன் ஓடிவந்தார் தாத்தா.

கொஞ்ச நேரத்துக்குள் வீடு பெரும் அல்லோல கல்லோலப்பட்டது.

மூலையில் தன்பாட்டில் இருந்து விளையாடிக் கொண்டிருந்த கடைசி மகன் கழுத்துக்குள் தலையை இழுத்துக் கெக்கட்டம் விட்டுச் சிரித்தான்.

"அப்பா அது பல்லியுமில்லை. ஒண்டுமில்லை, நான் விளையாடிக் கொண்டிருந்த 'றபர் பாண்ட்'"

அவனது குரலில் சிரிப்பைவிடக் கேலி அதிகம் தொனித்தது.

---

தமிழகத்திற்கு எவ்விதத்தில் உதவி செய்ய முடியும் என்பது பற்றியும் அறிய விரும்பின் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்: தமிழ் தொழில் உலகம், 26 அருணாசலம் சாலை, சேத்துப்பட்டு, சென்னை 600 005, தமிழ்நாடு. இந்தச் சஞ்சிகை ஆசிரியரின் பெயர் ம.லெனின் என்பதை நினைவில் வைத்திருங்கள்.

அண்மைக் காலமாகத் தமிழ்த் திரைப்படங்கள் சிலவாவது நல்ல அம்சங்களைக் கொண்டு தரமாகத் தயாரிக்கப் படுகின்றன. வருடத்தில் மூன்று நான்கு படங்களாவது நல்ல படங்கள் என்று குறிப்பிடத்தக்க தரத்தில் இருப்பது தமிழுக்கு நல்லது. கடந்த ஆறேழு வருடங்களாக நிகழ்ந்துவரும் இந்த மாற்றத்தில் சிலர் திட்டமிட்டே செயற்படுவது குறிப்பிடத் த்க்கது. வேறு சிலரோ இதற்கு எதிராகவே செயற்படுவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றனர்.

சில காலம் முன்புவரை, ஏறத்தாழ எண்பதுகளின் நடுப்பகுதி வரை கலைப்படம், வர்த்தகப் படம் என்றிருந்த தமிழகத் திரைப்படங்களின் பாகுபாடு ஏறத்தாழ, நல்ல படம் – அல்லாத படம் என்ழ வந்துவிட்டது. இது ஆரோக்கியமான அம்சம்தான். கலைப்படம் என்ற பெயரில் பெரும்பாலான படங்கள் வர்த்தக ரீதியில் பெரும் தோல்வியைத் தழுவின. இது மிகப் பெரிய துயரம் என்றாலும், தமிழ்த் திரைப்பட ரசிகர்களின் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்றால் இப்போது வெளிவருவது போன்ற படங்களின் தொகை உயரவேண்டும். நல்ல படங்களை எடுக்கத் தெரிந்தவர்கள், வெறுமனே மசாலாக்களைத் தயாரிக்காமல் ரசிகர்களின் தரத்தை உயர்த்தும் பொறுப்பில் பங்கேற்க வேண்டும். நல்ல படங்களை எடுப்பவர்களது பெயர்கள்தான் வரலாற்றில் நிற்கும். அல்லாதவர்கள் தங்கள் பெயர்களைக் கட்டிடங்கள் எதிலாவது பொருத்தி வைத்தால் சரி. இல்லையேல் அம்பேல்தான்●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மக்கட் தொகைப் பெருக்கம்தான் வறுமைக்கான காரணமா?

சமர்



(முன்தொடர்)

பணக்கார நாடுகளில் இது ஒரு லாபகரமான தொழிலாகக் கருதிச் செய்யும்போது ஏழை நாடுகளில் பட்டினி தொடர்கிறது. பணக்கார நாடுகள் மற்றைய நாடுகளைப் பிடிக்கத் தமது நாட்டிலும், ஏனைய நாடுகளிலும் சீரழிவுக் கலாசாரத்தைப் பரப்புகின்றன.

இது சொந்த நாட்டில் படுமோசமான தாக்கத்தை ஏற்படுத்தி மக்கட் தொகைப் பெருக்கத்தை ஈடாட வைத்துவிட்டது. இருக்கின்ற சனத்தொகையைத் தக்கவைக்கவே பெரும் முயற்சி தேவை என்ற நிலைக்குச் சென்றுவிட்டனர். அத்துடன் யுத்தம் இவர்கள் சனத்தொகை அதிகரிப்பை இல்லாதாக்கி, இருக்கின்ற மக்கட் தொகையைப் பெருக்க முடியுமா என ஆகிவிட்டது. இதனால் பிள்ளைகளுக்கு ஊக்குவிப்பு அறிவித்துப் பல சலுகைகளை வழங்குகின்றனர். இதேநேரம் ஏழைநாடுகளில் சனத்தைக் கட்டுப்படுத்தக் கோருகின்றனர். இந்த வகையில் இரட்டைக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உலகத்தின் சனத்தொகைப் பெருக்கத்தை அட்டவணைப்படுத்தின்,

மக்கள் தொகை இயக்கப் போக்கு (பத்து லட்சங்களில்)

| ஆண்டுகள் | ஐரோப்பா | ஆசியா | அமெரிக்கா | ஆபிரிக்கா | பெருங்கடற்பிரதேசம் | உலகம் |
|---|---|---|---|---|---|---|
| 1900 | 401 | 937 | 144 | 120 | 6.0 | 1,608 |
| 1920 | 325 | 1023 | 206 | 143 | 8.5 | 1,861 |
| 1930 | 355 | 1,120 | 242 | 164 | 10.0 | 2,070 |
| 1940 | 380 | 1,244 | 274 | 191 | 11.1 | 2,295 |
| 1950 | 392 | 1,355 | 328 | 217 | 12.6 | 2,486 |
| 1960 | 425 | 1,645 | 412 | 270 | 15.8 | 2,982 |
| 1970 | 462 | 2,056 | 511 | 344 | 19.4 | 3,632 |
| 1978 | 480 | 2,465.1 | 586.6 | 444.6 | 22.2 | 4260 |

உலக மக்கள் தொகை கண்டங்களில் (உலக சனத்தொகையின் சதவீதம்)

| ஆண்டுகள் | 1920 | 1950 | 1960 | 1970 | 1978 |
|---|---|---|---|---|---|
| ஐரோப்பா | 17.5 | 15.8 | 14.3 | 12.7 | 11.3 |
| ஆசியா | 55.0 | 54.5 | 55.2 | 56.6 | 57.9 |
| அமெரிக்கா | 11.1 | 13.2 | 13.8 | 14.1 | 13.7 |
| ஆபிரிக்கா | 7.7 | 8.7 | 9.1 | 9.5 | 10.4 |

மேற்கு நாடுகள் அல்லாத நாடுகளின் சனத்தொகைப் பெருக்கம் ஐரோப்பாவை அச்சுறுத்துகிறது. தமது சீரழிவு மற்றும் ஆதிக்க யுத்தம் இதனூடான தமது கொள்ளைகளைப் பெருக்க முனையும் இவர்கள் வெள்ளை கறுப்பு என இனவாத அலைகளின் ஊடாக தம்மைத் தக்கவைத்தவண்ணம் உள்ளனர். வெள்ளை இனத்தின் எண்ணிக்கை உலக சனத்தொகையில் குறைந்து வருவது இவர்களின் ஆதிக்கக் கதைக்கு ஒரு அச்சுறுத்தலாகவே தெரிகிறது.

வளர்ச்சியுற்ற நாடுகளில் ஒரு பெண் 1.7 குழந்தையைப் பெறும் அதேநேரம் மூன்றாம் உலக நாடுகளில் 3.6 வீதம் ஒரு பெண் குழந்தைகளைப் பெறுகிறாள். இதன் மூலம் வளர்ந்த நாடுகளின் சனத்தொகையில் அரைவாசியாக உள்ள ஒரு பெண் 1.7 என்ற பிறப்பு வீதத்தைக் கொண்டிருப்பது சனத்தொகை வீழ்ச்சிக்கு வழிவகுப்பதுடன் இருக்கும் தொகையில் வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

**_Internasjonal Sosialisme,_**

*ISSN: 0800-7993*
*Utgiver:*
*Internasjonale Sosialister, Postboks 9226 Grønland, 0134 Oslo.*
*Tlf. 22 20 17 89/22 46 90 90.*
*Redaktør: Tim Robinson.*

*Sats & repro: Eget*
*Trykk: Avisspesialisten a.s.*
*Abonnement koster: 100 kroner for 11 nummer (180.- for institusjoner og utland). Send beløpet til postgiro-konto 0803 23 82208*
***IS avisa sendes gratis til fanger.***

www.tamilarangam.net

இந்நிலைகள் இருந்தபோதும் சனத்தொகையின் ஒரு சீரான மட்டத்தை ஐரோப்பிய நாடுகள் பேணிக்கொள்ள முக்கிய காரணம் குழந்தைகள் இறப்பைக் குறைக்க முடிவதும், வயதுபோனவர்களின் வாழ்வை நீடிக்க முடிவதாலும். இதில் நவீன மருத்துவம் பெரும் பங்காற்றுகிறது.

1959ம் ஆண்டு 65வயதுக்கு மேற்பட்டவர்கள் நாட்டுச் சனத்தொகையின் பின்வரும் வீதங்களில் இருந்தனர். சுவீடன் 11.5%, ஜப்பான் 5.9%, சிங்கப்பூர் 2.1%.

மனிதனின் சராசரி வாழ்வுக்காலம் 1960 - 61களில் காபூலில் 35 ஆண்டுகளாகவும், 1965 - 70களில் மொரோக்கோவில் 50.5 ஆண்டுகளாகவும், 1968 - 69களில் இந்தியாவில் ஆண்களுக்கு 48.9ஆகவும், பெண்களுக்கு 46.2 ஆகவும் இருந்தது. 1908 1913களில் பிரான்சில் 48 - 52 ஆண்டுகளாக இருந்த சராசரி வயது 1962ல் ஆண்களுக்கு 67.3 ஆகவும் பெண்களுக்கு 74.1 ஆகவும் மாறியது.

இதேபோல் தொற்றுநோய்களின் நவீன மருத்துவம்; 1950களில் இலங்கையில் 6,11,000 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டனர். 1960ல் இது பெருமளவு குறைந்தது. மடகாஸ்காரில் 1950ல் 4,18,000 பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்ட போதும், 1960ல் இத்தொகை 50,000ஆகக் குறைந்தது. இந்த வகையில் பணக்கார நாடுகளின் சனத்தொகையைச் சீராக வைத்திருக்க நவீன மருத்துவம் உதவுகிறது.

மூன்றாம் உலக நாடுகளில் இவை இன்றி உள்ள அதேநேரம் அங்கு மக்களின் வறுமை, பிறக்கும் குழந்தைகளின் இறப்பு, முதுமையில் பராமரிப்பின்மை எல்லாம் சேர்ந்து கூடுதலான குழந்தைகளைப் பெறுகின்றனர். கூடுதலான குழந்தை அந்தக் கூட்டுக் குடும்பத்தில் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கவும், குழந்தைகளின் இறப்பைச் சரிசெய்யவும், முதுமையில் கூடிய குழந்தைகளின் பராமரிப்புக் கிடைக்கும் என்ற பல்வேறு கொள்கைகள் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாகும்.

மக்கட் தொகைக் கட்டுப்பாடு என்பது மக்கள் இயல்பாகவே கடைப்பிடிக்கக் கூடியதுதான். ஆனால் அதை நிறைவுசெய்ய மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும்.

குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு, சிறந்த மருத்துவ வசதி, பொதுவான சமூகக் கலாச்சாரம், இன்னும் பிற மக்களுக்குக் கிடைக்கும்போது சமூகத்திற்குத் தேவையான மக்கட் தொகை இருக்கும் வரையில் சமூகம் இயங்கும்.

இது இச்சமூக அமைப்பில் சாத்தியமில்லை. ஒவ்வொரு டாங்கியிலும் (ஆகும் செலவில்) பல ஆஸ்பத்திரிகளையும், ஒவ்வொரு விமானத்திலும் ஏவுகணையிலும் பல ஆஸ்பத்திரிகளையும் கட்டமுடியும். யுத்தங்களை ஒழிப்பதும், ஆயுத உற்பத்திக்குச் செலவு செய்யும் பலகோடி பணத்தைச் சமுதாயத் தேவைக்கு மாற்றுவது அவசியம்.

இதைச் செய்வதன் மூலமும் நிரந்தர இராணுவங்களை ஒழித்து அவர்களை உழைப்பில் ஈடுபட வைப்பதும், உழையாது பணக்காரனாக உள்ளவனை உழைக்க வைப்பதன் மூலமும் எல்லோரையும் உழைக்கும் மக்களாக்கி, அதற்கு இசைவான வேலைநேரத்தை உருவாக்கினால் மட்டுமே ஏழை பணக்காரனை இல்லாது ஒழிக்க முடியும். தேவைக்கு ஏற்ப பொருட்கள் பங்கிடப்பட்ட உன்னதமான சமுதாயம் படைத்தால் மட்டுமே மக்கள் எல்லோரையும் போல வாழமுடியும்.

இது இந்தத் தனியுடைமைச் சமூகத்தில், சுரண்டல் அமைப்பில் சாத்தியமில்லை. மாறாக இதைத் தூக்கி எறிய ஒரு புரட்சி அவசியம். இது நிறைவேறும்வரை சுரண்டும் வர்க்கம் மக்கட் தொகைப் பெருக்கத்தைக் கூறிக் கூச்சல் இட்டுத் தமது பைகளை மட்டும் எப்போதும் பத்திரமாக வைத்திருப்பார்கள்.

www.tamilarangam.net

வே.சண்முகநாதன்


# ஈயூகள் வேண்டாம்!

நவம்பர் மாதத்தில் நோர்வேயின் தலைவிதியை நிர்ணயிப்பதற்கான ஐரோப்பிய சமூக இணைவு பற்றிய சர்வசன வாக்கெடுப்பு நிகழ்ந்தது. நோர்வேயின் மூலை முடுக்கெல்லாம் இது தொடர்பாக கூட்டங்களும் விவாதங்களும் என ஒரே களேபரம்தான்.

ஆனால் தமிழர் மட்டும் இது பற்றிச் சற்றே சாகவாசமாக உறங்கியும், உறங்காமலும் இருந்ததுதான் உண்மை. ஏனோ தமிழர்களிடம் இதுபற்றிய அக்கறை குறைவாகவே இருந்தது. அதற்குப் பல காரணங்கள் கூறலாம். ராமர் ஆண்டாலென்ன, ராவணன் ஆண்டாலென்ன எமக்கு இஞ்ச இருக்கவிட்டால், உழைக்க விட்டாற் சரி என்ற போக்கே தலைதூக்கி நின்றது. இதைவிடப் பிரதானமானது, தமிழர் ஆறாயிரம் பேர்வரையில் வாழும் நோர்வேயில் நோர்வேஜியப் பிரஜாவுரிமை பெற்ற தமிழர் ஒரு சில நூறு பேர்கள் மட்டுமே. இவர்கள் மட்டுமே சர்வசன வாக்கெடுப்பில் கலந்துகொள்ளலாம் என்பதும் இன்னொரு காரணம்.

அதற்கும் அப்பால் எமது சமூகத்தின் சாபக்கேடு போல இருக்கும் சமூகப் பிரக்ஞையற்ற போக்கும் மிக முக்கிய காரணியாகும். அதுபோக ஒருசில தமிழர்களிடையே இதுபற்றி விவாதங்களும் அபிப்பிராயங்களும் இருந்தன. அவற்றிற் சில.

* நோர்வே ஐரோப்பிய சமூகத்துக்குள்



www.tamilarangam.net

போகவேணும். அப்பதான் நாங்கள் விசா இல்லாமல் எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் லேசாகப் போய்வரலாம்.

* ஓமோம், விசா இல்லாமல் வேசா ட்றாவல் பண்ணலாம் எண்ட நிலை வாறது நல்லதுதானே. ஐரோப்பா முழுக்கச் சொந்த பந்தம் எண்டு சிதறிக் கிடக்குது. நினைச்சவுடனை ஒரு சுகதுக்கமெண்டா உடன போய் வரலாம் எல்லே. இப்ப என்னெண்டா அவனவன் எம்பசியிலை போய்த் தவம் கிடக்க வேண்டிக் கிடக்கு. அது மட்டுமில்லை அவனவன் டிமாண்ட், கரண்டி எண்டு பல தொல்லை தாறான்.

* நாங்களும் ஐரோப்பியர் போல முழு சுதந்திரமும் இருக்கும். இப்ப இருக்கிற நீலம், அல்லது கறுப்புப் பாஸ்போட் எண்டால் ஒவ்வொரு போடர், எயாப்போட்டிலும் எவ்வளவு கெடுபிடி தெரியும்தானே. இது வந்த நாங்களும் ஐரோப்பியனுக்குச் சரிசமமாக ஓட்டமெட்டிக்கா மாறிடுவம். நல்லதுதானே.

இந்த விதமான அபிப்பிராயங்களே அதிகம் இருந்தன. வேறு சில:

* இஞ்ச நோர்வேயிலை படிச்ச சேர்டிபிக்கற் நோர்வேயிலை மட்டும்தான் செல்லும். வேற நாட்டில வேலை எடுத்துப் போகேலாது. அதாலை ஐரோப்பிய சமூகத்திலை நோர்வே போனால் ஐரோப்பிய சமூக சேட்டிபிக்கற்தான் தருவாங்கள். எல்லா இடத்திலையும் வேலை எடுக்கலாம்.

* ஐரோப்பிய சமூகத்திலை வந்தா பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் எண்டு பலபேர் வேலை எடுக்க நோர்வேக்கு வருவாங்கள். பிறகு எங்களுக்கு வேலை இல்லாமற் போயிடும்.... அட்லீஸ்ற் கழுவல் வேலைகூடக் கிடைக்கிறது கஷ்டமாயிடும். அதாலை ஐரோப்பிய சமூகத்திலை நோர்வே இணையக்கூடாது.

* மற்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து வெளிநாட்டுக்காரர் (மூன்றாம் உலகத்தவர்) இஞ்ச வந்திடுவாங்கள். கிறிமினல், அடிபிடி கூடும்




இப்படிப் பல்வேறு அபிப்பிராயங்கள் தமிழரிடையே நிலவிய போதும் ஐரோப்பிய சமூக இணைவு பற்றி ஒட்டுமொத்தமான கணிப்போ, ஐரோப்பிய சமூகம் வெளிநாட்டவர்களுக்குப் பாதகமானதா சாதகமானதா, நோர்வேயில் அதன்பாதிப்பு, சூழலியற் பிரச்சனைகள், இங்குள்ள தமிழர்களுக்கு ஏற்படும் நன்மைகள் - பாதிப்புகள் என்ன என்பது பற்றியும், ஐரோப்பிய சமூக இணைவின் உண்மையான நோக்கம் என்ன என்பது பற்றியும், இது உலகளாவிய விடயங்களில் ஏற்படுத்தவுள்ள தாக்கம் பற்றியும் ஒருசிலரிடையே மட்டுமே மெல்லிய குரல் கேட்டது.

ஆயினும் ஐரோப்பிய சமூகத்தின் பிரதான நோக்கம், மூன்றாம் உலக நாடுகளை மேலும் சுரண்டும் பணக்கார நாடுகளின் தேவை என்பதையும், ஐரோப்பிய சமூகம் அமெரிக்க, ஜப்பானிய சக்திகளுடன் போட்டி போடுவதற்காக மூன்றாம் உலக நாடுகளைத் தனது நலனுக்காக மேலும் சுரண்டிக் கொழுக்கவும் உருவாகிறது என்பதையும், இதில் எமது வேர்கள் பதிந்திருக்கும் இலங்கையும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பது பற்றியும் தமிழரிடையே போதிய விவாதத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த நோர்வேயில் உள்ள தமிழ் அமைப்புகள் தவறிவிட்டன. அல்லது அக்கறை எடுக்கவில்லை. இனிவரும் காலங்களில் இதுபற்றி அக்கறை எடுத்தல் நல்லது.

www.tamilarangam.net

## பாகம் 2

### அத்தியாயம் 9

க.ஆதவன்

# மணமணம்

அத்துடன் முடிந்துவிட்டதா இந்தக் கதை? எப்படி முடியும்? ஒரு நீளமான கயிறு. வெறுமனே இருக்க விடுவார்களா? அதனை எதற்காகவேனும் பயன்படுத்த வேண்டும். மாடுகளைப் பிணைப்பதற்கு......... அல்லது துலாவின் - பூவரசங்கொப்பு ஒடிந்து விழாமலிருப்பதற்கு..... அல்லது ஏதேனும் சாமத்தியச் சடங்கு, கலியாண வீடு, அந்தியேட்டி பேஏன்ற விடயங்களுக்குப் பந்தல் போடத்தன்னும் இந்தக் கயிற்றினைப் பாவிக்கலாம்.

கயிற்றினை சும்மா பாவிக்க முடியாது. ஏதாவது ஒரு இடத்தில் முடிச்சுப் போட்டால்தான் கயிற்றின் முழுப்பயனையும் அடையலாம்.

இந்தக் கயிற்றுக்கு, இங்கேதான் முடிச்சுப் போடவேணும் என ஊர்ச்சனங்கள் நினைத்தார்கள்.

ரகுநாதன் எண்ட கயிறு தம்பையரையும் தாண்டிப்போய்ச் சுசீலாவைக் கற்பழித்துவிட்டது என்கிற முடிச்சு வெகு இலகுவாக ஊர்ச்சனங்களால் போடப்பட்டுவிட்டது.

இந்த 'முடிச்சு' பற்றி ரகுவிற்குத் தெரியாது. சுசீலாவுக்குந் தெரியாது.

ரகுவிற்கு இது தெரிந்த விஷயம் சுவாரசியமானது. ஆர் சொல்லியிருப்பினம் எண்டு நினைக்கிறியள்?

அருளண்ணைதான்.

அவர் தன்ரை கற்பனையில் ஒரு படம் வைத்திருந்தார். அந்தப் படம் என்னண்டு ஒருத்தருக்குந் தெரியாது. அவற்றை படத்தோட இது நல்லாப் பொருந்திட்டுதாம். உடனை எல்லாருக்கும் சொல்லிப் போட்டாராம்.

சில நேரத்தில அருளண்ணைக்கு 'உரு' மாதிரியும் 'சாமி' மாதிரியும் வாறதாம். வந்தால் அவர் உண்மையைத்தான் சொல்லுவாராம்.



அண்டைக்கும் இந்த விஷயத்தை 'உரு'விலைதான் சொன்னவராம். ஆனபடியாத்தான் சொல்லுறன் இந்த விஷயம் உண்மையெண்டு ஊர் நம்பிவிட்டது.

முடிச்சு, போடப்பட்டுவிட்டது.

அம்மாள் கோயில் 9ம் திருவிழாவிலை இது நடந்தது. சாமியைத் தூக்கிக்கொண்டு உள்வீதியை வலம்வரேக்கை வடக்கு வீதி மூலையிலை பொதுவாக மேளக்

www.tamilarangam.net

கச்சேரிகள் நடக்கும். அருளண்ணையும் பல பங்காளர்களுடன் சேர்ந்து ஒரு உபயகாரர்தான்.

அம்மாள் பட்டுச் சீலையாலை அலங்கரிச்சுத் தகதகவென மின்னிக் கொண்டிருந்தாள். சாம்பிராணிப் புகை உள் மணட்பம் எங்கும் வெகுவாகப் பரவியிருந்தது. கோவில் உள்வீதி அவ்வளவு பெரிய வீதி எண்டு சொல்லமுடியாது.

அண்டைக்கு உண்மையிலை அம்மாள் நல்ல பொலிவுடன்தான் இருந்ததாம். எல்லோரும் தம்மை மறந்து 'அரோகரா' எண்டு கத்திச்சினமாம்.

அந்த மண்ணிலேயே பிறந்து அந்த மண்ணுக்கே தங்கள் கலையை வழங்கி மடிந்துபோன நாதஸ்வரக்காரர்கள் தங்கள் 'மல்லாரி'யை அண்டைக்குத் திறமாக ஊதினார்களாம்.

'மல்லாரி' முடிஞ்சு சாமியைப் பார்த்துப் பக்தகோடிகள் 'அரோகரா' எண்டு சொல்லிச்சினம். பிறகு சனங்கள் அங்கும் இங்கும் அலைபாயத் தொடங்கிச்சினம். அப்ப ஒரு 'பிசுபிசு' சனங்கள் மத்தியில் பிசுபிசுத்தது.

அந்தப் 'பிசுபிசு' என்னவெண்டால் அருளண்ணைக்கு 'உரு'ப்பத்தியிட்டுது எண்டதுதான்.

நாதஸ்வரம் ஊதிக்கொண்டிருந்த 'நடராசநாதன்' உண்மையிலேயே விறைச்சுப்போனான். அவன் நினைச்சான்; தன்ரை 'மல்லாரி'யிலைதான் அம்பாள் முழிச்சுட்டுதெண்டு. அம்பாள் முழிச்சுதெண்டால் ஆரிட்டையாவது கட்டாயம் போகும். போய் அந்த ஆள் வாய்வழியாக ஊரின் உண்மைகளைக் கக்கும். தவில் அடிச்சுக் கொண்டிருந்த 'கணேசு'வும் ஓங்கி அடிக்கத் தொடங்கினான்.

சும்மா தீவட்டி பிடிக்கிற பெடியனுக்குப் பக்கத்திலை நிண்ட அருளண்ணை மெதுவாக ஆடத் தொடங்கினார். மெதுவான ஆட்டம், விரைவான ஆட்டமாகிப் பின் உருவாக உருமாறிற்று. ஐயாத்துரை அண்ணை, ஐயம்பிள்ளை அண்ணை ஆக்கள்

வேப்பம் இலைக் கட்டுடன் ஓடிவந்தார்கள்.

அம்பாள் வடிவிலை அருளண்ணை பேசினார்.

"........... இந்த இடத்திலை இருந்து தென்கிழக்கு மூலையிலை நடந்தது.
கிழக்கு மூலையிலை நடந்தது.
ஒரு வீட்டிலை நடந்தது.
நடந்தது ஒரு வீட்டிலை
அம்மனாய்... வந்தெல்லோ
அருக்கூட்டிப் போட்டுது
ஆடிஆடி வந்தெல்லோ
ஆள் பிடிச்சுப் போட்டுது
ஆள் பிடிச்ச இடமெல்லாம்
ஆக்கள் கதைக்கினம்
புடிச்ச கற்பு எதுவென
கற்பூரம் ஏற்றுகினம்
கற்பூரம் கொழுத்தியென்ன
கற்பழிஞ்சு போனபிறகு...."

அருளண்ணையின் பாடல் இதுதான். உரு ஆடி ஓய்ந்தாயிற்று.

'கணேசு'வும் ஏதோ நல்ல தாளம் எண்டு முழக்கினவன்... தவிலை 'சிஞ்சா சிவத்'திட்டைக் குடுத்திட்டு ஓடி வந்தான்.

ஐயாத்துரை அண்ணை வேப்பம் இலையை விடாமல் விசுக்கிக் கொண்டிருந்தார். ஐயம்பிள்ளை அண்ணை சாம்பிராணிப் புகையை தன்னால் இயன்றமட்டும் பரப்பிக் கொண்டிருந்தார். அருளண்ணை மல்லாந்து கிடந்தார். வாயில் வெள்ளையாய் நுரைபோல ஏதோ வழிந்திருந்தது.

'பெரிய பிள்ளையக்கா' அம்மனே வந்துவிட்டது என நம்பினாள்.

www.tamilarangam.net



'மகேஸ்வரி'யோ விழுந்து விழுந்து கும்பிட ஆரம்பித்துவிட்டாள்.

'சிவலிங்கபிள்ளை', 'லிங்கமுதம்' வாத்திமார் தமக்கெனத் தெரிந்த நியாயத்தைச் சொல்ல வெளிக்கிட்டினம்.

பாத்துக் கொண்டிருந்த 'சிங்கபக்தன்' "ஏதோ நடக்குது, புல்லரிக்குது" என்றான்.

சனங்கள் "ஓம்" என்றனர். கொஞ்ச நேரத்திலை அருளண்ணை எழும்பினார். தன்ரை பாட்டிலை போய் மூஞ்சியைக் கழுவினார். வாயைக் கொப்புளித்தார்.

சனங்கள் 'அரகரோகரா' என்று பெரிதாய் அலறினர்.

* * * * *

"அண்ணை ஏன் அப்பிடிச் சொன்னனியள்?" என்று கேட்டான் ரகுநாதன்.

ஒரு பூவரசங்கிளையில சாதுவாகச் சாய்ந்துகொண்டிருந்தார் அருளண்ணை.

"தம்பி ரகு, வேணுமெண்டு சொல்லேல்லை. அந்த மேள அடியும், புகையும் என்னை உருவேத்திப் போட்டுது. ஏதோ புலம்பினன். அம்மாள் சொல்லச் சொன்னாள். சொல்லிப் போட்டன். நான் என்ன சொன்னன் எண்டு எனக்கே தெரியாது. ஆனால் அம்மாள் பொய் சொல்லமாட்டாள். அறிஞ்சுதான் சொல்லுவாள்" என்றார்

www.tamilarangam.net

வெகு இலகுவாகத் தன்னைப் பாவித்த அருளண்ணை.

" அண்ணை விசர்க்கதை கதையாதையுங்கோ. இது என்னையும் அந்தப்பெட்டை சுசீலாவையும் என்ன மாதிரிப் பாதிக்கும் தெரியுமே. ஏன் அண்ணை இப்பிடிச் சொன்னனியள்? உங்களுக்கு வேணுமெண்டா ஆமி தென்கிழக்காலை வருகுது. ஆக்களைக் கொல்லப் போகுது எண்டு சொல்லலாம்தானே! ஐயோ அண்ணை இதாலை எத்தினை பிரச்சினையள் வருகுதோ ஆர் கண்டது?"

ஆவேசமாய்க் கத்தினான் ரகுநாதன்.

"விசரா.... ரகு! இந்த அருளுக்கு அம்மன் அருள் வேணுமோ? எல்லாம் ஒரு நாடகம்தான். எனக்கென்னடா உரு? நான் ஆடினன் எண்டா இந்த ஊர் தாங்குமோடா? அந்தச் சுண்ணாம்பை எடு, சொல்லுறன் கதை. ஊருக்குக் கதைசொன்ன அருளண்ணை உனக்குக் கதைசொல்ல ஏலாதோ?

தவில் 'கணேசு'வுக்கு 1/2 வார்த்தன். அடிச்சான் அடி. நான் ஆடினன். திருவிழாச் சோபிக்கேல்லை எண்டு ஒரு பிள்ளை சொல்லட்டும் பாப்பம்?

உன்ரை கதையை இதுக்குள்ள இழுத்துப் போட்டம்தான். பின்னை என்ன? எவளவு காலத்துக்கு முசிறிக்கொண்டு திரியப் போறியள்?"

ரகுநாதன் விறைச்சுப் போய் நின்றான். என்னையும் சுசீலாவையும் ஒன்றுசேர்ப்பதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறார்கள்.

அம்மாளே கொடிகாட்டி விட்டாள். சுசீலா! நான் பாவி. நீ பாவி. நாங்கள் தொட முடியாமல்..... பங்கிட முடியாமல்...... நாங்கள் ஏதாவது செய்யவேணும்..... ஒரு தடவையாவது இந்த ஊரை உதறி எறிந்துவிட்டு சேந்தாங்குளக் கடற்கரையில தமிழ்ச் சினிமா போல கதைபேசவேணும்.

எவ்வளவு பேசியும் தம்பையர் சைக்கிளை எடுத்துக்கொண்டு கவனமாகப் போகச் சொல்கிறார்.

கந்தவன மாஸ்ரர் தம்பி பொறும் என்கிறார்.

சுரேஷ் வந்து இனிக்காணும் என்கிறான்.

நீ வந்து நீலாம்பரி பாடுகிறாய்.

தயவுசெய்து என்னை யாரும் வெறுக்க மாட்டார்களா?

என்னில் என்ன கிடக்கு என்று இவ்வளவு மரியாதையும் பண்பும்?

நான் செய்த அத்தனையுமே பிழைகள்; தவறுகள்.

சுசீலா நீயாவது என்னைத் தலைகூர்ந்து வெறுக்கமாட்டாயா?

(இனி)

---


இனி


சமூக அரசியல் மாத இதழ்.
விடுதலைக்குயில்களின் வெளியீடு.
தொடர்புகளுக்கு: 28அ இந்திய அரசு
குடியிருப்புக் காலனி, ஆழ்வார்த்திருநகர்,
சென்னை 87


அடுத்த இதழ்
சிறுவர் சிறப்பிதழ்

விரைவில்
ஸ்தவாங்கர் சிறப்பிதழ்

---

www.tamilarangam.net




# முத்தமிழ் விழா - ஒரு பார்வை

● யோகி

சுவடுகள் 60வது பிரதி வருகையையொட்டி (ஆறாண்டு நிறைவு) நிகழ்ச்சிகளின் என் பார்வையை எழுதமுன் - நிகழ்ச்சித் தொகுப்பாளர் பற்றி ஒரு சில வார்த்தைகள்: "தமிழ் சிவனிடமிருந்து தோன்றியது. அகஸ்தியர் சிவனிடமிருந்தே தமிழ் கற்றார்" என்ற பாமரத் தனமான கட்டுக் கதைகளுடன் நிகழ்ச்சிகளை ஆரம்பித்த தொகுப்பாளர் இமயமலை அடிவாரத்தில் தமிழ் கற்றவர் போலும். தெரியாத விடயங்களை விட்டுவிடுவது மிகவும் நல்லது. சுவடுகள் நிகழ்த்தும் விழாக்களில் பொய்யான தமிழ் வரலாற்றுக் கட்டுக்கதைகளைக் கேட்க நேர்ந்தது மிகவும் துர்ப்பாக்கியமே. தமிழர் மத்தியில் இருக்கும் அறியாமையைச் சுவடுகள் அகற்ற வேண்டும்; இன்னும் அதிகரிக்கத் தங்கள் விழாக்களைப் பயன்படுத்தக் கூடாது.

சுவடுகள் தோற்றம் - வளர்ச்சி - அவ்வளர்ச்சியின் போது அது எதிர்கொண்ட நேர் - எதிர் விமர்சனங்கள் - இவ்வாறான விழாக்கள் மூலம் வாசகர்களைச் சந்திப்பதால் ஏற்படும் பலன் என்பதைக் கூறி விழாவை ஆரம்பித்திருக்கலாம். தெரியாத தமிழ் வரலாற்றை எடுத்து ஏன் தொகுப்பாளர் அவஸ்தைப் பட்டார் என்று புரியவில்லை. என் சிறிய அறிவுக்கெட்டியவரை திராவிட மொழிகளின் ஆரம்ப அடையாளங்கள் அல்பிறட் மார்ஷலின் (Alfred Maarshal) தலைமையில் நிகழ்த்தப்பட்ட சிந்துவெளி அகழ்வுகளில் முதலில் வெளியாகின (Hindu civilization, by Alfred Marshal). தமிழ் மொழியின் (திராவிட மொழிகளின்) ஆரம்ப அடையாளங்களைக்

www.tamilarangam.net

காட்டும் சிந்துவெளி அகழ்வு நகரங்கள் - மொஹஞ்சதாரோ, ஹரப்பா (கி.மு.2500 - 3000) எனப் பெயரிடப் பட்டுள்ளன. வொல்கா (ரஷ்யா) நதிக் கரையிலிருந்து தெற்கு நோக்கி இடம் பெயர்ந்த நாடோடி ஆரியர்கள் சிந்துவெளியில் நாகரிகமாக நிலைகொண்டு வாழ்ந்த திராவிடர்களுடன் பொருதி வென்றபோது, ஆரியர்களின் வழிபாட்டு முறைகளும், திராவிட வழிபாட்டு முறைகளுள் கலந்து (சிந்துவெளியில் சூரியன், பாம்பு, மரம் போன்றவற்றை வணங்கியதாக அகழ்வு ஆய்வுகள் கூறுகின்றன) வழிபாட்டுத் தொகுப்பு முறை ஒன்று உருவாகியது. ஆரியர்கள் தாய்வழிச் சமூகத்தைச் சார்ந்தவர்கள். தாயே அந்த நாடோடிச் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினாள். தனது கணவன் இறக்கும்போது, அவள் தனது மூத்த மகனையே (அதிகாரத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக) மணந்தாள். இவ்வாறான பொருத்தமற்ற மணமுறைகள் நாகரிகத்தில் சிறந்து வாழ்ந்த திராவிடக் கலப்பினால் ஆரியர் மத்தியில் இருந்து மறைந்துபோனது. பின் வந்த ஆரிய அரசர்கள் பிராமணர்களின் கற்பனையான கட்டுக் கதைகளுடன் (உபநிடதங்கள்) மதம் - இன்றைய இந்து மதமாகத் தோற்றம் பெற்றது. (வோல்காவிலிருந்து கங்கை வரை - பேராசிரியர். ராகுல சங்கிருத்தியாயன்)

தொகுப்பாளர் கூறுவது போல, (கற்பனை) சிவனும், இந்து மதமும், தமிழும் காலத்தைக் கடக்கவில்லை. காலக் கணிப்பிற்கு உட்பட்டவையே. அண்ட வெளிகளைக் கடந்து எங்கும் நிறைந்த சிவனும், பிராமணக் கற்பனைகளில் விளைந்த இந்து மதமும் ஆரிய, திராவிட மனிதர்களாலேயே தோற்றம் பெற்றது.

முதலாவது நிகழ்வு "சிறைக் கதவுகள்" நாடகம். தமிழ்த் தாயின் மைந்தர்கள் மரணத்திற்கு அப்பாலும் வாழ்வார்கள் - தமிழர்களின் வாழ்வைச் சிறைக் கதவுகளினால் மூடி அழித்துவிட முடியாது என்பதை - 1983இல் சிறைக்கதவுகளின் பின் எம் மண்ணுக்காக மரணித்த போராளிகளின் நினைவை உள்வாங்கிக் காட்சியளிக்கிறார்கள்.

போராளியும் தமிழ்த் தாயும் பாத்திரத்தின் தன்மை உணர்ந்து நடித்தார்கள். இரு அப்பாவி ரௌடிகள் போராளியை அடிப்பதாகக் காட்டி "நாட்டில் நிலைமை அவ்வளவு மோசமில்லை" என்ற தவறான எண்ணத்தை உருவாக்கி விட்டார்கள். போராளியின் பலமான குரலின் அவலத்துடன், சபையோர் எதையோ பெரிதாக எதிர்பார்க்க, மென்மையான ரௌடிகள் மேடையில் தோன்றுகிறார்கள். சபையின் (குறிப்பாக முன்வரிசையில்) சிரிப்படங்கச் சில நிமிடங்களாயின. பாத்திர நுழைவும் அசைவும் சபையோர் மீது உருவாக்கும் உணர்வுகளைப் பற்றி இவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லைப் போலும்.

நாடக முடிவு வீடியோவில் பார்த்தபோதுதான் தெளிவாகியது. நாடகம் தொடரும் என்றே எதிர்பார்க்க, முடித்து விட்டார்கள். இசையின் மேலாதிக்கத்தால் பாடலும், பாத்திரங்களின் வார்த்தைகளும் அமுங்கி விடுவதைப் பற்றிக் கலைஞர்கள் சிரத்தைப் படவில்லை.

இன்னொரு தேசம் - இன்னொரு கனவு - கவியரங்கு. கவித்துவமான தலைப்பு. நாட்டில் நடக்கக் கூடிய கவியரங்கத் தரத்தை எட்டிடக் கவிதைகள் திணறின. கவிதைகளில் வார்த்தைகள் நயம்படக் கோர்க்கப் படவில்லை. சில சமயம் வசனநடையைக் கவிதை போல் வாசிக்க முயன்றார்கள். மோசம் என்று சொல்லுந் தரமன்று. போதிய சிரத்தையின்மை - தலைப்பிற்குக் கவியாக்கல் - அங்குள்ள சிக்கலான வாழ்விலிருந்து உணர்வு ரீதியாக விடுபட்டுப் போனமை - இங்குள்ள வாழ்வுகளில் முழுமையாக ஒன்றாமை - கவிதைகளில் தரம் இன்னும்

www.tamilarangam.net

உயராமல் போனமைக்குக் காரணிகளாகலாம். சபையோர் முன்னிலையில் கவிதைகள் மிக எளிமைப் படுத்தப்பட வேண்டும் என்பதுகூடக் கவிதைகளைத் தரம் குன்றச் செய்திருக்கலாம். புலம்பெயர்ந்த கவிஞர்களுக்கும் கலைஞர்களுக்கும் பொதுவான நோய் ஒன்றுண்டு. அதற்குக் கவியரங்கத்தில் கவிதை யாத்த கவிஞர்களும் தப்பவில்லை. "இன்னொரு தேசம் பற்றிய இன்னொரு கனவு" வரின் அது கெட்ட கனவாகத்தான் வரவேண்டும் என அடம் பிடித்தல். நல்ல கனவு தமிழ்த் தாயகம் பற்றியதே என எங்கு கற்றார்கள்?

என்னருமைத் தேசம் இழந்தவன் எனக்கு
இன்னொரு தேசம் இன்னொரு கனவா
இன்னொரு கனவு வேண்டவே வேண்டாம்
– தமயந்தி –

இது எனது தேசமல்ல
என் கனவு இதுவுமல்ல
– திலீபன் –

இவ்வகை யதார்த்த மறுப்பான கவிதை வரிகள் இந்தத் தேசம் பற்றிய இன்னொரு கனவு இங்குள்ள யதார்த்த நிலைகளால் எவ்வாறு பாதிப்படைகிறது என்பதைப் பாடும் யதார்த்த நிலைகளிலிருந்து கவிஞர்கள் ஒளிந்து கொள்வதையே காட்டுகிறது. வெறும் செய்திகளாக வந்து கவிதை உணர்வுகளை உந்தும் தாயகக் கனவுகள் போல் – எம் வாழ்வின் நாட்களைத் தின்னும் இந்தத் தேசம் பற்றிய யதார்த்தமான கனவுகளைக் காண முடியாதோ? "தாயகக் கனவு மட்டும்தான் அறிவுத் தனமானது" எனும் நாகரிகப் போக்கு பலவீனப் படும்போது – கவிஞர்களுக்கு இந்தத் தேசத்திலும் யதார்த்த நிலைகளில் நல்ல கனவுகள் தோன்றக்கூடும்.

60வது இதழ் அறிமுகம். மைத்திரேயி கொடுக்கப்பட்ட குறுகிய நேரத்தில் சஞ்சிகை அறிமுகத்தினை ஓரளவு விரிந்த பரப்பில் குறிப்புகளாகச் சொல்ல முயன்றார். சிறந்த நோக்கமின்மையால் புற்றீசல்கள் போல் ஆரம்பத்தில் தோன்றிய எண்ணற்ற ஐரோப்பிய சிறுசஞ்சிகைகளின் தோல்வி – நாலாந்தரத் தமிழகச் சஞ்சிகைகள் – இந்தத் தேசத்தின் இலக்கிய கலை கலாசார அம்சங்களைச் சுவடுகள் கூடுதலாக வெளியிடல் – தமிழ் பௌத்தம் தொடர்பான பல்கலைக்கழக ஆய்வுகள் போன்ற பல விடயங்களை மேலாகத் தொட்டுச் சென்றார். சஞ்சிகை அறிமுகப் படுத்தலுக்குரிய குறுகிய நேரம் காரணமாக உள்ளடக்கத்தினை அவரால் சற்று விரிவாக அறிமுகப் படுத்த முடியாது போயிற்று.

சஞ்சிகை வெளியீட்டுடன் தொடர்ந்தது "முகவரி தேடியே" நாடகம். தனது நிஜமான முகத்தினை அறியமுடியாது இரு வேறான கலாச்சார முரண்பாடுகளில் சிக்கித் தவிக்கும் ஒரு இளம் பெண்ணை

## வாருங்கள் விவாதிக்க...

ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை குடும்பம் முதல் சமூகக் கட்டுமானத்தின் பல படிகளிலும் ஜனநாயக மறுப்பு ஏதோ ஒருவிதத்தில் நிறுவன மயப்பட்டுள்ளது என்றும், இதுவே பின்னால் ஈழப் போராட்டம் தீவிரப்பட்ட போது இயக்கங்களால் மேற்கொள்ளப்பட்ட ஜனநாயக விரோதப் போக்கிற்குக் காரணம் என்றும் பலரும் கருத்து முன்வைக்கின்றனர். இந்தக் கருத்துப் போக்கைப் பற்றிய உங்கள் கருத்துகளையும் சேர்த்து விவாதிக்கலாம். உங்கள் கருத்துகளை எழுதுங்கள்.

– சுவடுகள் –

www.tamilarangam.net

மையமாகக் கொண்டு நாடகமாக்க முயன்றார்கள். இதனை நாடகம் என்பதை விட வசனத்திலும், வசனகவியிலும் அமைந்த விவரணக் காட்சி (Documental scenes of poetic prose & prose) என்பதே பொருத்தும். நாடகாசிரியர் தனது சக்திக்கு மீறிய கலாச்சார எல்லைகளின் முரண்பாடுகளைப் பாத்திரங்கள் ஊடாக முழுமைப் படுத்தாத ரணம் - தோல்வி நாடகத்தில் எங்குமே தெளிவாகத் தெரிந்தது. பாத்திரத் தன்மை காட்சிகளுடே வளர்ச்சி அடைந்து தமது எல்லைகளை நிர்ணயம் செய்யாததால் தான்தோன்றித் தனமாகப் பாத்திரங்கள் சபையோரிடம் தொடர்பு கொண்டு, தமது பிரச்சினைகளை விளக்க முயன்றது பரிதாபமாக இருந்தது.

பல காட்சிகளில் பாத்திரங்கள் தமக்கிடையேயான தொடர்பு துண்டிக்கப்பட்டுத் தனியே தவித்தன. கட்டியக்காரன் (ஆண்) தனது அதிமிகை நடிப்பினால் பாத்திரங்களின் சமநிலையில் இடைவெளியை உண்டுபண்ண, மற்றைய பாத்திரங்கள் கீழ்ஸ்தாயியில் மென்மையாக வசன ஒப்புவிப்பில் ஈடுபட்டன. சில சமயங்களில் எல்லாப் பாத்திரங்களுமே கட்டியக்காரர் (narrator) தானோ எனும் எண்ணம் மேலிட்டது. நாடகப் பிரதியின் பலவீனம் நாடக நெறிப் படுத்தலைப் பலமாக மட்டுப் படுத்துகிறது. வீச்சான பாத்திரங்களுடாகச் சொல்லப்பட வேண்டிய பலமான மிகச் சிக்கலான கதையது. பலவீனமாக உருவாக்கப் பட்டிருந்தது. எண்ணற்ற பாடல்களும் இசையின் தான்தோன்றித் தனமும் நாடகம் பார்ப்பவர்களை மிகவும் தொல்லைப் படுத்தின. பாத்திரத் தன்மை, அதன் வீச்சுகளை அறிய ஒவ்வொரு சொல்லும் சபையின் கடைசி வரிசையிலும் தெளிவாக விளங்கவேண்டும்.

பரிசளிப்பின் பின் தாவீதும் கோலியாத்தும் - தென்மோடி இசைகளில் அமைந்த நாட்டுக் கூத்து. கூத்தின் பெரும்பாலான பாடல்கள் விளங்காவிடினும், மிக நீண்ட நாட்களுக்குப் பின் எமது பாரம்பரியக் கூத்தினைப் பார்க்கும் திருப்தி ஏற்படவே செய்தது.

அன்று நடந்த நிகழ்வுகளில் "ஒரு கை கொடு" நாடகம் சிறந்ததாகப் பட்டது. சிக்கலான கருவை, சிக்கலற்ற முறையில் நாடகமாக்கினார்கள். பாத்திரத் தன்மைகளின் நிதானமான நிர்ணயமும், வளர்ச்சியும் நேர்த்தியாக அமைந்திருந்தது. காட்சிப் படுத்தலும் நாடகமாக்கலும் பாத்திரத் தரத்தினை உயர்த்தின. மேடை உபயோகம் சிறந்ததாக இருந்தது. முடமாகிப் போன சமாதானத்தாரின் கையாலாகாத வெளிப்பாட்டினை அப்பாத்திரத்தினை ஏற்று நடித்த நவாஸ்சும், "சமாதானத்தார் எழவேண்டும் ஒரு கைகொடுங்கோ" என்ற போராளி இளைஞர் நகுலனின் காத்திரமான பாத்திர வெளிப்பாட்டுடன் ஈழப் போராட்டத்தில் காணக்கூடிய சிக்கலான நிலையினை மேடையில் நிலைகொள்ளச் செய்தது. சுயவாழ்வு செழிக்க பொதுவாழ்வை விலைகூறுபவர்கள் தரிசிக்க விரும்பாத அழகற்ற சுயத்தை நாடகம் காட்சியாக முன்நிறுத்தியது.


CALT

Culture Art Literature in Tamil

தமிழ் இலக்கிய வெளிப்பாடுகளைப் பிறமொழி ஆர்வலர்களுக்கு அறியச் செய்யும் முயற்சி. ஏப்ரலில் வெளிவருகிறது. சிற்றிதழ்களில் வெளியான தரமான படைப்புகளை வேண்டி நிற்கிறது.

தொடர்புகள்: பொன்விஜயன், 50 வன்னியர் தெரு, சென்னை 94, தமிழ்நாடு, இந்தியா.

www.tamilarangam.net

நன்றி உரையைத் தொடர்ந்து - தேசம் பிரிந்த ராகங்கள் - தேசம் பிரிந்த எம்மைப் பாடப்பட்ட ராகங்கள் தேசத்துடன் இணைக்க முயன்றன. நிகழ்த்தியவர்கள் குட்டி மாஸ்ரரின் "த றூட்ஸ்" குழுவினர். குறைந்த பாடல்களே எனினும் நிறைவைத் தந்த பாடல்கள். சங்கீத பூஷணம் சுபாஷ்சந்திரனின் குரலில்

"சதிராடும் பொன்மானே"
"ஓடிவரும் கடலே
ஒற்றைப் பனை மரமே"

போன்ற கவித்துவமான இனிய பாடல்கள் நெஞ்சங்களை நிறைத்தன. மனிதரின் இனிமையான குரல் அற்புதமான அசைவுகளைப் பாடல்களின் சொற்களுக்குள் ஆயாசமாக உட்புகுத்திப் பாடல்களை ஓர் உயர்ந்த தரத்திற்கு இட்டுச் சென்றது. "சம்மதமா சொல்லித்தரவா" (ஈழத் திரைப்படப் பாடல்) பாடகியின் செல்லக் குரலுடன் ஆண்குரலும் ஒழுங்காக ஒன்றுசேர அழகான இசைக் கோர்வையாகச் செவிகளில் இனித்தது. பாடலில் சிறு தடுமாற்றங்கள் (குரலில்) தென்பட்டாலும் பாடலின் இனிமையை அது பெரிதாகப் பாதித்துவிடவில்லை. குட்டி மாஸ்ரரைத் தமிழகத் திரைப்படப் பாடல்களை விட ஈழப் பாடல்களே கூடுதலாக அடையாளம் காட்டுகின்றன. தேசம் பிரிந்த ராகங்களில் இசைத்த குறைந்த பாடல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வளங்கள் மிக அதிகம்தான்.

"நாம் 60வது சஞ்சிகையை வெளியிட்டு ஆறாவது ஆண்டை நிறைவு செய்துவிட்டோம்" என்ற திருப்தியை மட்டுமே சுவடுகளுக்கு ஓரளவு கொடுத்திருக்கக் கூடிய முத்தமிழ் விழா.

## குதிரை வீரன் பயணம்

*1994இல் தொடங்கிய சிற்றிதழ்களில் 'சிற்றிதழ் செய்தி ஆய்வு இதழி'ன் பாராட்டும் பரிசும் பெறும் சிற்றிதழ்களில் ஒன்று. தொடர்புகள்: யூமா வாஸுகி, 229 கைலாசநாதபுரம், வளவன்புரம், பட்டுக்கோட்டை, தஞ்சை மாவட்டம் 614 601, தமிழ்நாடு, இந்தியா.*

## சிற்றிதழ் செய்தி ஆய்வு இதழ்

*சிற்றிதழ்களின் தொடர்புகளை முதன்மைப் படுத்தி வெளிவரும் ஒரேயொரு மாத இதழ். தொடர்புகளுக்கு: பொள்ளாச்சி நசன், சம்பத் நகர், குளேஸ்வரன் பட்டி, பொள்ளாச்சி 642006, தமிழ்நாடு, இந்தியா.*

## வினை அறுத்தல்

ஐந்து மைலுக்கப்பாலுள்ளவரை
அறியார் சுடுவர்
(உழுவதால் உழவர்
நடிப்பதால் நடிகர்
சுடுவதால் சுடுவர்)
ஆதலால் அவருக்கு அது இலகு

ஆயினும் தூர இடைவெளி ஒன்றும்
துப்பாக்கியின் இலகு அழுத்து விசைக்கு
நேர்விகித சமனல்ல

ஊரும் அயலூரும் அயல்நாடும்
ஆரும் அவருக்கு அடுத்தவராதலினால்
கண்மிற் பணிமின் கனிந்து.

**சுகன்**

www.tamilarangam.net

# கலாச்சாரம் என்ருல் என்ன?

## - ஒரு சிநேகபூர்வக் கலந்துரையாடல் -

நாம் அகதிகளாக மேற்குநாடுகளுக்குப் புலம்பெயர்ந்த பின்னர், கலாச்சாரம் பண்பாடுபோன்ற பதங்கள் அளவுக்கதிகமாகவே எம்மை மிரட்டிக்கொண்டு வருகின்றன.

'பெண்பிள்ளைகளா! ஐயய்யோ! அஞ்சுவயசுக்கு மேல இந்த நாடுகளில வளக்கவே கூடாது. ஸிலோனுக்கோ அல்லாட்டி இந்தியாவுக்கோ அனுப்பி எங்கட கலாச்சாரத்திலதான் வளக்கவேணும்' போன்ற அவலக்குரல்கள், புலம்பெயர் வாழ்வு ஒருதசாப்தத்தைத்தாண்டிய நிலையிலும் உரத்து ஒலிக்கவே செய்கிறது.

இன்னும் சிலரோ, எங்கள் எதிர்காலச்சந்ததிக்காக, மேலைத்தேய கீழைத்தேய கலாச்சாரங்களைக்குழைத்து ஒரு புதிய கலாச்சாரத்தை உருவாக்கவேண்டும் என்கின்றனர்.

ஆனுல், கலாச்சாரம் என்றால் என்ன? பண்பாடு என்றால் என்ன? என்ற கேள்விகள் எழும்போது சரியான விடை தெரியாது தத்தளிக்கின்றோம். சேலைகட்டி, பொட்டு வைத்தல் தான் தமிழர் கலாச்சாரம் என்னும் அளவிலேயே கலாச்சாரம் பற்றிய அறிவு எம்மில் பலரிடையியே காணப்படுகிறது.

புலம்பெயர்ந்த நாடுகளில் கலாச்சாரக்காப்பிற்காக சங்கங்களும், அமைப்புக்களும் உருவாகிவரும் இவ்வேளையில், கலாச்சாரம் என்றால் என்ன? தமிழர் கலாச்சாரம் எது? ஐரோப்பியக் கலாச்சாரம் என்றால் என்ன? கலாச்சாரங்கள் காப்பாற்றப்படவேண்டிய அவசியம் என்ன? போன்ற அறிவுரீதியான அலசல்களும் அவசியமானவை -பயனுள்ளவை என்றே கருதுகின்றோம்.

இதன்பொருட்டு, எமது மகாஜன பழையமாணவர் சங்கம், இவ்வாறான ஒரு கலந்துரையாடலை ஒழுங்குசெய்கிறது.

தேடல் தொடர்பான ஆர்வம் கொண்டோர் அனைவரும் வருக !

கற்றவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நல்லெண்ணமும் பேரார்வமும் கொண்டோர் அவசியம் கலந்து கொள்க -நிகழ்வு சிறப்புற.

**காலம் : 26. 2. 1995 ஞாயிறு பி.பகல் 3.00 மணி**

**இடம் : 13, Place Etienne Pernet, 75015 Paris**

**Métro : Felix Faure (Direction N°:8)**

மேலதிக விபரங்கள் தொடர்புகளுக்கு : A.A.E.C.M.P
137, Rue du Menilmontant, 75020 Paris.

**மகாஜன பழையமாணவர் சங்கம்**
**பாரிஸ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்